



தமிழாக்கம்

**த. அழகப்பன்**

மேனாள் உறுப்பினர், இளைஞர் நீதிக்குழுமம்

சென்னை - 600 010

**Child Line No : 1098 | SCPS Landline No : 044 - 2642 1358**

# இளைஞர் நீதி
# (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு)
# சட்டம், 2015

(சட்டம் 2/2016)

**திருமான நடைமுறைச் செயலாக்க**
**நாள் : 15.01.2016**




## THE JUVENILE JUSTICE
## (CARE AND PROTECTION OF CHILDREN) ACT, 2015
## Bare Act (சட்டம் மட்டும்)

வெளியீடு

மாநில குழந்தை பாதுகாப்பு சங்கம்,

சமூகப்பாதுகாப்புத் துறை

சென்னை - 600 010.

# இளைஞர் நீதி
# குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்டம், 2015

**(சட்டம் 2/2016)**

**திரமான நடைமுறைச் செயலாக்க**
**நாள் : 15.01.2016**

## THE JUVENILE JUSTICE (CARE AND PROTECTION OF CHILDREN) ACT, 2015
**Bare Act (சட்டம் மட்டும்)**

**தமிழாக்கம்**

**த. அழகப்பன்**
மேனாள் உறுப்பினர்,
இளைஞர் நீதிக்குழுமம்
சென்னை.

வெளியீடு
மாநில குழந்தை பாதுகாப்பு சங்கம்,
சமூகப்பாதுகாப்புத் துறை
சென்னை - 600 010.

Published by : **THE SECRETARY**
State Child Protection Society (SCPS)
Directorate of Social Defence
#300, Purasawakkam High Road,
Kellys, Chennai - 600 010.
Ph : 044 - 2642 7022

Year : **2019**

Email : scpstn4@gmail.com

Wedsite :

Printed at : **Evershine Multipurpose Co-Operative Society Ltd.,**
Computer Division

Type Setting at : **Durga Graphics**
New No. 5, Vallalar 2nd Cross Street,
Choolaimedu, Chennai 600 094.
Phone : 044 - 23611165

Email : durgagraphics2012@gmail.com

# FOREWORD

S. BOOTHANATHAN
DISTRICT JUDGE (Retd.,)

CHENNAI-40
21-02-2018

The J.J. Act 2015 has been translated in Tamil by Thiru T. Alagappan, Former Member of Juvenile Justice Board in which I had the privelege of serving as the Principal Magistrate. My tenure was glorious and replete with passionate service to the children in conflict with Law of the said Act.

The translated version in Tamil by him is contributive and it will be of great use for the Courts, Govt. Departments, litigants as well as general public.

I wish him all success

S. BOOTHANATHAN

# முன்னுரை

**இந்தியாவிலேயே குழந்தைகள் நலச்சட்டம்**
**முதன் முதலாக தமிழகத்தில் 1920ம் ஆண்டு இயற்றப்பட்டது**
**(Madras Children's Act, 1920)**

குழந்தைகள் வளர்ச்சிக்கான சட்டம், கொள்கை மற்றும் அவற்றின் நடைமுறையானது குறிப்பிடத்தக்க, அற்புதமான, வியக்கத்தக்க அறிவியல் மாற்றம் மற்றும் காலமாற்றத்தை சமாளிக்கக் கூடிய, குழந்தைகளின் வளர்ச்சித் தேவைகள் மற்றும் சமூக சூழலை அடிப்படையாக கொண்டுள்ளது.

இளைஞர் (சிறார்) நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015 குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் ஒரு வலுவான சட்ட கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. மேலும் சட்டத்திற்கு முரண்பட்டு தவறிழைக்கும் குழந்தைகள் அல்லது பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளுக்கு அவர்களின் தேவைகளை சிறந்த பற்றுதலுடன் / ஆர்வத்துடன் நிறைவேற்ற செய்கிறது.

இளைஞர் (சிறார்) நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 ஒரு விரிவான முற்போக்கான சமூக மற்றும் தொழில் நுட்பத்துடன் கூடிய பன்னாட்டு சாசனங்களை மையமாக / அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது.

16 வயது முதல் 18 வயதுடைய சட்டத்திற்கு முரணாக தவறிழைக்கும் சிறார்களைத் திறம்படக் கையாளும் வகையில் இயற்றப்பட்ட சட்டமாக அமைந்துள்ளது என்பது தெளிவாகிறது.

இச்சட்டம் தத்தெடுப்பு நடைமுறைகளில் தத்தெடுப்பிற்கான தாமதமாக முடிவெடுத்தலை தவிர்ப்பதற்காகவும் ஏற்றதொரு முடிவினை எட்டும் வகையில் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சட்டம் குழந்தைகளுக்கு நல்ல/ஏற்றதொரு சூழலையும் சுதந்திரமான, நியாயமான, சமத்துவமான, நடுநிலை பிறழாத விசாரணையை

உறுதிப்படுத்துகிறது. மதராஸ் / தமிழ்நாடு / குழந்தை நலச்சட்டத்தின் (ஆண்டு 1920) முன்னோடி மாநிலமாக, தமிழ்நாடு திகழ்கிறது.

தமிழகத்தில் முதன் முதலாக சென்னை எழும்பூரில் 1939–ஆம் ஆண்டில் இளைஞர் (சிறார்) நீதிமன்றம் தோற்றுவிக்கப்பட்டது.

தமிழகத்தில் 1947–ஆம் ஆண்டில் குழந்தை நலச்சட்டத்தை திறம்பட செயல்படும் வகையில், தனி அரசுத்துறை உருவாக்கப்பட்டது.

இளைஞர் (சிறார்) நீதிச்சட்டம், 2015, பிரிவு 108 பொதுமக்களுக்கு / பொது விழிப்புணர்வு ஏற்படுத்துதல் பற்றி கூறுகிறது. எனவே, மாநில குழந்தைகள் சங்கம், சமூக பாதுகாப்புத் துறை இச்சட்டத்தை இளைஞர் நீதி (மன்ற) நிர்வாகத்தில் உள்ள வெவ்வேறு துறை / அமைப்பு மற்றும் பற்றாளர்கள் திறம்பட பயன்படுத்தும் வகையில் வழங்க எண்ணம் கொண்டுள்ளது.

இச்சட்டத்தினை வட்டார மொழிக்கு / தமிழகத்திற்கு ஏற்ப தரமாக மொழி பெயர்த்து – சமூக பாதுகாப்புத் துறை மற்றும் தகுதிறம் கொண்ட அதிகார அமைப்பினர் (இளைஞர் நீதி குழுமம் மற்றும் குழந்தைகள் நலக்குழு) பயன்படுத்தும் வகையில் சொற்களைக் கொண்டுள்ளது.

இச்சொற்கள் (தமிழ் பதிப்பு) எளிமையாக புரிந்து கொள்ளும் வகையிலும் ஐயத்திற்கு இடமின்றியும் அமைந்துள்ளது. புற உதவியின்றி பொருள் உணர மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

தமிழாக்கம் செய்யப்பட்ட இந்த நூல், அனைத்து சார்பு நிறுவனங்களின் தேவைகளையும் சீரான முறையில் நிறைவேற்ற பெரிதும் உதவும் என உறுதியாக நம்புகிறோம்.

திரு. R.லால்வேனா, இ.ஆ.ப.
ஆணையர்,
சமூகப்பாதுகாப்புத்துறை,
சென்னை - 600 010.

# அறிவிப்பு மற்றும் பொறுப்புத் துறப்பு

இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 - இச்சட்டம் பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் பொருட்டு, சேவை மனப்பான்மையுடன் வெளியிடப்படுகிறது; இதில் வணிக நோக்கமோ, இலாப நோக்கமோ இல்லை.

இதனை வெளியிடுவதில், உரிய எல்லா கவனமும் சீரிய முறையில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதில் எழுத்துப்பிழை, அச்சுப்பிழை அல்லது விடுபடுதல் எதுவும் இருப்பின் அதனால் ஏற்படும் எவ்வித இழப்பிற்கும் (Damage) நூலாசிரியர், பதிப்பாளர் மற்றும் அச்சகத்தார் பொறுப்பாக மாட்டார்கள்.

இந்நூல் தொடர்பான அனைத்து பூசல்களும் (disputes) சென்னை நீதிமன்றங்களின் அதிகார வரம்பெல்லைக்கு உட்பட்டனவாகும்.

Although every care has been taken in the publication of the book (both Bare Act & Tamil Translation), the authors, the publishers, the distributors and the printers shall not be responsible for any loss or damage caused to any person on account of errors or omission which might have inadvertantly crept in they shall not be liable for any direct, consequential, or incidential damages arising out of the use of this book.

It is suggested that to avoid any doubt, the reader should cross check all the facts, law and contents of the Publication with the original central Government Publication or gazette notification, etc, No part of this may be reproduced or copied in any form without the Prior written permission of the concerned authorities.

All disputes are subject to Jurisdiction of courts in Chennai only.

## இளைஞர் நீதி
## (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015
## பொருளடக்கம்


| இயல் எண் | தலைப்பு | சட்டப் பிரிவு எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|---|---|
| 1 | தொடக்கம் | 1 | குறுந்தலைப்பு, அளாவுகை (பரப்பெல்லை) தொடக்கம் மற்றும் பொருந்துகை | 4 |
| | | 2 | சொற்பொருள் வரையறைகள் | 5 |
| 2 | குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு பொதுக் கொள்கைகள் | 3 | இச்சட்டத்தை நிறைவேற்றப் பின்பற்ற வேண்டிய பொதுக் கொள்கைகள் | 14 |
| 3 | இளைஞர் நீதிக் குழுமம் | 4 | இளைஞர் நீதிக்குழுமம் | 17 |
| | | 5 | வழக்கு விசாரணை நடைபெறும் காலத்தில், குழந்தை வயது நிலையைக் கடந்தவர்கள் வைக்கப்படும் முறை | 18 |
| | | 6 | பதினெட்டு வயதிற்கு கீழாக உள்ளவர்கள், அக்காலத்தில் குற்றம் ஒன்றைப் புரிந்தவர்களின் நிலை | 19 |
| | | 7 | குழுமம் தொடர்பான அத்தகைய நடைமுறை | 19 |
| | | 8 | குழுமத்தின் அதிகாரங்கள் அலுவல்கள் மற்றும் பொறுப்புடைவுகள் | 20 |
| | | 9 | இந்த சட்டத்தின் கீழாக அதிகாரம் பெறப்படாத ஒரு குற்றவியல் நடுவரால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை | 22 |
| 4 | சட்டத்திற்கு முரணான குழந்தைகள் தொடர்பான நடைமுறை | 10 | இச்சட்டத்திற்கு முரணானவர் என சாட்டுரைக்கப்பட்ட குழந்தைகளைக் கைப்பற்றுதல் | 22 |
| | | 11 | எவர் ஒருவருடைய பொறுப்பில் சட்டத்திற்கு முரணான குழந்தை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளாரோ அந்த நபரின் பங்கு | 24 |
| | | 12 | இச்சட்டத்திற்கு முரணானவராக சாட்டப்பட்டவர், ஒரு குழந்தை என வெளிப்படையாகத் தோன்றும் அந்த நபருக்குப் பிணை வழங்குதல் | 24 |

| இயல் எண் | தலைப்பு | சட்டப் பிரிவு எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|---|---|
| | | 13 | பெற்றோர், காப்பாளர் (அ) நன்னடத்தை அலுவலர் ஆகியோருக்குத் தகவல் அளித்தல் | 25 |
| | | 14 | சட்டத்திற்கு முரணான குழந்தை தொடர்பாக, குழுமத்தில் மேற்கொள்ளப்படும் உசாவுகை (விசாரணை) | 26 |
| | | 15 | கொடுங்குற்றங்களில் குழுமத்தின் தொடக்க நிலை மதிப்பீடு | 27 |
| | | 16 | (வழக்கு) விசாரணை முடிவுறா நிலையில் மீளாய்வு | 28 |
| | | 17 | சட்டத்திற்கு முரணான குழந்தையாகக் கண்டறியப்படாத குழந்தை தொடர்பான ஆணைகள் | 29 |
| | | 18 | சட்டத்திற்கு முரணான குழந்தையாகக் கண்டறியப்பட்ட குழந்தை தொடர்பான ஆணைகள் | 29 |
| | | 19 | குழந்தைகள் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் | 31 |
| | | 20 | இருபத்தொரு ஆண்டுகள் அகவை நிறைவெய்திய போதும், அவர் பாதுகாப்பு அமைவிடத்தில் தங்க வைக்கப்பட குறித்துரைக்கப்பட்ட காலம் முடிவுறாதிருத்தல் | 32 |
| | | 21 | சட்டத்திற்கு முரணான ஒரு குழந்தைக்கு எதிரான எவ்வித ஆணையும் பிறப்பிக்கப்படக் கூடாது | 33 |
| | | 22 | குற்ற விசாரணை நடைமுறைச் சட்டத்தின் இயல் 8-இன் கீழ் செயல் நடைமுறை குழந்தைக்கு எதிராக எதற்கும் பொருந்தாது | 33 |

| இயல் எண் | தலைப்பு | சட்டப் பிரிவு எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|---|---|
| | | 23 | சட்டத்திற்கு முரணான குழந்தையின் வழக்கு குழந்தை நிலையாக இல்லாதவருடன் கூட்டிணை விசாரணை கூடாது | 34 |
| | | 24 | ஒரு குற்றத்தின் முடிவுகளின் பேரில் தகுதியிழப்பை நீக்குதல் | 34 |
| | | 25 | நிலுவையில் உள்ள வழக்குகள் தொடர்பான சிறப்பு வகையம் | 35 |
| | | 26 | தப்பியோடிய, சட்டத்திற்கு முரணான குழந்தையின் நேர்வில் வகையம் | 35 |
| 5 | குழந்தை நலக் குழு | 27 | குழந்தை நலக் குழு | 36 |
| | | 28 | குழு தொடர்பான நடைமுறை | 37 |
| | | 29 | குழுவின் அதிகாரங்கள் | 38 |
| | | 30 | குழுவின் செயற்பாடுகள் மற்றும் பொறுப்படைவுகள் | 39 |
| 6 | பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் தொடர்பான நடைமுறை | 31 | குழுவின் முன்பாக முன்னிலையாதல் | 41 |
| | | 32 | காப்பாளரிடமிருந்து பிரிவுற்றதாக கண்டறியப்பட்ட ஒரு குழந்தை குறித்து, நீதி சார்ந்த உரிமைக் கட்டளையாகக் கருதி முறைப்படி தெரியப்படுத்துதல் | 42 |
| | | 33 | தகவல் தெரிவிக்காமை குற்றமாகும் | 42 |
| | | 34 | தகவல் தெரிவிக்காமைக்கான தண்டனை | 42 |
| | | 35 | குழந்தைகளை சரண் செய்தல் | 43 |
| | | 36 | விசாரணை | 43 |
| | | 37 | பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் ஒரு குழந்தை தொடர்பாக பிறப்பிக்கப்படும் ஆணைகள் | 45 |

| இயல் எண் | தலைப்பு | சட்டப் பிரிவு எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|---|---|
| | | 38 | தத்தெடுப்பிற்கான ஒரு குழந்தை சட்டப்படியாக தடையில்லா நிலையில் உள்ளது என விளம்புதலுக்கான நடைமுறை | 46 |
| 7 | மறுவாழ்வு மற்றும் சமூக மறு ஒருங்கிணைப்பு | 39 | மறுவாழ்வு மற்றும் சமூக மறு ஒருங்கிணைப்பிற்கான நடைமுறை | 48 |
| | | 40 | பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தையின் முன்நிலைமீட்பு | 49 |
| | | 41 | குழந்தை பராமரிப்பு நிறுவனங்களை (முறையாகப்) பதிவு செய்தல் | 49 |
| | | 42 | குழந்தை பராமரிப்பு நிறுவனங்களைப் பதிவு செய்யாமைக்கான தண்டனை | 51 |
| | | 43 | திறந்தவெளிப் புகலிடம் | 52 |
| | | 44 | வளர்ப்பு பேணுகை | 52 |
| | | 45 | ஏற்பாதரவுத் திட்டம் | 54 |
| | | 46 | குழந்தை பராமரிப்பு நிறுவனத்திலிருந்து விடுவிக்கப்படும் குழந்தையின் பிற்காப்பு | 54 |
| | | 47 | கூர்நோக்கில்லங்கள் | 55 |
| | | 48 | சிறப்பு இல்லங்கள் | 55 |
| | | 49 | பாதுகாப்பு அமைவிடம் | 56 |
| | | 50 | குழந்தைகள் இல்லம் | 57 |
| | | 51 | தகுநிலை வசதியகம் | 57 |
| | | 52 | தக்கார் | 58 |
| | | 53 | இந்த சட்டத்தின் கீழாக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் மறுவாழ்வு மற்றும் மறு ஒருங்கிணைப்பு பணிகள் மற்றும் அதன் மேலாண்மை | 58 |

| இயல் எண் | தலைப்பு | சட்டப் பிரிவு எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|---|---|
| | | 54 | இச்சட்டத்தின் கீழாகப் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் ஆய்வு | 59 |
| | | 55 | உள் கட்டமைப்புகளின் செயற்பாட்டைக் கணித்து மதிப்பீடு செய்தல் | 60 |
| 8 | தத்தெடுத்தல் | 56 | தத்தெடுத்தல் | 60 |
| | | 57 | தத்தெடுக்க விரும்பும் பெற்றோரின் சட்டப்படியான தகுதி | 61 |
| | | 58 | தத்தெடுக்கும் பெற்றோர் இந்திய நாட்டவராக இருந்து இந்தியாவில் வாழும்போது, தத்தெடுப்பின் நடைமுறை | 61 |
| | | 59 | ஒரு தாய் தந்தையற்ற குழந்தை அல்லது கைவிடப்பட்ட அல்லது சரண் செய்யப்பட்ட குழந்தை குறித்த நாடுகளுக்கிடையேயான தத்தெடுத்தல் முறை | 62 |
| | | 60 | நாடுகளுக்கிடையேயான உறவினர் தத்தெடுத்தலுக்கான நடைமுறை | 65 |
| | | 61 | நீதிமன்ற நடைமுறையும், தத்தெடுத்தலுக்கு கைமாறாக நிதி அளித்தலுக்கு எதிரான தண்டனையும் | 65 |
| | | 62 | கூடுதலான நடைமுறைத் தேவைகள் மற்றும் ஆவணப்படுத்துதல் | 66 |
| | | 63 | தத்தெடுப்பின் விளைபயன் | 66 |
| | | 64 | தத்தெடுத்தலை முறையாகத் தெரியப்படுத்துதல் | 67 |
| | | 65 | தனிச்சிறப்பு தத்தெடுப்பு முகமைகள் | 67 |
| | | 66 | தத்தெடுப்பு முகமைகளாக பதிவு செய்யப்படாத நிறுவனங்களில், நிலையாகத் தங்கியுள்ள குழந்தைகளின் தத்தெடுப்பு | 68 |

| இயல் எண் | தலைப்பு | சட்டப் பிரிவு எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|---|---|
| | | 67 | மாநில தத்தெடுப்பு வள ஆதார முகமை | 69 |
| | | 68 | மத்திய தத்தெடுப்பு வள ஆதார அமைப்பு | 69 |
| | | 69 | அதிகார ஆயத்தின் செயலாட்சி விரைவுக் குழு | 70 |
| | | 70 | அதிகார ஆயத்தின் செயலாட்சி உரிமைகள் | 71 |
| | | 71 | அதிகார ஆயத்தின் ஆண்டறிக்கை | 72 |
| | | 72 | நடுவணரசின் பொருளுதவிகள் (மானியங்கள்) | 72 |
| | | 73 | அதிகார ஆயத்தின் கணக்குகள் மற்றும் தணிக்கை | 72 |
| 9 | குழந்தைக்கு எதிரான ஏனைய குற்றங்கள் | 74 | குழந்தையின் அடையாளம் காணுவதை வெளிப்படுத்துதலின் மீதான தடை | 73 |
| | | 75 | குழந்தையைக் கொடுமைப் படுத்துதலுக்கான தண்டனை | 74 |
| | | 76 | குழந்தையை இரத்தல் தொழிலில் வேலைக்கு அமர்த்துதல் | 75 |
| | | 77 | ஒரு குழந்தைக்கு வெறியூட்டும் மது அல்லது போதை மருந்து அல்லது உளமயக்கப் பொருளை அளித்ததற்கான தண்டனை | 76 |
| | | 78 | ஏதேனுமொரு போதையூட்டும் மது, போதை மருந்து அல்லது உளமயக்கப் பொருளை ஓரிடத்தில் விற்க, இடம் விட்டு இடமேகி விற்க, எடுத்துச் செல்ல, தருவித்து வழங்க அல்லது கடத்தலுக்காக ஒரு குழந்தையைப் பயன்படுத்துதல் | 76 |

| இயல் எண் | தலைப்பு | சட்டப் பிரிவு எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|---|---|
| | | 79 | ஒரு குழந்தைத் தொழிலாளரைச் சுரண்டலுக்கு உட்படுத்துதல் | 76 |
| | | 80 | தத்தெடுப்புக்கு வகுத்துரைக்கப்பட்ட நடைமுறையைக் கடைபிடிக்காதவர்களைத் தண்டிக்கும் நடவடிக்கை | 77 |
| | | 81 | ஏதேனும் ஒரு நோக்கத்திற்காக குழந்தைகளை விற்றல் மற்றும் முயன்று பெறுதல் | 77 |
| | | 82 | உடல் அளவிலான தண்டிப்பு | 78 |
| | | 83 | போராளிக் குழுக்கள் அல்லது ஏனைய வயது வந்தோர் குழந்தையைப் பயன்படுத்துதல் | 78 |
| | | 84 | குழந்தையைப் பலவந்தமாகத் தூக்கிச் செல்லுதலும், கடத்தலும் | 79 |
| | | 85 | மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் புரிதல் | 79 |
| | | 86 | குற்றங்களின் வகைப்பாடு மற்றும் அதற்கெனப் பெயர் குறிப்பிடப்பட்ட நீதிமன்றம் | 79 |
| | | 87 | குற்ற உடந்தை | 80 |
| | | 88 | மாற்றுத் தண்டனை | 80 |
| | | 89 | இந்த இயலின் கீழாக, குழந்தையால் செய்யப்பட்ட குற்றம் | 80 |
| | | 90 | குழந்தையின் பெற்றோர் அல்லது காப்பாளர் முன்னிலையான வருகை | 81 |
| | | 91 | குழந்தை முன்னிலை ஆவதற்கு விலக்களித்தல் | 81 |
| | | 92 | நீண்டகால மருத்துவ சிகிச்சை தேவையாகும் பிணியினால் துயருறும் ஒரு குழந்தையை தகுநிலை வசதியகத்தின் அனுப்புதல் | 81 |

| இயல் எண் | தலைப்பு | சட்டப் பிரிவு எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|---|---|
| | | 93 | உள நலம் குன்றிய அல்லது மது அல்லது பிற போதை மருந்துகளுக்கு அடிமை ஆன ஒரு குழந்தையை தகுநிலை வசதியகத்திற்கு இடமாற்றம் செய்தல் | 82 |
| | | 94 | வயது குறித்த ஊகமும், தீர்மானித்தலும் | 83 |
| | | 95 | ஒரு குழந்தையை, அவரது வசிப்பிடத்திற்கு மாற்றுதல் | 84 |
| | | 96 | இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள குழந்தைகள் இல்லங்கள் அல்லது சிறப்பு இல்லங்கள் அல்லது தகுநிலை வசதியகம் அல்லது தக்காருக்கிடையே குழந்தையை இடம் மாற்றுதல் | 85 |
| | | 97 | ஒரு நிறுவனத்திடமிருந்து குழந்தையை விடுவித்தல் | 86 |
| | | 98 | ஒரு நிறுவனத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஒரு குழந்தையின் வாராமை விடுப்புக்கான அனுமதி | 87 |
| | | 99 | அறிக்கைகள் இரகசியமாக வைத்துப் பேணப்பட வேண்டும் | 88 |
| | | 100 | நல்லெண்ண அடிப்படையில் எடுக்கப்பட்ட செயல் நடவடிக்கைக்குப் பாதுகாப்பு | 88 |
| | | 101 | மேல்முறையீடுகள் | 88 |
| | | 102 | சீராய்வு | 89 |
| | | 103 | விசாரணைகள், மேல்முறையீடுகள் மற்றும் சீராய்வு | 90 |
| | | 104 | குழு அல்லது குழுமம் அதன் முறைசெய்த ஆணைகளைத் தாமே திருத்தம் செய்வதற்கான அதிகாரம் | 90 |

| இயல் எண் | தலைப்பு | சட்டப் பிரிவு எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|---|---|
| | | 105 | இளைஞர் நீதி நிதியம் | 91 |
| | | 106 | மாநில குழந்தை பாதுகாப்பு சங்கம் மற்றும் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு | 91 |
| | | 107 | குழந்தை நலக் காவல் அலுவலர் மற்றும் இளைஞர் காவல் படைத் தனிப்பிரிவு | 92 |
| | | 108 | இச்சட்டத்தின் வகையங்கள் மீதான பொது விழிப்புணர்வு | 92 |
| | | 109 | சட்டத்தின் நிறைவேற்றுகையைக் கண்காணிப்பு செய்தல் | 93 |
| | | 110 | விதிகளை வகுப்பதற்கான அதிகாரம் | 93 |
| | | 111 | சட்டநீத்தறவு மற்றும் காப்புரை | 100 |
| | | 112 | தடை இடர்களை நீக்கும் அதிகாரம் | 100 |

# இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015

**2/2016**

**குறிப்புரை**

- இந்தியக் குடியரசின் ஏற்பிசைவு பெறப்பட்ட நாள் 31.12.2015.
- இந்திய அதிகார முறை சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட நாள் : 01.01.2016

*********

குழந்தைகள் சட்டத்திற்கு முரண்படுவதாகச் சாட்டப்பட்டு பின் கண்டறிந்து குழந்தைகள் மீதான உயர்நலப்பற்றினால் வழக்கின் நீதிமுறைத்தீர்ப்பு மற்றும் பொருட்பாடுகளின் தீர்வுகள்

குழந்தைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு, குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல், தக்கப் பாதுகாப்பு, பராமரிப்பு, மேம்பாடு, நடத்தும் விதம், குழந்தை இணக்க அணுகுமுறையில் பழகுதல், சமூக மறு ஒருங்கிணைப்பு போன்றவற்றையும் மற்றும் அவர்களுக்காக ஏற்படுத்திய நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் மூலம் வழங்கப் பெறும் நடைமுறையால் அவர்களின் மறுவாழ்வு தொடர்பான மற்றும் இடைவிளைவான எல்லா அம்சங்களையும் ஒருங்கிணைத்து தொகுத்தும், திருத்தம் செய்யப் பெற்றதுமாக அமைந்தது இந்த சட்டமாகும்.

அரசியலமைப்புச் சட்டம் உறுபு 15, கூறு(3), உறுபு 39 கூறுகள் (2) மற்றும் (ஊ) உறுபு 45 மற்றும் உறுபு 47-இன் வகையங்களின் கீழாக வழங்கப்பட்ட செயலாக்க உரிமைகள் மற்றும் விதிக்கப்பட்ட செயற்கடமைகளைப் பயன்படுத்தி, மாநில அரசு, குழந்தைகளின் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றும் வகையிலும், குழந்தைகளின் அடிப்படை மனித உரிமைகள் பேணப்படுவதையும் உறுதி செய்தல் வேண்டும்.

மற்றும் குழந்தையின் உயர்நலப்பற்றை நிலைநாட்டும் வகையில் அனைத்து நாட்டு அரசுத் தரப்பினரும் கடைப்பிடிக்கும் முறையில் செப்பம் செய்த தொகுதியான தர நிர்ணயங்களுடன் குறித்துரைத்துள்ளது.

2. ஐக்கிய நாடுகளின் பொதுப் பேரவையால் தகவேற்பு செய்யப்பட்ட குழந்தை உரிமைகள் பேராண்மைப் பேரவையின் தனிச்சிறப்பான தொடர்பு உடன்படிக்கையை (சாசனம்) 11.12.1992 இந்திய அரசு பின்னேற்பு செய்து இணங்கியது.

ஐக்கிய நாடுகளின் பேராண்மை பேரவையின் குழந்தை உரிமைகள் தீர்மானம், இளைஞர் நீதி மேலாண்மைக்கான ஐக்கிய நாடுகளின் குறும அளவிலான தர நிர்ணய விதிகள், 1985 (பெய்ஜிங் விதிகள்) இளைஞர் உரிமை பறிப்பைத்

தடுத்துப் பாதுகாப்பதற்கான விதிகள் (1990). குழந்தையின் பாதுகாப்பிற்கான ஹேக்பேராண்மை பேரவை உடன்படிக்கை (சாசனம்) மற்றும் நாடுகளுக்கு இடையேயான மகவேற்பு (தத்தெடுத்தல்) ஒருமைப்பாடு மற்றும் ஏனைய பன்னாட்டு ஒப்பந்த முறைசெய் ஆவணங்களைக் கருத்தில் கொண்டு, விரிவாகப் புரிந்து கொள்ளும் திறத்துடன் கூடிய இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2000 (56/2000)-ஐ மீண்டும் முழுமையாக இயற்றப்படுவது அத்தியாவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு பராமரிப்பும், பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரண்பட்டதாகச் சாட்டுரைக்கப்படும் மற்றும் கண்டறிந்ததுமான குழந்தைகளுக்காக, அவற்றில் குறிக்கப்பட்ட, தொகுத்தளித்த தர நிர்ணயங்களை ஓர்வு செய்து (பரிசீலித்து) விரிவாகப் புரிந்து கொள்ளும் திறத்துடன் கூடிய முழுமையாக இளைஞர் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000-ஐ மீண்டும் இயற்றப்படுவது அத்தியாவசியமாகிறது.

********

இந்திய குடியரசின் அறுபத்து ஆறாவது ஆண்டில் நாடாளுமன்றத்தில் கீழ் வருமாறு இயற்றப்படுகிறது.

**இச்சட்டத்தின் முன்வரைவு அறிமுகம் செய்தபோது, இச்சட்டத்தின் நோக்கங்கள் மற்றும் காரணங்களுக்கான விளக்கவுரை பின்வருமாறு:-**

1. அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 15, பிறவற்றிற்கிடையில் குழந்தைகளுக்கான சிறப்பு சட்ட வகையங்கள் இயற்ற அரசுக்கு அதிகாரங்களை அளிக்கிறது. உறுப்பு 39(உ) மற்றும் (vi), 45 மற்றும் 47 குழந்தைகளின் எல்லாத் தேவைகளையும் நிறைவு செய்யவும், அவர்களின் அடிப்படை மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதையும் உறுதி செய்திட, அரசை மேலும் பொறுப்புள்ளதாக்குகிறது.

2. இந்தியாவில் 11.12.1992-இல் பின்னேற்பு செய்யப்பட்ட குழந்தைகள் உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகளின் பேராண்மை பேரவைத் தீர்மானம் (சாசனம்)

(அ) பேரவையின் மாண்பு மற்றும் மதிப்புணர்வை மேம்படுத்துவதில் உரியதான நெறிமுறைப்படி நடத்துதல்.

(ஆ) குழந்தைகள் தொடர்பான மனித உரிமை, மற்றவர்களின் அடிப்படை உரிமைகள் மீதான மதிப்புணர்வை வலுவூட்டுதல்.

(இ) குழந்தைகள் அகவையைக் கருத்தில் இருத்தி மற்றும் குழந்தைகளின் விளைவான சமூக மறுஒருங்கிணைப்பை ஊக்குவித்தல் மற்றும் சமுதாயத்தில் ஒரு ஆக்க முறையிலான பங்கை மேற்கொள்ளக் குழந்தைக்கு ஏற்படுத்தும் வகையில் உள்ளடங்கிய, ஏதேனுமொரு தண்டனைச் சட்டத்தை மீறுவதாகக் குற்றம் சாட்டப்படும் அல்லது குற்றம் சாட்டப்படும் நேர்வில், முறையான எல்லா வகையிலான நடவடிக்கைகளும் மேற்கொள்ள அரசை வேண்டுறுத்துகிறது.

3. குழந்தைகளின் பாதுகாப்பை வகை செய்ய, இளைஞர் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், ஆண்டு 2000-இல் அரசால் இயற்றப்பட்டது. அதன் செயலாக்கத்தில் உள்ள இடைவெளிகளை நீக்கியும் மற்றும் குழந்தைக்கு ஏற்புடையதாகவும் அமைந்திட 2006 மற்றும் 2011-இல், அச்சட்டம் இருமுறை திருத்தம் செய்யப்பட்டது. இச்சட்டத்தின் செயலாக்கத்தின் போது, நிறுவனங்களில் குழந்தைகளை முறைகேடாகப் பயன்படுத்தும் நிகழ்வுகளின் எண்ணிக்கை அதிகமானதாலும், போதிய அளவில் வசதிகள் இல்லாத குழந்தைகள் காப்பகங்களில் பராமரிப்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கையின் தர நிலைப்பாடு, முடிவுறாவழக்குகள் அதிகரித்தல், தவறான மற்றும் முழுமையற்ற நிர்வாகச் செயல்முறையின் காரணமாக மகவேற்பில் (தத்தெடுப்பு) கால இழப்பு, நிறுவனங்களின் பங்கேற்றல், பொறுப்படைவு, பொறுப்பாதல் தொடர்பான தெளிவற்ற நிலை செய்கடமைகள் போன்ற பன்முக பொருட்பாடுகள் எழுந்தன.

மேலும் உடல் சார்ந்த தண்டனை, மகவேற்பு (தத்தெடுப்பு) நோக்கங்கள் ஆகியவற்றிற்காக குழந்தைகளை விற்றல் போன்ற குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களை எதிர்கொள்ளுமளவில் சட்ட வகையங்கள் போதிய அளவில் இல்லாமை போன்றவை, நிகழ்நிலையில் உள்ள சட்டத்தை மீளாய்வு செய்ய வேண்டிய சிறப்புக் கூறுகளைத் தெளிவுறுத்தியது.

4. அன்றியும் அண்மைக் காலத்தில் 16-18 வயதிற்குட்பட்ட குழந்தைகள் புரியும் குற்றச் செயல்களின் நேர்வுகள், எண்ணிக்கைப் பெருக்கம் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்டம்), 2000-இன் கீழாக உள்ள வகையங்கள் மற்றும் திட்டமுறை, இந்த வயதிற்குட்பட்ட குற்றம் இழைக்கும் குழந்தைகளை கையாளத்தக்க அளவிற்கு திறனற்றவை என்பது புலனாகிறது. தேசிய குற்ற ஆவணக்காப்பகம் திரட்டிய தரவுகள் அடங்கிய புள்ளி விவரங்கள் 16-18 வயதிற்குட்பட்டவர்கள் புரிந்த குற்றச் செயல்கள், குறிப்பாக சில வகைக் கொடுங்குற்றங்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளன என்பதை உறுதிப்பட நிறுவுகிறது.

5. மேற்குறித்த சிக்கல்களை முடிவுறுத்தல் செய்ய, அப்போதைய இளைஞர் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்டம்), 2000-ஐ நீக்குவதற்கும் மற்றும் பிறவற்றுக்கிடையே குழந்தையின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கான பொதுக் கோட்பாடுகள், அத்தகைய குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணான குழந்தைகளின் நேர்வில் நடைமுறைகள் அத்தகைய குழந்தைகளின் மறுவாழ்வு மற்றும் சமூக மறுஒருங்கிணைப்பு நடவடிக்கை, தாய் தந்தை அற்றக் குழந்தை, கைவிடப்படும் மற்றும் சரண் செய்து ஒப்புவித்த குழந்தைகளின் தத்தெடுப்பு மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களாக வகை செய்ய, வருங்காலத்தை எதிர்நோக்கி ஒரு முழுமையான புதியதோர் இயற்றுச் சட்டத்தை உருவாக்க செய்யப்பட்டது.

இச்சட்டம், இவ்வண்ணம் குழந்தையின் உயர்நலப்பற்றினைக் கருத்தில் இருத்திய நோக்கத்துடன், ஒரு குழந்தை இணக்க அணுகுமுறையைக் கடைப்பிடித்து, இடர்பாடான சூழலில் உள்ள குழந்தைகளின் முறையான பராமரிப்பு, பாதுகாப்பு, மேம்பாடு, ஒழுகலாறு, மற்றும் சமூக ஒருங்கிணைப்பை உறுதி செய்கிறது.

6. சட்டமுன்வரைவில் உள்ள வெவ்வேறு துணைக் கூறுகளின் வகைமுறை மீதான குறிப்புரை, இதனை விரிவுற எடுத்துரைக்கிறது.

7. இச்சட்டமுன்வரைவு, மேலே சொல்லப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் முன்னெடுத்து முயல்கிறது.

## இயல் : 1

# தோற்றுவாய்

## (தொடக்கம்)

**பிரிவு - 1**

**குறுந்தலைப்பு, அளாவுகை, தொடக்கம், பொருந்துகை :**

(1) இந்த சட்டம், இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 என அழைக்கப்படும்.

(2) இது, ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்திய நாடு முழுமைக்குமான பரப்பெல்லைக்குரியது.

(3) இது நடுவணரசின் அதிகார முறை அரசுப் பதிவிதழில் வெளியிடப்படும் அறிவிக்கையில் குறித்த அத்தகைய நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

(4) தற்போது நடைமுறையில் உள்ள ஏனைய சட்டம் எதிலும் என்ன சொல்லப்பட்டிருந்தாலும், குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான பொருட்பாடுகளுக்கும், மற்றும் சட்டத்திற்கு முரண்பட்டதாக நடக்கும் குழந்தைகளுக்கும் இச்சட்டத்தின் வகையங்கள் மட்டுமே பொருந்துவதாக அமைவதுடன், கீழ்வருவனவும் உள்ளடங்கும்.

(i) சட்டத்திற்கு முரணான குழந்தைகளைக் கைப்பற்றுதல், காவலில் நிறுத்தி வைத்தல், அவர்களுக்கு எதிராக வழக்கு தொடுத்தல், தண்டனை அளித்தல், அல்லது சிறைப்படுத்துதல் மற்றும் மறுவாழ்வு வழங்குதல், சமூகமறு ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல்.

(ii) பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளின் மறுவாழ்வு, தத்தெடுப்பு, மறு ஒருங்கிணைப்பு, முன்நிலை மீட்பு, தொடர்பான ஆணைகள், நடைமுறைகள், மற்றும் தீர்வு முடிவுகள்.

**பிரிவு - 2**

**சொற்பொருள் வரையறைகள் :**

இச்சட்டத்தில் சூழமைவின் தேவை வேறானாலன்றி, மற்றவாறு குறிப்பிடப்படும் சொற்கள் கீழ்வரும் பொருளை உடைத்ததாயிருக்கும்.

(1) **கைவிடப்பட்ட குழந்தை:** குழந்தையை ஈன்றுபுறந்தந்த பெற்றோரால் அல்லது தத்தெடுத்தப் பெற்றோரால் அல்லது காப்பாளரால் கைவிடப்பட்ட ஒரு குழந்தை எனப் பொருள்படும். முறையான விசாரணைக்குப் பின்னர் அக்குழந்தை “கைவிடப்பட்டக் குழந்தை” என்று (குழந்தை நலக்) குழுவால் அறிவிக்கப்பட வேண்டும்.

(2) **தத்தெடுப்பு (மகவேற்பு):** உயிரியல் சார்ந்து ஈன்றெடுத்த பெற்றோரிடமிருந்து தத்தெடுப்பின் மூலம் குழந்தை ஒருவர் நிலையானதாகப் பிரிந்து தத்தெடுக்கப்பட்ட பெற்றோரின் சட்டப்படியான குழந்தையாக மாறி, தத்தெடுக்கப்பட்ட பெற்றோருக்குப் பிறந்த குழந்தையைப் போல எல்லாவகை உரிமைகளும், சிறப்புரிமைகளும், பொறுப்புகளும் பற்றுகையாகப் பெற்றிருத்தல் ஆகிய நெறிமுறை எனப் பொருள்படும்.

(3) **தத்தெடுப்பின் ஒழுங்குமுறை விதிகள்:** தத்தெடுப்பு தொடர்பாக அதிகார ஆயத்தால் இயற்றப்பட்டு, நடுவணரசால் அறிவிக்கை செய்த ஒழுங்கு விதிமுறைகள் எனப் பொருள்படும்.

(4) **நிருவாகி (செயலாட்சியர்):** மாநில அரசின் துணைச் செயலாளர் பதவி நிலைக்குக் குறையாத மாவட்ட அலுவலர் எவரும் எனப் பொருள்படும்; அவரிடம் குற்றவியல் நடுவருக்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கும்.

(5) **பிற்காப்பு:** எந்தவொரு பராமரிப்பு நிறுவனத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டு பதினெட்டு வயது நிறைவெய்தாத, ஆனால் இருபத்தொரு வயது முழுமை பெறாத நபர்கள், சமூக பண்பாட்டு மைய நீரோட்டத்தில் இணைந்தியங்கும் வகையில் அவர்களுக்கு நிதித்தொகை அல்லது பிறவாறு ஆதரவு நல்குதல் எனப் பொருள்படும்.

(6) **தகவேற்பு தரப்பட்ட (அங்கீகரிக்கப்பட்ட) அயல்நாட்டுத் தத்தெடுப்பு முகமை:** ஒரு குழந்தையைத் தத்தெடுக்கும் பொருட்டு, இந்திய நாட்டிலிருந்து, இந்தியாவில் வசிக்காத இந்தியா (அ) அயல்நாட்டில் வாழும் இந்தியக் குடிமகன் (அ) இந்திய வம்சாவழி நபர்கள் (அ) அநேகமாகத் தத்து எடுக்கலாம் என்று அயல்நாட்டு பெற்றோர் போன்றோரின் மனுவை முன்மொழியும் பொருட்டு அவர்களின் மத்திய அதிகார அமைப்பு (அ) அந்த நாட்டிற்கான அரசுத் துறையின் பரிந்துரையின் பேரில், மத்திய தத்தெடுப்பு ஆதார அமைப்பினால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அயல்நாட்டு சமூக முகமை (அ) குழந்தை நல முகமை எனப் பொருள்படும்.

(7) **அதிகார ஆயம்:** அதிகார ஆயம் பிரிவு 68-ன் கீழாக நிறுவப்பட்ட மத்திய தத்தெடுப்பு ஆதார அதிகார அமைப்பு எனப் பொருள்படும்.

(8) **இரத்தல் :** என்பது

(i) ஒரு பொதுவிடத்தில், பாவனை ஏதேனும் செய்து இரத்தல் அல்லது தனியார் வளாகத்தில் நுழைந்து தருமம் பெறும் நோக்குடன் வருந்தி நயந்து இரத்தல்.

(ii) இரத்தலுக்காக, அந்த நபரோ அல்லது அவர் பொருட்டாக வேறெந்த நபர் ஒருவரோ அந்த நபரின் அல்லது விலங்கு ஒன்றின் வெந்த புண், வெட்டுக் காயம், உடலூறு இழைக்கும் செயல், தோற்றம் அல்லது பிணியைக்காட்டி தருமம் பெறும் வகையிலும் வலிந்து பறிக்கும் நோக்கிலும் வெளிப்படுத்தும் காட்சிப் பொருளாக வைத்தலும் இரத்தல் எனப் பொருள்படும்.

(9) குழந்தை மீதான தேர்ந்த உயரிய நலப்பற்று: குழந்தையின் அடிப்படை உரிமைகள், தேவைகள், தனி அடையாளம், சமுதாய ரீதியில் நலன் மற்றும் உடல் உளவெழுச்சி மற்றும் அறிவார்ந்த திறம் சார்ந்த வளர்ச்சியை நிறைவுறச் செய்ய உறுதிப்படுத்தும் வகையில், குழந்தை குறித்த ஏதேனுமொரு முடிவெடுப்பதன் அடிப்படைக் கூறு எனப் பொருள்படும்.

(10) **குழுமம்:** என்பது சட்டப்பிரிவு 4-இன் கீழ் அமையும் ஒரு இளைஞர் நீதிக் குழுமம் எனப் பொருள்படும்.

(11) **மத்திய அதிகார ஆயம்:** குழந்தையின் பாதுகாப்பு மற்றும் நாடுகளுக்கிடையேயான தத்தெடுப்பின் கூட்டுறவு மீதான (1993) ஹேக் பேராண்மை பேரவை உடன்படிக்கையின் (சாசனம்) கீழ் அங்கீகாரம் செய்யப்பட்ட அரசுத்துறை எனப் பொருள்படும்.

(12) **குழந்தை:** குழந்தை என்பவர் பதினெட்டு வயது நிறைவு எய்தாத ஒருவர் எனப் பொருள்படும்.

(13) **சட்டத்திற்கு முரணான குழந்தை:** எந்தவொரு குழந்தை பதினெட்டு வயதை நிறைவெய்தாதிருந்து, குற்றமொன்றைப் புரிந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருப்பின் அல்லது குற்றம் புரிந்ததாகக் கண்டறியப்படின், சட்டத்திற்கு முரணான குழந்தை என்று பொருள்படும்.

(14) **பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தை:**

(i) குழந்தைக்கு இல்லமோ அல்லது நிலையான வசிப்பிடம் இல்லாதது கண்டறியப்படுவது.

(ii) அப்போதைக்கு நடைமுறையில் உள்ள தொழிலாளர் சட்டத்திற்கு முரணான வகையில் வேலை செய்தல் அல்லது இரத்தல் அல்லது வீதியில் வசிப்பவர் எனக் கண்டறிவது.

(iii) காப்பாளராகவோ அல்லது அவ்வாறு இல்லாதவராகவோ இருக்கும் ஒரு நபருடன் குடியிருக்கும் அக்குழந்தை அத்தகைய நபரால் -

(a) காயப்படுத்தி, சுரண்டலுக்கு உட்படுத்தி தவறாகப் பயன்படுத்தி, புறக்கணித்து அல்லது குழந்தையின் பாதுகாப்பிற்காக அப்போதைக்கு நடப்பில் உள்ள ஏனைய சட்டம் எதனையும் மீறுகை, அல்லது

(b) குழந்தையைக் கொல்வதற்கு, காயப்படுத்த சுரண்டலுக்கு உட்படுத்த அல்லது பயன்படுத்த பயமுறுத்துவது, நன்றல்லாத வழியில், அத்தகைய அச்சுறுத்தல் நிகழ்வதற்கான சாத்தியக்கூறு நியாயமாக இருப்பதாக அறிவது அல்லது.

(c) குழந்தை கொல்லப்பட்டிருந்தால், முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டிருப்பது, புறக்கணிக்கப்பட்டிருப்பது அல்லது வேறு ஒரு குழந்தை அல்லது குழந்தைகளை சுரண்டலுக்கு உட்படுத்தப்பட்டிருப்பது, அத்தகைய குழந்தை அத்தகைய நபரால் கொல்லப்படுவதற்கு முறைகேடாகப் பயன்படுத்துவதற்கு, சுரண்டலுக்கு உள்ளாவதற்கு அல்லது புறக்கணிப்பிற்கு தகவான வாய்ப்பு இருப்பதாக ஐயம் (அ) அச்சம் எழுவது அல்லது.

(iv) அந்தக் குழந்தை உளநலம் பாதிக்கப்பட்டிருப்பது அல்லது உளநலம் அல்லது உடல்நலம் குன்றிய குழந்தை குணப்படுத்த முடியாத நோயால் எவருடைய ஆதரவு இல்லாமலோ, கவனிப்பாரற்றோ இருப்பது, பெற்றோர் அல்லது காப்பாளர் இருந்தும் குழந்தையைப் பாதுகாக்கத் தகுதியற்றவராக குழுமம் அல்லது குழு கண்டறிந்தால்.

(v) குழந்தை, பெற்றோர் அல்லது காப்பாளர் ஒருவரைப் பெற்றிருந்த போதிலும் அவர் அந்தக் குழந்தையைப் பராமரிக்க, பாதுகாக்க, நல்ல முறையில் வளர்க்க தகுதியற்றவர் அல்லது இயல்திறன் இல்லாதவர் என்று குழுமம் அல்லது குழு கண்டறிந்தால்,

(vi) பெற்றோர் இல்லாதவர் மற்றும் பராமரிக்க எவருக்கும் விருப்பு இல்லை (அ) பெற்றோரால் முற்றிலும் கைவிடப்பட்டவர் (அ) விட்டுவிடப்பட்டவர் அல்லது சரண் செய்திருப்பது

(vii) காணாமற் போன (அ) இல்லம் விட்டோடிப் போன குழந்தை (அ) வகுத்துரைத்துச் சொல்லப்பட்டவண்ணம் அத்தகைய வகையில் நடத்தப்பட்ட தகவான விசாரணைக்குப் பின்பு, அவர் தம் பெற்றோரால் கண்டுபிடிக்க இயலாதிருக்கும் நபர் அல்லது

(viii) பாலியலில் முறைகேடாகப் பயன்படுத்துதல் அல்லது சட்டத்திற்குப் புறம்பான செயல் நோக்கத்திற்காக தவறாகப் பயன்படுத்தி, படு வேதனைக்கு (சித்ரவதைக்கு) அல்லது சுரண்டலுக்குள்ளாக்கப்பட்டுள்ளார். அல்லது

(ix) பாதிப்புக்குள்ளாகும் சூழமைவில் இருக்கும் மற்றும் போதைப் பொருளைத் தவறாகப் பயன்படுத்துதல் (அ) இழிவணிகத் தொடர்பில் அமர்த்துதல்.

(x) உளச்சான்றுக்கு எதிரான வருவாய் ஈட்டுதலுக்கு தவறாகப் பயன்படுத்தப்படுவது அல்லது ஒரு வேளை தவறாகப் பயன்படுத்த உரியவராவது அல்லது

(xi) ஏதேனுமொரு படைக்கல மோதலில் (ஆயுதக் கலவரம்) உள் நாட்டுக் கலகத்தில் அல்லது இயற்கை பேரிடரில் பாதிப்புக்குள்ளானவர் அல்லது தாக்குதலுக்கு உள்ளானவர்.

அல்லது

(xii) மணவயது எய்தும் முன்னதாகவே உடனடியாக நிகழ்த்தவிருக்கும் திருமணச் சடங்கின் (இடர்) பொறுப்பில் உள்ளவர். மற்றும் அத்தகைய திருமணத்தை முறைப்படி சடங்காசாரங்களுடன் நடத்தி வைக்க அவரது பெற்றோர், குடும்ப உறுப்பினர்கள், காப்பாளர் மற்றும் எவரேனும் ஏனைய நபர்கள் அநேகமாகப் பொறுப்புக்குரியவர்கள் ஆகும் நிலையில் உள்ளோர்.

(15) **குழந்தை இணக்கமுறை:** குழந்தையிடம் ஒழுகலாறு, வழக்கமான நடைமுறை, செய்முறை, உளப்பாங்கு, சுற்றுச்சூழல் அல்லது நடத்தும் விதம், மனிதநேயக் கூறுகளுடன், பிறர் உணர்வுக்கும் மதிப்பளித்தல் மற்றும் குழந்தையின் தேர்ந்த உயரிய நலப்பற்று எனப் பொருள்படும்.

(16) **தத்தடுக்கும் குழந்தை சட்டப்படியானது:** பிரிவு 38-ன் கீழாக உரியதொரு உசாவுகை (விசாரணை) மேற்கொண்ட பின்னர், குழுவால் அத்தகைய அறிவிப்பு செய்யப்பட்ட ஒரு குழந்தை எனப் பொருள்படும்.

(17) **குழந்தை நல அலுவலர்:** குழந்தைகளின் உறைவில்லத்தில் இருக்கும் ஒரு அலுவலர். குழு அல்லது குழுமத்தால் பிறப்பிக்கப்படும் கட்டளைகளை குறித்துரைத்தவாறு பொறுப்புணர்வுடன் நிறைவேற்றும் அலுவலர் எனப் பொருள்படும்.

(18) **குழந்தை நல காவல்துறை அலுவலர்:** சட்டப்பிரிவு 107 உட்பிரிவு (1)-இன் கீழாக பதவிப் பெயர் குறிக்கப்பட்ட பணியமர்த்தப்பட்ட அத்தகையதொரு அலுவலர் எனப் பொருள்படும்.

(19) **குழந்தைகள் இல்லம்** என்பது, ஒவ்வொரு மாவட்டத்தில் (அ) மாவட்டங்களின் ஒருங்கிணைந்த குழுவில், மாநில அரசால், அதனாலோ (அ) ஒரு தன்னார்வ (அ) அரசு சாரா அமைப்பின் மூலம் உருவாக்கப்பட்டு, (அ) பேணப்பட்டு வரும், மற்றும் சட்டப்பிரிவு 50-இல் வகுக்கப்பட்டவாறான நோக்கங்களின் பொருட்டு, அவ்வண்ணமாகப் பதிவு செய்யப்பட்ட ஒரு குழந்தைகள் இல்லம் எனப் பொருள்படும்.

(20) **குழந்தைகள் நீதிமன்றம் : குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 2005** (4/2006): ஆணையத்தின் கீழாக சட்டப்படி தோற்றுவிக்கப்பட்ட ஒரு நீதிமன்றம் அல்லது பாலியல் குற்றங்களின்றும் குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 (32/2012)-இன் கீழாக ஒரு சிறப்பு நீதிமன்றம் குழந்தைகள் நீதிமன்றம் ஆகும்.

மேலும் அத்தகைய நீதிமன்றங்கள் இருக்குமிடத்தில், இக்குற்றங்களை விசாரிப்பதற்கான ஒரு நீதிமன்றம் பெயர் குறிப்பிடப்படாதபோது, இச்சட்டத்தின் கீழ் குற்றங்களை விசாரிக்க உரிய அதிகார வரம்பெல்லை கொண்ட அமர்வு நீதிமன்றம் விசாரணை மேற்கொள்ளும் என்பதாகப் பொருள் அமையும்.

(21) **குழந்தை பராமரிப்பு நிறுவனம்:** என்பது, எந்த குழந்தைக்கு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவையாக உள்ளதோ, அத்தகைய குழந்தைக்கு அத்தகைய வசதிகளை அளிப்பதற்காக இந்த சட்டத்தின் கீழாக தகவேற்பிசைவு அளிக்கப்பட்ட குழந்தைகள் இல்லம், திறந்தவெளி புகலிடம், கூர்நோக்கில்லம், சிறப்பில்லம், பாதுகாப்பு அமைவிடம், தனிச்சிறப்பு தத்தெடுத்தல் முகமை மற்றும் ஒரு தகுநிலை வசதியகம் எனப் பொருள்படும்.

(22) **குழு:** என்பது பிரிவு 27-ன் கீழ் ஏற்படுத்தப்படும் குழந்தை நலக்குழு எனப் பொருள்படும்.

(23) **நீதிமன்றம்:** தத்தெடுப்பு மற்றும் காப்பாளர் நிலை தொடர்பான பொருண்மை குறித்து அதிகார வரம்பெல்லை கொண்ட ஒரு உரிமையியல் நீதிமன்றம் எனப் பொருள்படும். இதில் மாவட்ட நீதிமன்றம் மற்றும் மாநகர உரிமையியல் நீதிமன்றம் உள்ளடங்கும்.

(24) **உடல் ரீதியான தண்டனை:** குழந்தையை ஒரு குற்றத்திற்காக பழிவாங்கும் பொருட்டு, குழந்தையின் நன்னெறி நோக்கில் ஒழுங்குக் கட்டுப்பாட்டின் நோக்கத்திற்காக சீரான திருத்தத்திற்கு அல்லது வேண்டுமென்றே கட்டாயமாக ஏற்குமாறு வலியுண்டாக்கும் வகையில், உடல்ரீதியான தண்டனைக்கு எவரேனும் ஒரு நபரால் ஒரு குழந்தையை உட்படுத்துதல் எனப் பொருளாகிறது.

(25) **குழந்தைகள் அவசரகால தொலைப்பேசி அழைப்பு சேவை மையம்:** குழந்தைகளின் நெருக்கடியான காலகட்டத்தில், தொடர்பு இணைப்பு கொள்வதற்கும் அல்லது குழந்தையின் நெடுங்காலப் பராமரிப்பு மற்றும் மறுவாழ்வுப்பணி தொடர்பாக, இருபத்து நான்கு மணி நேரமும் செயற்படும், ஒரு அவசரகால நிலையில் எட்டிச் சென்று சேவைபுரியும் மையம் எனப் பொருள்படும்.

(26) **மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு** : பிரிவு 106-இன் கீழாக மாநில அரசால் ஏற்படுத்தப்பட்ட ஒரு மாவட்டத்திற்கான ஒரு குழந்தை பாதுகாப்பு மையம் எனலாம், இது இச்சட்டத்தையும் மற்றும் மாவட்டத்தில், ஏனையக் குழந்தை பாதுகாப்பு நடவடிக்கைகளையும், உறுதி செய்யும் ஒரு பிரிவாகும்.

(27) **தகுநிலை வசதியமைப்பு** : ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக, ஒரு குறிப்பிட்ட குழந்தையை தற்காலிகமாக ஒரு அரசு அமைப்பினால் அல்லது ஒரு பதிவு செய்யப்பட்ட தன்னார்வ அல்லது அரசு சாரா அமைப்பால் நடத்தப்படும் ஒரு வசதியமைப்பு மற்றும் குழு அல்லது குழுமத்தால் ஏதுவாக இருப்பினும், பிரிவு 51-இன் உட்பிரிவு (1)-இன் கீழாக சொல்லப்பட்ட நோக்கத்திற்காக ஏற்புடையது என ஒப்புதலளிக்கப்பட்ட அத்தகைய வசதி வாய்ப்பிடம் எனப் பொருள்படும்.

(28) **தக்கார்** : ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக, ஒரு குறிப்பிட்ட குழந்தையை பொறுப்பேற்கத் தயாராகும், எவரேனும் ஒருவர் என்பதாகும். இதன் பொருட்டான விசாரணைக்குப் பின்னர் தகுதியானவரெனக் கண்டறியப்பட்ட நபர், அக்குழந்தையைப் பெற்றுக் கொண்டு பராமரிக்கும் அத்தகைய நபர் என்று நேர்விற்கேற்ப குழு அல்லது குழுமத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

(29) **வளர்ப்பு பேணுகை** : என்பது, குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தகுதியான, தகவேற்பிசைவு அளிக்கப்பட்ட மற்றும் அத்தகைய பராமரிப்பை அளிப்பதற்காக, மேற்பார்வை புரியும் குழந்தையின் ஈன்றெடுத்த குடும்பம் அல்லாத ஏனைய ஒரு குடும்பத்தின் குடும்பப்பாங்கான சூழலில் மற்றும் பராமரிப்பின் நோக்கத்திற்காக குழந்தை ஒருவரை ஒப்புவித்தல் எனப் பொருள்படும்.

(30) **வளர்ப்பு பேணுகை குடும்பம்** : பிரிவு 44-இன் கீழ் குழந்தையை வைத்துக் காத்து வளர்க்க ஏற்படுத்தப்பட்ட, மாவட்டக் குழந்தை பாதுகாப்பு அலகால் தகுதி வாய்ந்தது எனக் கண்டறிந்த ஒரு குடும்பம் எனப் பொருள்படும்.

(31) **ஒரு குழந்தைக்கான காப்பாளர்** : காப்பாளர் என்பது குழந்தையின் இயற்கையான காப்பாளர் அல்லது நேர்விற்கேற்ப குழு அல்லது குழுமத்தின் கருத்தாக, ஒரு குழந்தையை உண்மையாகப் பொறுப்பேற்றிருக்கும் நபர் அல்லது நடைமுறைகளின்படி குழந்தையின் காப்பாளராக குழு அல்லது குழுமத்தால் அங்கீகாரம் பெற்ற நபர் எனப் பொருள்படும்.

(32) **வளர்ப்பு பேணுகை குழு** : பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவையாகும் எந்தக் குழந்தைகள் பெற்றோரின் பராமரிப்பின்றி உள்ளார்களோ, அந்தக் குழந்தைகளுக்கு குடும்பப்பாங்கான பெற்றோரின் அக்கறை, பராமரிப்பு, வசதி மற்றும் சமுதாய அடிப்படையில் தீர்வாகும் முடிவுகள் மூலம் தனித்தன்மையுடன் கூடிய பராமரிப்பு, அடையாள உரிமையுணர்வுடன், அரவணைத்து வளர்த்தல் ஆகிய நோக்கங்களுக்கான வசதியகங்கள் எனப் பொருள்படும்.

(33) **கொடுங் குற்றங்கள்** : இந்தியத் தண்டனைச் சட்டம் (45/1860)-இன் கீழாக அல்லது தற்போது நடைமுறையில் உள்ள ஏனைய சட்டத்தின் கீழ் சிறுமக்கால அளவில் (குறைந்தபட்சம்) ஏழாண்டுகள் அல்லது அதற்கும் மேற்பட்ட சிறைத் தண்டனை வழங்கப்படும் குற்றங்களை உள்ளடக்கியதாக அமையும்.

(34) **நாடுகளுக்கிடையேயான தத்தெடுப்பு** : குழந்தை ஒருவரை இந்தியாவில் வசிக்காத இந்தியர் ஒருவர் அல்லது இந்திய வம்சாவழியைச் சார்ந்த ஒரு நபர் அல்லது அயல் நாட்டவர் ஒருவர், இந்தியாவிலிருந்து ஒரு குழந்தையைத் தத்தெடுத்தல் எனப் பொருள்படும்.

(35) **இளைஞர் (இளையோர் (அ) சிறார்)** : பதினெட்டு ஆண்டுகள் அகவைக்குக் குறைவான ஒரு குழந்தை "இளைஞர்" எனப் பொருள்படும்.

(36) **போதை மருந்து மற்றும் மனமயக்கப் பொருள்:** போதை மருந்து மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டம் 1985 (61/1985)-ல் தரப்பட்டுள்ள சொற்பொருள்களை முறையே கொள்ள வேண்டும்.

(37) **தடையிலாச் சான்றிதழ்** : நாடுகளுக்கிடையேயான தத்தெடுத்தலுக்காக மத்திய தத்தெடுப்பு மூலவள ஆதார அதிகார அமைப்பால் சொல்லப்பட்ட நோக்கத்திற்காக வழங்கப்பட்ட ஒரு சான்றிதழ் எனப் பொருள் கொள்ளலாம்.

(38) **இந்தியாவில் வசிக்காத இந்தியர்:** இந்திய பயண கடவுச்சீட்டைப் பெற்றிருக்கும் நபர் ஒருவர், ஓராண்டுக்கு மேலாக அயல்நாட்டில் தற்போது வசித்துக் கொண்டு வரும் அந்த நபர் எனப் பொருள் கொள்ளலாம்.

(39) **அறிவிக்கை:** இந்திய அரசின் அதிகார முறை அரசுப் பதிவிதழில் அல்லது நேர்விற்கேற்ப மாநில அரசின் அதிகார முறை அரசுப் பதிவிதழில் வெளியிடப்படும் ஒரு அறிவிக்கை எனப் பொருள்படும். மற்றும் “அறிவித்தல்” என்ற சொல்லமைப்பு, அவ்வாறே அத்தகைய பொருள் கொண்டதாக அமையும்.

(40) **கூர்நோக்கில்லம்:** என்பது ஒவ்வொரு மாவட்டத்தில் அல்லது ஒருங்கிணைந்த மாவட்டங்கள் குழுவில் மாநில அரசால் ஒரு தன்னார்வ அல்லது அரசுசாரா அமைப்பின் மூலம் நிறுவப்பட்டு அல்லது பேணப்பட்டு வரும் மற்றும் சட்டப்பிரிவு 47-ன் உட்பிரிவு (1)-இல் குறித்த நோக்கங்களின் பொருட்டு அவ்வாறாக பதிவு செய்யப்பட்ட சிறார்களுக்கான ஒரு கூர்நோக்கில்லம் எனப் பொருள்படும்.

(41) **திறந்தவெளி தங்குமிடம்** : சட்டப்பிரிவு 43-இன் உட்பிரிவு (1)-இன் கீழ் மாநில அரசால் அல்லது ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் அல்லது ஒரு அரசு சாரா அமைப்பு ஒன்றால் நிறுவப்பட்டு மற்றும் பேணப்பட்டு வரும் மற்றும் அச்சட்டப்பிரிவில் குறித்த நோக்கங்களுக்காக அவ்வாறாக பதிவு செய்யப்பட்ட குழந்தைகளுக்கான ஒரு வசதி வாய்ப்பிடம் “திறந்தவெளி தங்குமிடம்” ஆகும்.

(42) **தாய் தந்தையற்ற குழந்தை** : தாய் தந்தையற்ற குழந்தை என்பவர் கீழ்வரும் ஒரு குழந்தை எனப் பொருள்படும்.

(i) ஈன்றெடுத்த அல்லது தத்தெடுப்பு பெற்றோர் அல்லது சட்ட பூர்வமாக காப்பாளர் இல்லாதவர் அல்லது.

(ii) எந்தக் குழந்தையின் சட்டப்படியான காப்பாளர் குழந்தையை பராமரிக்க விழைவு இல்லையோ அல்லது பராமரிக்க இயலாதவராக உள்ளாரோ அந்தக் குழந்தை.

(43) **வெளிநாட்டில் வாழும் இந்தியக் குடிமகன்** : குடியுரிமைச் சட்டம் 1955 (57/1955)-இன் கீழாக அவ்வாறு பதிவு செய்யப்பட்ட அத்தகைய ஒரு நபர் எனப் பொருள்படும்.

(44) **இந்திய வம்சாவழி நபர்** : எந்தவொரு நபரின் நேர் மரபுவழி சார்ந்த மூதாதையர் இந்தியாவில் இருக்கிறார் என்றாலோ அல்லது இந்தியாவில் இருந்திருக்கிறார் என்றாலோ மற்றும் தற்போது எந்தவொரு நபரும் நடுவணரசால் வழங்கப்பட்ட

இந்திய வம்சாவழியினர் என்ற (அடையாள) அட்டையைப் பெற்றிருக்கும் நபர் எனப் பொருள்படும்.

(45) **சிறுகுற்றங்கள்** : இந்திய தண்டனைச் சட்டம் (45/1860) அல்லது தற்போது அமலாக்கத்தில் உள்ள ஏனைய சட்டத்தில் பெருமக்கால அளவாக (அதிகபட்சமாக) மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையாக விதிக்கப்பட்டு உள்ளதோ, அவ்வகையான குற்றங்கள் இவற்றில் உள்ளடங்கும்.

(46) **பாதுகாப்பு அமைவிடம்** : என்பது காவல் நிலையத்தின் காவல் வைப்பறை அல்லாத சிறை அல்லாத இடம் அல்லது நிறுவனம் என்பதாகும் அது நேர்விற்கேற்ப தனித்தோ அல்லது கூர்நோக்கில்லத்துடன் இணைந்தோ அல்லது சிறப்பில்லமாகவே எதுவாக இருப்பினும் (இளைஞர் நீதிக்) குழுமம் அல்லது குழந்தைகள் நீதிமன்றத்தின் ஒரு ஆணையால் அல்லது நீதிமன்ற ஆணையால் சட்டத்திற்கு முரணானதாகச் சாட்டப்பட்ட அல்லது கண்டறியப்பட்ட குழந்தைகளை ஏற்றுக் கொண்டு பராமரிக்க, அந்த நிறுவனத்தின் பொறுப்பாளர் இசைவாக இருத்தல் வேண்டும். வழக்கு விசாரணையின் போது குற்றம் புரிந்தவர் எனக் கண்டறிந்து, அவரது மறுசீராக்கத்திற்கான ஒரு காலத்திற்கு மற்றும் அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் நோக்கத்திற்காக குழந்தையை ஏற்று பராமரிப்பதற்கு விருப்புடையவராக இருத்தல் வேண்டும்.

(47) **வரையறுக்கப்பட்டது:** என்பது இந்த சட்டத்தின் கீழாக வகுக்கப்பட்ட விதிகளால் வரையறுக்கப்பட்டது எனப் பொருள்படுகிறது.

(48) **நன்னடத்தை அலுவலர்:** என்பது, குற்றவாளிகளின் நன்னடத்தைச் சட்டம் 1958(20/1958)-இன் கீழாக ஒரு நன்னடத்தை அலுவலராக மாநில அரசால் பணியமர்த்தப்பட்ட ஒரு அலுவலர் அல்லது மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் கீழ் மாநில அரசால் பணியமர்த்தப்பட்ட, சட்டம் சார்ந்த நன்னடத்தை அலுவராகவும் பணி நியமனம் செய்யப்பட்டவர் எனப் பொருளாகிறது.

(49) **பின்னிட்டு வரவாக எதிர்நோக்கிய (உத்தேசமான) தத்தெடுப்பு** : பிரிவு 57-இன் வகையங்களின்படி குழந்தை ஒன்றைத் தத்தெடுக்க தகுதி உடைய ஒரு நபர் அல்லது நபர்கள் எனப் பொருள்படும்.

(50) **பொதுவிடம்** : பரத்தமை தடுப்புச் சட்டம் 1956 (104/1956) தரப்பட்ட அதே பொருள்களைக் கொண்டதாக அமையும்.

(51) **பதிவு செய்யப்பட்டது** : என்பது குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் அல்லது முகமைகள் அல்லது அமைப்புகள் மாநில அரசால் மேலாண்மை செய்யப்படும் தகுநிலை வசதி வாய்ப்பகங்கள் அல்லது தன்னார்வ அல்லது அரசுசாரா நிறுவனம் என்பது சிறார் கூர்நோக்கில்லம், சிறார் சிறப்பில்லங்கள், பாதுகாப்பு அமைவிடம், குழந்தைகள் இல்லங்கள், திறந்தவெளி புகலிடங்கள் அல்லது சிறப்பு தத்தெடுப்பு முகமை அல்லது தகுநிலை வசதி வாய்ப்பகங்கள் அல்லது குழந்தைகளைக் குறுகிய கால அளவிற்கு அல்லது நீண்டகால அளவிற்கு தங்க வைத்துப்

பராமரிக்க பிரிவு 41-இன் கீழாக தகவேற்புறுதி வழங்கப்பட்ட (அங்கீகரிக்கப்பட்ட) அல்லது பதிவு செய்யப்பட்ட, அத்தகைய குறிப்பிட்ட தேவைக்குப் பொறுப்பேற்கும் உறைவிடப் பராமரிப்புக்கான நிறுவனம் (அ) முகமை (அ) தகுநிலை வசதி வாய்ப்பகம் எனப் பொருள்படும்.

(52) **உறவினர்** : இச்சட்டத்தின் கீழாக தத்தெடுக்கும் நோக்கத்திற்காக ஒரு குழந்தையின் உறவினர் என்பவர் தந்தை வழி சிற்றப்பா, மாமா, அத்தை, தாய்வழிமாமன் அல்லது அத்தை, சித்தி அல்லது தந்தையின் பெற்றோர் அல்லது தாயின் பெற்றோர் (பாட்டனார்கள்) எனப் பொருள்படும்.

(53) **மாநில முகவாண்மை** : சட்டப்பிரிவு 67-ன் கீழாக தத்தெடுப்பு மற்றும் அதன் தொடர்பான பொருட்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்க, மாநில அரசால் அமைக்கப்பட்ட மாநிலத் தத்தெடுப்பு மூலவள ஆதாரமுகமை எனப் பொருள்படும்.

(54) **கடுமையான குற்றங்கள்** : இந்தியத் தண்டனைச் சட்டம் (45/1860) அல்லது தற்போது அமலாக்கத்தில் உள்ள ஏதாவதொரு ஏனைய சட்டம் எதுவும் மூன்றாண்டுகள் முதல் ஏழாண்டுகள் வரையில் சிறைத் தண்டனை உள்ளதோ, அக்குற்றங்கள் இதில் உள்ளடக்கியதாக இருக்கும்.

(55) **இளைஞர் சிறப்பு காவற் பிரிவு** :

குழந்தைகள் தொடர்பாக செயல் நடவடிக்கை எடுக்கும் மற்றும் சட்டப்பிரிவு 107-ன் கீழாக, குழந்தைகளைக் கையாள்வதற்காக, அவ்வண்ணமாக பணி நியமனம் செய்யப்படும் ஒரு மாவட்டத்தின் (அ) மாநகரத்தின் காவற்துறையின், ஒரு பிரிவு (அ) எதுவாக அது இருந்தாலும் இருப்புப்பாதை காவற்துறையை போன்று ஏதேனுமொரு ஏனைய பிற காவற்துறைப் பிரிவு எனப் பொருள்படும்.

(56) **சிறப்பில்லம்:** சட்டத்திற்கு முரணாக அமையும் விசாரணை மூலம் கண்டறிந்த குழந்தைகள் அல்லது ஒரு குற்றம் புரிந்திருக்கும் குழந்தையை ஒரு குழுமத்தின் ஆணை மூலம், மறுவாழ்வுப் பணிகளுக்கு அனுப்பும்போது, உறைவிட வசதி அளித்து தங்கவைக்க, பிரிவு 48-இன் கீழாகப் பதிவு செய்யப்பட்ட அரசால் (அ) தன்னார்வ (அ) அரசுசாராத அமைப்பால் உருவான நிறுவனம் எனப் பொருள்படும்.

(57) **தனிச் சிறப்புத் தத்தெடுப்பு முகமை:** தத்தெடுப்பு நோக்கத்திற்காக, குழுவின் ஆணை மூலம் பெற்றோர் இல்லாத குழந்தைகள், கைவிடப்பட்ட குழந்தைகள் அல்லது பெற்றவரால் விடுவித்து சரண் செய்த குழந்தைகள் தங்குவதற்காக மாநில அரசால் அல்லது தன்னார்வ அல்லது அரசுசாரா அமைப்பு ஒன்றின் மூலம் பிரிவு 65-இன் கீழாக தகவேற்புறுதி வழங்கப்பட்ட (அங்கீகரிக்கப்பட்ட) அமைப்பு மூலம் அமையப் பெற்ற நிறுவனம் எனப் பொருள்படும்,,

(58) **ஏற்பாதரவுத் திட்டம்** : குழந்தையின் மருத்துவம், கல்வி மற்றும் மேம்பாடு ஆகிய தேவைகளுக்காக, குடும்பங்களுக்கு இணைகூட்டாக ஆதரவற்ற அல்லது பிறவற்றை முன்னேற்பாடு செய்தல் எனப் பொருள்படும்.

(59) **மாநில அரசு :** இந்தியாவின் ஒரு ஒன்றியத்து ஆட்சி மண்டலம் தொடர்பாக அரசமைப்புச் சட்டம் பிரிவுக் கூறு 239-இன் கீழாக குடியரசுத் தலைவரால் பணியமர்த்தப்படும், அத்தகைய நிருவாகியான செயல் ஆட்சியர் எனப் பொருள்படும்.

(60) **"சரண் செய்யப்பட்ட குழந்தை" :** என்பது, உடலளவிலும், உளவெழுச்சி அளவிலும், சமூக காரணிகளாலும் கட்டுப்பாட்டை மீறிய குழந்தையை, அவருடைய பெற்றோர் (அ) காப்பாளர் குழுவிடம் ஒப்படைத்தலும் மற்றும் அதனைக் குழுவால் அவ்வண்ணமே அறிவிக்கப்பட்டிருக்கும் அந்தவொரு குழந்தை எனப் பொருள்படும்.

(61) இச்சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு, ஆனால் சொற்பொருள் வரையறுக்கப்படாத அனைத்து சொற்களும், சொல்லமைப்புகளும் ஏனைய சட்டங்களில் அந்தச் சொற்பொருள் வரையறுக்கப்பட்டிருந்தால் அந்தச் சட்டங்களின் பொருள்களை, அந்த சொற்களும், சொல்லமைப்புகளும் கொண்டிருக்கும்.

# இயல் 2

**பிரிவு - 3**

**குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு பொதுக் கொள்கைகள் :**

இச்சட்டத்தின் செயலாட்சி நிர்வாகத்தில் கீழ்வரும் பொதுக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். அவையாவன:-

நடுவணரசு, மாநில அரசுகள், குழுமம் மற்றும் ஏனைய பிற அமைப்புகள் எதுவாக இருப்பினும், கீழ்க்காணும் அடிப்படைக் கொள்கைகளை வழிகாட்டும் நெறியாகக் கொள்ளுதல் வேண்டும் அவையாவன.

**(i) குற்றமற்றவர் என்ற ஊகத்திற்கான கொள்கை :**

அகவை பதினெட்டு ஆண்டுகள் வரை எந்தவொரு குழந்தையும் ஏதேனும் ஒரு தீய நோக்கம் அல்லது குற்ற உள்நோக்கம் இல்லாத ஒரு குற்றமற்றவர் என ஊகம் கொள்ளுதல் வேண்டும்.

**(ii) கண்ணியம் மற்றும் மதிப்புணர்வுக்கான கொள்கை :**

எல்லா மானிடர்களும் சமமான வகையில் கண்ணியத்துடனும், உரிமைகளுடனும் நடத்தப்பட வேண்டும்.

**(iii) பங்கேற்கும் உரிமைக்கான கொள்கை :**

ஒவ்வொரு குழந்தையும் அவரது நலப்பற்று பாதிக்கப்படும் அனைத்து நடைமுறைகள் மற்றும் முடிவுகளில், ஒவ்வொரு குழந்தையும் அவரது கேட்புரிமையும், பங்கேற்பதற்கான உரிமையும் பெற்றுள்ளார். அதில் குழந்தையின் கருத்தை அக்குழந்தையின் அகவை மற்றும் உளமுதிர்ச்சிக்கேற்ப அவர்தம் ஆலோசனையை உரியவாறு எடுத்துக் கொள்ள வேண்டும்.

**(iv) தேர்ந்த உயர்நலப்பற்றுக் கொள்கை :**

குழந்தை தொடர்பான எல்லா முடிவுகளும், குழந்தையின் தேர்ந்த உயர் நலப்பற்றே தலையாய ஓர்வாக (பரிசீலனை) முழுமையான உள்ளார்ந்த ஆற்றலை வெளிக் கொணர்ந்து, வளர்ச்சிக்கு உதவுவதாக அமைந்திட வேண்டும்.

**(v) குடும்ப பொறுப்படைவுக் கொள்கை :**

குழந்தையைப் பராமரித்தல், வளர்த்தல், பாதுகாத்தல் உள்ளடக்கி நேர்விற்கேற்ப, அம்மகவை ஈன்றெடுத்த குடும்பம் அல்லது தத்தெடுத்த பெற்றோர் அல்லது வளர்ப்பு பெற்றோருக்கு, முதன்மையான பொறுப்பாக அமைந்திட வேண்டும்.

**(vi) பாதுகாத்தல் கொள்கை :**

குழந்தை பாதுகாப்பாக இருத்தல் மற்றும் குழந்தையின் பராமரிப்புக்கும், பாதுகாப்புத் திட்டத்தின் போதும், அதன் பின்னரும் எந்தவிதமான தீங்கு, முறைகேடாகப் பயன்படுத்துதல் இவற்றிற்கு உட்படுத்தப்படவில்லை என்பதை உறுதி செய்வதற்கான எல்லாவித செயல் நடவடிக்கையும் எடுக்க வேண்டும்.

**(vii) நேர்மறை உறுதி நடவடிக்கைகள் குறித்த கொள்கை :**

இச்சட்டத்தின் கீழ், குழந்தைகள் நன்முறையில் வளர்க்கவும் தனக்கே உரிய அடையாளம் மேம்படுத்துவதற்கு உதவும் வகையில், வசதி ஏற்படுத்த, குழந்தைகளுக்கான ஊறுபாடுகளைக் குறைப்பதை உள்ளடக்கி செயல்விக்கும் சூழ்நிலையை வழங்குவதற்கான இச்சட்டத்தின் கீழ் தலையீட்டிற்கான தேவைக்கு குடும்பம் மற்றும் சமுதாயம் செயல் நடவடிக்கைகள் கொண்ட அனைத்து மூலவள ஆதாரங்கள் ஒருங்கே திரட்டப்பட வேண்டும்.

**(viii) சமூகத்தில் களங்கம் விளைவிக்காத சொற்பொருள் ஆய்வுக் கொள்கை**

ஒரு குழந்தை தொடர்பான நடைமுறைகளில், அக்குழந்தைக்கு எதிர் நிலையில் பொல்லாங்கு சுமத்தும்படியாக அல்லது குற்றப்பழி சுமத்துவதற்கான சொற்கள் எதனையும் பயன்படுத்தக் கூடாது.

**(ix) உரிமைகளை விட்டுக் கொடுக்காததற்கான கொள்கை :**

குழந்தை (அ) குழந்தையின் சார்பாகச் செயலாற்றும் நபர் அல்லது (இளைஞர் நீதிக்) குழுமம் அல்லது (குழந்தை நலக்) குழு நாடி வேண்டப்பட்டாலும், குழந்தையின் எந்தவொரு உரிமையையும் விட்டுக் கொடுக்க அனுமதிக்கலாகாது அல்லது செல்லத்தக்கதல்ல. மற்றும் குழந்தை தனது அடிப்படை உரிமையைப் பயன்படுத்தவில்லை என்றால், அவ்வுரிமையை விட்டுக் கொடுத்ததாக ஆகி விடாது.

**(x) சமத்துவம், மற்றும் வேற்றுமைப்படுத்தாத கொள்கை :**

குழந்தையின் பாலினம், சாதி, இனம், பிறப்பிடம், உடல் ஊனம், சமத்துவத்துடன் நுழைவுரிமை ஆகியவற்றை உள்ளடக்கிய எதன் காரணமாகவும், குழந்தைக்கு

எதிராக வேற்றுமை, பாகுபாடு காட்டுதல் கூடாது. ஒவ்வொரு குழந்தைக்கும் சமவாய்ப்பு வழங்கி இணையாக நடத்துதல் வேண்டும்.

**(xi) தனிமை மற்றும் கமுக்கத்தன்மை உரிமைக்கான கொள்கை :**

எல்லா வழிவகைகளிலும் மற்றும் நீதிமன்ற நடைமுறைகள் முழுவதிலும் ஒவ்வொரு குழந்தையும், தனது தனிமையையும் (அந்தரங்கத்தையும்) கமுக்கத் தன்மையையும் (இரகசியத் தன்மையையும்) பாதுகாக்கும் உரிமையைப் பெற்றுள்ளது.

**(xii) நிறுவனத்தில் பராமரிப்பு என்பது இறுதிக்கட்ட புகலிடமாகவே அமையும் நடவடிக்கை என்பதான கொள்கை :**

ஒரு நியாயமான விசாரணைக்குப் பின்னர், இறுதிநிலைப் புகலிடத்தின் அடியெடுத்தலாக, நிறுவனப் பராமரிப்பில் குழந்தை ஒன்றைத் தங்க வைத்தல் வேண்டும்.

**(xiii) தாய் இல்லம் திரும்புதல் அல்லது முன்நிலையில் மீளப்பெறுதல் (மீள்புனரமைப்பு) கொள்கை :**

இளைஞர் நீதிமுறைத் திட்டத்தில் ஒவ்வொரு குழந்தையும், கூடியவரை குடும்பத்தாருடன் மீள இணைவதற்கான உரிமையைப் பெற்றுள்ளது. அத்தகைய முன்நிலையில் மீளப்பெறுதலும், (மீள்புனரமைப்பும்) தாய் இல்லமீள்கையும் அந்தக் குழந்தையின் தேர்ந்த உயர் நலப் பற்றுக்கு ஏற்புடையாக இருந்தாலன்றி மற்றவாறு இச்சட்டத்தின் வீச்செல்லைக்கு வரும் முன்பாகவே அத்தகைய சமூக பொருளாதார மற்றும் பண்பாட்டுத் தளத்தில் அக்குழந்தையை வைத்தல் தகும்.

**(xiv) புதியதோர் தொடக்கக் கொள்கை :**

தனிவகைச் சூழல்களில் தவிர, இளைஞர் நீதிமுறைச் செயற்திட்டத்தின் கீழ்வரும் அக்குழந்தையின் முந்தையப் பதிவுருக்கள் அனைத்தும் நீக்கப்பட வேண்டும்.

**(xv) மாற்றுத்திசைப் பாதையில் உட்படுத்தும் கொள்கை :**

குழந்தையின் உயரிய நலப்பற்றுக்கு அல்லது ஒட்டுமொத்த சமூகத்திற்கு ஏற்புடையதாக இருந்தாலன்றி, சட்டத்துடன் முரண்படும் குழந்தைகளை நீதித்துறை செயல்முறைகளை நாடாது மாற்றுவழித் தீர்வு செயல்முறைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

**(xvi) இயற்கை நீதிக் கொள்கை :**

இச்சட்டத்தின் கீழாக, சட்டப்படியான தகுதிறத்தில் செயற்படும் அனைத்து நபர்கள் அல்லது அமைப்புகள் ஒரு நேர்மையான கேட்புரிமை, மனச்சாய்வுக்கு எதிரான நீதிமன்ற கட்டளை முடிவு, மீளாய்வுக்கான உரிமை ஆகியவற்றை உள்ளடக்கிய நேரிய அடிப்படை நடைமுறை சார்ந்த தரநிலை கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

# இயல் 3

**பிரவு - 4**

**இளைஞர் நீதிக்குழுமம் :**

(1) 1973(2/1974) - வருடத்திய குற்ற விசாரணை முறைச் சட்டத்தில் என்ன கூறப்பட்டிருப்பினும் மாநில அரசு, இச்சட்டத்தின் கீழாக சட்டத்திற்கு முரணாகச் செயல்படும் குழந்தைகள் தொடர்பான அதிகாரங்களைப் பயன்படுத்தவும், அதன் செயற்கடமைகளை ஆற்றுவதற்கும், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இளைஞர் நீதிக் குழுமங்களை நிறுவுதல் வேண்டும்.

(2) பெருநகர் தலைமைக் குற்றவியல் நடுவர் (அ) நீதித்துறை தலைமை குற்றவியல் நடுவர் அல்லாத, குறைந்து மூன்றாண்டுகள் பட்டறிவு (அனுபவம்) கொண்ட ஒரு பெருநகர் குற்றவியல் நடுவர் (அ) ஒரு நீதித்துறை குற்றவியல் நடுவரை (இனி முதன்மை நடுவர் என்றே சுட்டிக் குறிப்பிடப்படுவார்) மற்றும் அவர்களில் குறைந்தது ஒரு பெண்ணாக இருக்கிற, வகுத்துரைக்கப்படலாமென்கிற அத்தகைய வகையில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு சமூகப் பணியாளர்களைக் கொண்டமைந்த ஓர் ஆயத்தை (அமர்வை) ஒரு குழுமம் கொள்ள வேண்டும். அத்தகைய ஒவ்வொரு ஆயமும் (அமர்வும்) குற்றவிசாரணை முறைச் சட்டம், 1973 (2/1974)-ஆல் நேர்விற்கேற்ப ஒரு பெருநகரக் குற்றவியல் நடுவர் (அ) ஒரு நீதித்துறை முதல் வகுப்பு குற்றவியல் நடுவருக்கு, (அவர் எவராக இருப்பினும்) அளிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

(3) குழந்தைகள் தொடர்பான உடல்நலம், கல்வி, மற்றும் நலப்பணிகளில் குறைந்தது ஏழாண்டுகள் செயல்திறம் அல்லாத, அல்லது குழந்தை உளவியல், உளவியல் மருத்துவம், சமூகவியல் அல்லது சட்டம் ஆகியவற்றில் பட்டம் பெற்று பணியாற்றுபவர் அல்லாத சமூகப் பணியாளர் எவரையும், இந்தக் குழுமத்தின் ஒரு உறுப்பினராக பணி நியமனம் செய்தல் கூடாது.

(4) கீழ்க்காணும் நபர் எவரும் இக்குழுமத்தின் ஒரு உறுப்பினராகத் தேர்வு செய்யத் தகுதி அற்றவராகிறார்:-

(i) மனித உரிமைகள் மீறுகை அல்லது குழந்தை உரிமை மீறுகை தொடர்பாக ஏதேனுமொரு முந்தையகாலப் பதிவேட்டில் உள்ள நபர்

(ii) இழிநடத்தையில் ஈடுபட்ட குற்றச் செயலில் தொடர்பிருந்து, நீதித்துறையில் தண்டனைத் தீர்ப்பு பெற்றவர்; அத்தண்டனை திரும்பப் பெறாமல் (மாற்றி அமைக்கப்படாமல்) இருத்தல் அல்லது அத்தகைய குற்றச் செயலுக்கு முழு மன்னிப்பு வழங்கப்படாமல் இருத்தல்

(iii) நடுவணரசின் அல்லது மாநில அரசின் பணிப்பொறுப்பிலிருந்த அல்லது நடுவணரசிற்கு அல்லது மாநில அரசிற்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு தொழில் நிறுவனம் அல்லது கூட்டாண்மை நிறுவனப் பணியிலிருந்து நீக்கப்பட்டவர் அல்லது விலக்கப்பட்டவர்.

(iv) குழந்தையை முறைகேடாகப் பயன்படுத்துதல் அல்லது குழந்தை தொழிலாளர் முறையில் குழந்தையை வேலைக்கு அமர்த்துதல் அல்லது ஏதேனும் ஒரு மனித உரிமையை மீறியவர் அல்லது தீயொழுக்கச் செயல் புரிந்தவர்.

(5) குழுமத்தின் முதன்மை நடுவர் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும், அவர்கள் பணியமர்த்தப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்களுக்கான ஒரு காலவரையறைக்குள், வகுக்கப்படலாமென்றவாறு குழந்தைகளுக்கான பராமரிப்பு, பாதுகாப்பு, மறுவாழ்வு, சட்டவகையங்கள், மற்றும் நீதிமுறை ஆகியவற்றின் மீதான பதவி அமர்வுத் தொடக்கப் பயிற்சி மற்றும் கூருணர்வாக்கத்தைப் பெற மாநில அரசு உறுதிப்படுத்த வகை செய்ய வேண்டும்.

(6) குழும உறுப்பினர்களின் பதவிக்காலவரம்பு மற்றும் பணித்துறப்புமுறை ஆகியவை வரையறுக்கப்படலாம் என்ற அத்தகைய வழிமுறையில் அமைய வேண்டும்.

(7) குழுமத்தின் முதன்மை நடுவரைத் தவிர்த்து, எவரேனும் ஒரு உறுப்பினர் பணி நியமனத்தை கீழ்க்கண்ட சூழலில் மாநில அரசு ஒரு விசாரணை நடத்தியதற்குப் பின்பு நீக்கறவு செய்யலாம்:-

(i) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தை அவர் முறையற்ற வகையில் பயன்படுத்திய குற்றவாளி எனக் கண்டறியப்படும்போது;

(ii) ஏற்புடைய காரணம் ஏதுமின்றி, குழுமத்தின் நடவடிக்கை கூட்டங்களில் தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் கலந்து கொள்ளத் தவறினால் (அல்லது)

(iii) குழுமத்தின் தொடர்கூட்ட அமர்வுகளில் ஒரு ஆண்டில் நான்கில் மூன்று பங்கிற்கும் குறைவில்லாமல் கலந்து கொள்ளத் தவறினால்;

(iv) ஒரு உறுப்பினராகப் பணியிலிருக்கும் போது சட்ட உட்பிரிவு (4)-இன் கீழாக தகுதியற்றவரானால்;

**பிரிவு - 5**

**விசாரணை நடைமுறையின் போக்கில் குழந்தை நிலை முடிவுறும் போது, அந்த நபரின் வைப்பிடம் :**

இச்சட்டத்தின் கீழ் எவரேனும் ஒரு குழந்தையின் பொருட்டு விசாரணை தொடங்கப் பெற்று நடந்து கொண்டிருக்கும்போது, அக்குழந்தை பதினெட்டு வயதை நிறைவெய்திடினும், இச்சட்டத்திலோ அல்லது செயல்பாட்டிலுள்ள வேறெந்த சட்டத்திலோ அமையப் பெற்ற எவற்றையும் கருத்தில் கொள்ளாது,

அவ்விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர், குழந்தையாகவே தொடர்கிறார் என்றவாறு, அவருக்கான ஆணைகள் இடப்படலாம்.

**பிரிவு - 6**

**நபர் ஒருவர் பதினெட்டு வயதிற்குக் கீழ் குற்றம் ஒன்று புரியப்படும் போது, அந்த நபருக்கான வைப்பிடம் :**

(1) யாரேனும் ஒருவர் பதினெட்டு ஆண்டுகள் வயதிற்கு கீழ் இருக்கும்போது, செய்த குற்றத்திற்காக, பதினெட்டு வயது நிறைவெய்திய பின்னர் அவர் பிடிக்கப்பட்டிருப்பின் அத்தகைய நபரை, இச்சட்டப்பிரிவின் வகையங்களுக்கு உட்படுத்தி விசாரணையின் போது அவரை ஒரு குழந்தையாகவே பாவித்து (கருதப்பட்டு) நடத்துதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)-இல் குறித்துச் சுட்டிய நபர் (இளைஞர் நீதிக்) குழுமத்தால் பிணையில் விடுவிக்கப்படாதிருப்பின், அத்தகைய விசாரணை முடிவெய்தும் வரை, அவரை ஒரு பாதுகாப்பு அமைவிடத்தில் வைக்க வேண்டும்.

(3) உட்பிரிவு (1)-இல் குறித்துச் சுட்டிய நபரை இச்சட்டத்தின் வகையங்களின் கீழாக குறித்துரைக்கப்பட்ட நடைமுறையின்படி நடத்துதல் வேண்டும்.

**பிரிவு - 7**

**குழுமம் தொடர்பான நடைமுறை :**

(1) அவ்வப்போது வரையறுக்கப்படுகின்ற காலங்களில், விதிகளின்படி குழுமம் கூடி தன் அலுவல் பணிகளை ஆற்ற வேண்டும் என்பதையும், விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதையும் மற்றும் எல்லா நடைமுறைகளும் குழந்தைக்கு உகந்ததாக இருத்தல் வேண்டும் என்பதையும், அப்பணியிடம் ஏனைய நீதிமன்றங்களைப் போன்றில்லாது குழந்தையை அச்சுறுத்தலாக இல்லாதிருக்க வேண்டும் என்பதையும் உறுதி செய்திடல் வேண்டும்.

(2) சட்டத்திற்கு முரணான ஒரு குழந்தை, குழுமத்தில் கூட்டத்தொடர் இல்லாத போது, குழுமத்தின் உறுப்பினர் ஒருவர் முன்பாகவும் முன்னிலைப்படுத்தலாம்.

(3) கூட்டத் தொடருக்கு ஒரு உறுப்பினர் வரவில்லை என்ற காரணத்திற்காக குழுமத்தின் ஆணைகள் செல்லாதது ஆகி விடாது.

**வரம்புரையாக :**

இருப்பினும் வழக்கில் இறுதி நிலை ஆணையோ அல்லது பிரிவு 18 உட்பிரிவு (3)-ன் கீழ் ஆணையோ வழங்கப்படும்போது, குறைந்தபட்சம் முதன்மை நடுவர் உள்ளிட்ட இரண்டு உறுப்பினர்கள் கூட்டத்திலிருத்தல் வேண்டும்.

(4) குழும உறுப்பினர்களின் இடையேயான கருத்தில் ஏதேனும் முரண்பாடு இருக்க நேர்ந்தால், பெரும்பான்மைக் கருத்து மேலோங்கி நிற்கும்; ஆனால் அத்தகைய பெரும்பான்மை இல்லையெனில், குற்றவியல் முதன்மை நடுவரின் கருத்தே மேலோங்கி நிற்றல் வேண்டும் (அதாவது, முதன்மை நடுவரின் கருத்தே இறுதியானது).

**பிரிவு - 8**

**குழுமங்களின் அதிகாரங்கள் அலுவல்கள் மற்றும் பொறுப்படைவுகள்**

(1) தற்போது நடைமுறையில் உள்ள பிற சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருப்பினும் ஆனால், இச்சட்டத்தில் மற்ற வகையில் வெளிப்படையாகச் சொல்லப்பட்டாலன்றி, ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறுவப்பட்டுள்ள குழுமம், அதன் அதிகார வரம்பெல்லைக்கு உட்பட்ட பகுதியில், சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகள் தொடர்பாக இச்சட்டத்தின் கீழ் உள்ள எல்லா நடைமுறைகளுக்கும் உரிய செயலுரிமைகளைக் கொண்டிருக்கும்.

(2) இச்சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களை பிரிவு 19-ன் கீழ் மேல் முறையீடு, சீராய்வு மனு அல்லது வேறு வகையில் வழக்கு முன்னிறுத்தும்போது, உயர்நீதிமன்றமும், குழந்தைகள் நீதிமன்றமும் பிரயோகிக்கும்.

(3) குழுமத்தின் செயற்பணிகள் மற்றும் பொறுப்படைவுகள், கீழ்வருவனவற்றில் அடங்கும்:- அவற்றிற்கு முன்பாக செயல் நடவடிக்கைகள் வரும்போது பயன்படுத்தப்படலாம்.

(அ) நடவடிக்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் முன்னேற உணர்த்தப்பட்டவிதமாக குழந்தையின் பங்கேற்றலையும், அதன் பெற்றோர் (அ) பாதுகாவலரின் பங்கேற்றலையும் உறுதி செய்வது.

(ஆ) குழந்தையை கையகப்படுத்தும், நடைமுறை முழுமையும் அதாவது விசாரணை, பிற்காப்பு, மறுவாழ்வு, அக்குழந்தையின் உரிமைகளின் பாதுகாப்பு என்பதில் உறுதி செய்வதாக அமைய வேண்டும்.

(இ) சட்டப்பணிகள் அமைப்புகளின் துணையோடு குழந்தைக்கு, கட்டணமில்லா சட்ட உதவி கிடைக்கப்பெறும் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஈ) எங்கெல்லாம் அவசியம் ஏற்படுகிறதோ அங்கெல்லாம், வழக்கு நடைமுறைகளில் பயன்படுத்தப்படும் மொழியைக் குழந்தை புரிந்து கொள்ள இயலாதிருக்கையில், தகவல் தேவையெனில், குழுமம் குறித்துரைத்த கட்டணத்தைச் செலுத்தி தகுதியும் பட்டறிவும் (அனுபவம்) உள்ள பொருள்கோள் விளக்குநர் அல்லது மொழி பெயர்ப்பாளரை குழுமம் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(உ) வழக்கு விசாரணையின் போது சமூகப்புலன் விசாரணை மேற்கொள்வதற்கு மற்றும் எத்தகைய சூழலில் சாட்டப்பட்ட அக்குற்றம் செய்யப்பட்டது என்பதை அறிந்து கொள்ள குழுமத்தின் முன்பாக முதலில் முன்னிலையான நாளிலிருந்து பதினைந்து நாட்கள் கால அளவிற்குள், ஒரு சமூகப்புலனாய்வு அறிக்கையை அளிக்க நன்னடத்தை அலுவலர் அல்லது நன்னடத்தை அலுவலர் கிடைக்கவில்லையெனில், குழந்தை நல அலுவலர் அல்லது ஒரு சமூகப் பணியாளருக்கு ஆணையிட வேண்டும்.

(ஊ) சட்டத்திற்கு முரணான வகையில் குற்றச் செயல் புரிந்ததாகச் சாட்டப்படும் குழந்தையின் வழக்கை பிரிவு 14-இல் வகுத்துரைத்தவாறு விசாரணை நடத்தி நீதிமன்றத் தீர்ப்புக்கு அல்லது வழக்கின் தீர்வுக்கு வகை செய்தல் வேண்டும்.

(எ) எந்தவொரு படிநிலையிலும், சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதாகச் சாட்டுரைக்கப்பட்ட குழந்தைக்கு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவையெனில் அந்த பொருட்பாட்டினை (குழந்தை நலக்) குழுவிற்கு மாற்றம் செய்ய வேண்டும். அதனால் சட்டத்திற்கு முரணான ஒரு குழந்தை, ஆனால் அதே தருணத்தில் பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தை என ஒரே மாதிரியாக அங்கீகரிக்கப்படும்போது குழுவும் குழுமமும் தலையிட்டு தொடர்பு கொண்டு சேர்ந்திணைந்து ஈடுபடுவது அவசியமாகும்.

(ஏ) நன்னடத்தை அலுவலர் அல்லது மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு அல்லது ஒரு அரசு சாரா அமைப்பின் ஒரு உறுப்பினரால் தேவையான வகையில் பின்தொடர் நடவடிக்கையை மேற்கொண்டு, குழந்தையின் மறு வாழ்வுக்காக, தனி ஒருவர் பராமரிப்பு செயற்திட்டத்தை உள்ளடக்கி, அப்பொருட்பாட்டின் தீர்வு காண்பதும், இறுதி ஆணை பிறப்பிப்பதும் இதனுள் உள்ளடங்கும்.

(ஐ) சட்டத்திற்கு முரணான குழந்தையின் பராமரிப்பு தொடர்பாக தக்காரை அறிவிப்பதற்கான விசாரணை மேற்கொள்ளுதல்

(ஒ) சட்டத்திற்கு முரணான குழந்தைகளை நிறுத்தி வைத்திருக்கும் உறையுள் வசதிகளை, சிறுமக்கால அளவில் மாதம் ஒரு முறையேனும் சென்று பார்வையிட வேண்டும். குழந்தைக்கு வழங்கப் பெறும் பணித்தர மேம்பாட்டை, மேலும் உயர்த்தும் செயற்பாட்டை, மாவட்ட குழந்தை பாதுகாப்பு பிரிவு மற்றும் மாநில அரசிற்கு பரிந்துரைத்தல்.

(ஓ) இச்சட்டம் அல்லது அமலாக்கத்தில் உள்ள ஏதேனும் ஒரு பிற சட்டத்தின் கீழ், சட்டத்திற்கு முரணான எவரேனும் ஒரு குழந்தைக்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றச் செயல் தொடர்பாக குற்றமுறையீடு (புகார்) அளித்ததன் பேரில், முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ய காவல் துறைக்கு ஆணையிடுதல்.

(ஔ) 'சிறைகளை முறைப்படியாக ஆய்வு செய்தல்' என்பதன் பொருள், சிறையில் வயது வந்தோருடன் ஒரு குழந்தை எவரும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளாரா

என்பதை கண்டறிவதற்கேயாகும்; அங்ஙனம் தங்க வைக்கப்பட்டிருப்பின் அக்குழந்தையை கூர்நோக்கில்லத்திற்கு இடமாற்றம் செய்ய உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(ஃ) குறித்துரைக்கப்படலாம் என்ற ஏதேனுமொரு ஏனைய அலுவல்.

**பிரிவு - 9**

**(ஒரு நீதித்துறை குற்றவியல் நடுவர்) இச்சட்டத்தின் கீழாக அதிகாரம் பெறப்படாத போது, ஒரு குற்றவியல் நடுவர் பின்பற்ற வேண்டிய நடைமுறை :**

(1) இச்சட்டத்தின் கீழாக (இளைஞர் நீதிக்) குழுமத்தின் அதிகாரங்கள் அளிக்கப்பட்டிராத ஒரு நீதித்துறை குற்றவியல் நடுவர், குற்றம் செய்ததாக சாட்டுரைக்கப்பட்டு மற்றும் அவரின் முன்பாக முன்னிலைப்படுத்த கொணரப்பட்ட நபர் ஒரு குழந்தை எனக் கருதும் போது, தாமதம் சிறிதும் இன்றி, அத்தகைய தனது கருத்தைப் பதிவு செய்தும் மற்றும் அதிகார வரம்பெல்லைக்குட்பட்ட குழுமத்திற்கு அத்தகைய செயல் நடவடிக்கைகள் தொடர்பான பதிவுடன் உடனடியாக அக்குழந்தையை முன்னிலைப்படுத்த அனுப்பி வைத்தல் வேண்டும்.

(2) குற்றம் செய்ததாகச் சாட்டப்படும் நபர், தன்னைக் குழுமத்திற்கு அனுப்பாமல் பிறிதொரு நீதிமன்றத்திற்கு அனுப்புமாறு கோரும்போது, அவர் குழந்தையாக இருப்பின் அல்லது குற்றம் புரிந்த நாளில் அவர் குழந்தையாக இருந்துள்ளார் எனக் கோரும் நேர்வில் அல்லது அக்குற்றச் செயல் புரிந்த நாளில் அந்த நபர் குழந்தையாக இருந்தார் என நீதிமன்றம் தானாகவே கருதினால், சொல்லப்பட்ட அந்த நீதிமன்றம் அத்தகைய நபரின் அகவையை (வயதை) நிர்ணயிக்க ஒரு விசாரணையை மேற்கொண்டு, தேவையெனில் அதற்கான சாட்சியத்தைப் பெற வேண்டும். (ஆனால் உறுதிமொழி ஆவணத்தால் எடுத்தலாகாது) மற்றும் அத்தகைய நபரின் நெருங்கிய அளவிலான அகவையைக் குறித்துக் கண்டறிந்ததைப் பதிவு செய்தல் வேண்டும்.

**வரம்புரையாக :**

அத்தகைய ஒரு உரிமைக் கோரிக்கையை எந்தவொரு நீதிமன்றத்தின் முன்பாகவும் எழுப்பலாம்; அதனை வழக்கின் இறுதித் தீர்விற்குப் பின்பும் கூட, எந்தவொரு கட்டத்திலும் அங்கீகரிக்கலாம் மற்றும் அத்தகைய ஒரு கோரிக்கை இச்சட்டத்தின் தொடக்க நாளில் அல்லது அதற்கு முன்பாக ஒரு குழந்தை நிலையைக் கடந்திருக்கிறதெனினும் கூட, இச்சட்டத்தின் அடங்கியுள்ள வகையங்கள் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படியும் முடிவெடுக்கப்பட வேண்டும்.

(3) ஒரு நபர் ஒரு குற்றச் செயலைச் செய்துள்ளார் மற்றும் குற்றச் செயல் செய்யப்பட்ட நாளில் ஒரு குழந்தையாக இருந்துள்ளார் எனக் கண்டறியப்பட்டால், அதன் தொடர்பாக ஏற்புடைய ஆணைகளைப் பிறப்பிப்பதற்கு, அக்குழந்தையை

குழுமத்திற்கு அனுப்புதல் வேண்டும்; மற்றும் அக்குழந்தை தொடர்பாக, நீதிமன்றம் ஏதேனும் தண்டனை வழங்கி இருப்பின், அது எந்தவொரு விளைபயனையும் கொண்டதாகக் கருதப்படக் கூடாது.

(4) இந்த சட்டத்தின் கீழ் ஒரு நபர் பாதுகாப்புக் காவலில் வைக்கத் தேவைப்படும்போது, அவர் ஒரு குழந்தை என கோரிக்கை விசாரணையில் உள்ளபோது எழுந்தால் அத்தகைய நபர், இடைப்பட்ட காலத்தில் ஒரு பாதுகாப்பு அமைவிடத்தில் வைக்கப்பட வேண்டும்.

# இயல் 4

**பிரிவு - 10**

**சட்டத்துடன் முரண்பட்டவராகச் சாட்டுரைக்கப்பட்ட குழந்தையைக் கையகப்படுத்துதல் :**

(1) ஒரு குழந்தை சட்டத்திற்கு முரண்பட்டபோது, அவரைக் காவல் துறையினர் கையகப்படுத்துதல் வேண்டும். அக்குழந்தையை இளைஞர்க்கான காவல் தனிச்சிறப்பு பிரிவின் பொறுப்பில் அல்லது அதற்கென பெயர் குறிப்பிடப்பட்ட குழந்தை காவல் அலுவலரின் பொறுப்பில் வைக்க வேண்டும். அவர் அந்தக் குழந்தையைப் பிடித்த நேரத்திலிருந்து அவசியமான பயண நேரம் நீங்கலாக, எந்தவொரு கால இழப்பின்றி, இருபத்து நான்கு மணி நேரத்திற்குள்ளாக குழுமத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

**வரம்புரையாக :**

சட்டத்திற்கு முரண்பட்ட ஒரு குழந்தையை எந்தவொரு நேர்விலும் காவல் நிலையத்தின் காவல் வைப்பறையில் அல்லது சிறையில் வைத்து அடைக்கப்படலாகாது.

(2) இச்சட்டத்திற்கு முரணின்றி, ஒத்தவாறு மாநில அரசு கீழ்கண்ட விதிகள் உருவாக்க வேண்டும்.

(i) சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தையை (பதிவு செய்யப்பட்ட தன்னார்வ (அ) அரசுசாரா அமைப்புகள் உட்பட) உரிய நபர்கள் மூலம் குழுமத்தின் முன் ஒப்படைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

(ii) சட்டத்திற்கு முரண்பட்டவர் எனச் சாட்டப்பட்ட குழந்தையை நேர்விற்கேற்ப சிறார் கூர்நோக்கு இல்லத்திற்கோ அல்லது பாதுகாப்பு அமைவிடத்திற்கோ அனுப்புவதற்கான வழிமுறையை வரையறுக்க வேண்டும்.

**பிரிவு - 11**

**சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தை எவரது பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளரோ, அந்த நபரின் பங்கு :**

சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தை எவர் பொறுப்பில் உள்ளாரோ, அந்த ஆணை நடப்பில் உள்ளபோது, அந்தக் குழந்தைக்கு அவரே பொறுப்பாவார். சொல்லப்பட்ட அந்த நபர், அக்குழந்தையின் தாய் (அ) தந்தையாக இருந்தால், அவரே அந்தக் குழந்தையின் வாழ்க்கை பேணுகைக்குப் பொறுப்பாவார்.

**வரம்புரையாக :**

(இளைஞர் நீதிக்) குழுமத்தால் பகரப்பட்ட காலத்திற்கு, குழுமத்தால் பொறுப்பளித்த அந்த நபரின் பொறுப்பில் குழந்தை தொடர்ந்து இருத்தல் வேண்டும். அந்தக் குழந்தையின் பெற்றோர் அல்லது வேறெந்த பிற நபரும் உரிமைக் கோரிக்கை எழுப்பினால், அந்தக் குழந்தையைப் பொறுப்பேற்க, அவரின் பெற்றோர் அல்லது வேறு நபர் எவரும் தகுதியுடையவர் எனக் குழுமம் கருதினாலன்றி, மற்றவாறு அக்குழுமம் பொறுப்பளித்த நபரிடமே அக்குழந்தை தொடர்ந்து இருத்தல் வேண்டும்.

**பிரிவு - 12**

**சட்டத்திற்கு முரணானவர் என சாட்டப்பட்ட ஒரு குழந்தை என்று வெளிப்படையாகத் தோன்றும் போது, அந்த நபருக்கான பிணை :**

(1) எந்தவொரு நபர், ஒரு குழந்தை என வெளிப்படையாகத் தெரிகிறாரோ மற்றும் பிணையில் விடக்கூடிய (அ) பிணையில் விடக்கூடாத குற்றம் புரிந்ததாகச் சாட்டப்பட்டு, காவல் துறையினரால் பிடித்த அல்லது தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலோ அல்லது (இளைஞர் நீதிக்) குழுமத்தின் முன்பாக முன்னிலைப்படுத்தும்போது அல்லது குழுமத்தின் முன்பாகக் கொணரும்போது குற்றவிசாரணை முறைச் சட்டம் 1973(2/1974)-இல் அல்லது அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருந்தாலும், கருத்தில் இருத்தாமல் பிணையாளருடனோ அல்லது பிணையாளர் இல்லாமலோ பிணையில் விடப்பட வேண்டும். அல்லது நன்னடத்தை அலுவலரின் மேற்பார்வையில் அல்லது தக்கார் ஒருவரின் பாதுகாப்பில் பிணையில் விடுவிக்கலாம்.

**வரம்புரையாக :**

அத்தகைய நபர் விடுவிக்கப்படும்போது எவரேனும் ஒரு வெளிப்படையாகத் தெரியப்பட்ட ஒரு குற்றவாளியுடன் அவர் கூட்டாளியாக சேரக்கூடும் என நம்புவதற்குப் போதிய காரணம் இருக்கும் நிலையில் அல்லது சொல்லப்பட்ட நபரை அறநீதி அளவில், உடலளவில் அல்லது உள்ளத்தளவில் ஆபத்தை விளைவிக்கும் அல்லது நீதியின் குறிக்கோள் தோற்கடிக்கப்படும் என நம்புதவற்குப்

போதிய காரணம் இருப்பதாகத் தோன்றினால், அத்தகைய நபர் அவ்விதமாகப் பிணையில் விடுவிக்கப்படலாகாது. மற்றும் பிணையை மறுப்பதற்கான காரணங்களையும் அது அத்தகைய முடிவிற்காக இட்டுச் சென்ற சூழலையும் குழுமம் பதிவு செய்தல் வேண்டும்.

(2) கையகப்படுத்தப்பட்ட அந்த நபர் காவல் நிலையத்தின் பொறுப்பு அலுவலரால் சட்ட உட்பிரிவு (1)-ன் கீழாக பிணையில் விடுவிக்கப்படாதிருக்கும் போது ஒரு குழுமத்தின் முன்பாக கொணரப்படும் வரையில், அவரை வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய முறையில் அந்தக் காவல் நிலைய பொறுப்பு அலுவலர், சிறார் கூர்நோக்கில்லத்தில் மட்டுமே வைக்க வேண்டும்.

(3) குழுமத்தால் சட்ட உட்பிரிவு (1)-இன் கீழாக அத்தகைய நபர் பிணையில் விடுவிக்கப்படாதபோது, அவரை ஒரு சிறார் கூர்நோக்கில்லம் அல்லது பாதுகாப்பு அமைவிடத்திற்கு அது எதுவாகவிருப்பினும் அனுப்ப ஆணையில் குறிப்பிடலாமென்ற அந்த நபர் தொடர்பான விசாரணை முடிவுறாதிருக்கும் அத்தகைய காலத்திற்கு ஆணை ஒன்றைப் பிறப்பிக்க வேண்டும்.

(4) சட்டத்திற்கு முரண்பட்ட ஒரு குழந்தை, பிணை ஆணையில் விதிக்கப்பட்ட வரைக்கட்டுகளை (நிபந்தனைகளை) ஏழு நாட்களுக்குள் நிறைவேற்ற இயலாதபோது, அந்த வரைக்கட்டுகளை (நிபந்தனைகளை) மாற்றி அமைக்க அந்த குழந்தையை குழுமத்தின் முன்பாக முன்னிலையாகி ஒப்படைக்க வேண்டும்.

**பிரிவு - 13**

**பெற்றோர், காப்பாளர் அல்லது நன்னடத்தை அலுவலருக்கு தகவல் தெரிவித்தல் :**

(1) சட்டத்திற்கு முரணான ஒரு குழந்தை கையகப்படுத்தப்பட்டிருக்கும்போது, காவல் நிலையத்தில், பெயர் குறித்து பணியமர்த்தப்பட்ட அலுவலராக குழந்தை நலக் காவல் அலுவலர் அல்லது இளைஞர் நல சிறப்பு காவல் பிரிவு இதில் அந்த குழந்தை எங்கு கொணரப்பட்டுள்ளாரோ, அக்குழந்தையைக் கையகப்படுத்தியவுடன் விரைந்து அந்தத் தகவலை:-

(i) அந்த குழந்தையின் பெற்றோர் அல்லது காப்பாளர் கண்டறியப்பட முடிந்தால், அவர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்; அக்குழந்தை எந்தக் குழுமத்திடம் ஒப்படைக்கப்படுகிறாரோ அதன் முன்பாக முன்னிலையாக அவர்களுக்கு ஆணையிட வேண்டும்.

(ii) நன்னடத்தை அலுவலர் அல்லது அவர் கிடைக்கவில்லையெனில் ஒரு குழந்தை நல அலுவலருக்கு, அக்குழந்தையின் முன்வரலாறு மற்றும் குடும்பப் பின்னணி மற்றும் உசாவுகை மேற்கொள்ள குழுமத்திற்கு உற்றுழி உதவும் வகையில், பிற முக்கிய சூழல் தொடர்பான செய்தி உள்ளடக்கிய ஒரு சமூகப்புலனாய்வு அறிக்கையை, இருவார காலத்திற்குள்ளாக தயாரித்து அளிக்க வேண்டும்.

(2) குழந்தை ஒருவர் பிணையில் விடுவிக்கப்படும்போது, அந்த குழுமம் நன்னடத்தை அலுவலர் அல்லது குழந்தை நல அலுவலரிடம் தெரிவிக்க வேண்டும்.

**பிரிவு - 14**

**சட்டத்திற்கு முரணான குழந்தை தொடர்பாக, குழுமத்தால் விசாரணை :**

(1) சட்டத்திற்கு முரண்பட்டவராக குற்றம் சாட்டப்படும் ஒரு குழந்தை குழுமத்தின் முன்பாக முன்னிலையாகும்போது, இச்சட்டத்தின் வகையங்களுக்கிணங்க ஒரு விசாரணையை குழுமம் மேற்கொள்ள வேண்டும். மற்றும் இச்சட்டத்தின் பிரிவு 17 மற்றும் 18-இன் கீழ் அந்தக் குழந்தை தொடர்பாக தக்கதெனக் கருதும் அத்தகைய ஆணையைப் பிறப்பிக்க வேண்டும்.

(2) (இளைஞர் நீதிக்) குழுமத்தின் முன்பாக முதலில் குழந்தை முன்னிலையான நாளிலிருந்து, இப்பிரிவின் கீழான விசாரணை நான்கு மாத காலத்திற்குள்ளாக முடிக்கப்பட வேண்டும். மேலும் கால நீட்டிப்பு தேவைப்பட்டால், மேற்கொண்டு இரு மாத காலத்திற்கு நீட்டிப்பு வழங்கலாம். சூழல் மற்றும் காரணிகளை எழுத்துருவில் பதிவு செய்த பின்னர், அத்தகைய கால நீட்சியை வழங்கலாம்.

(3) சட்டப் பிரிவு 15-இன் கீழான கொடுங் குற்றங்கள் தொடர்பான தொடக்க நிலை மதிப்பீடு, குழந்தை குழுமத்தின் முன்பாக முதலில் முன்னிலையான நாளிலிருந்து மூன்று மாத கால வரம்பிற்குள்ளாக குழுமத்தில் முடிவு செய்யப்பட வேண்டும்.

(4) சிறு குற்றங்கள் தொடர்பாக உட்பிரிவு (2)-இன் கீழ் குழுமத்தால் நடத்தப்பட்ட விசாரணை, காலநீட்சிக்குப் பின்னரும் கூட தொடர்ந்து முடிவுறாதிருந்தால், அந்த செயல்முறைகள் முடித்து வைக்கப்பட்ட வேண்டும்.

**வரம்புரையாக :**

கடுமையான குற்றங்கள் அல்லது கொடுங் குற்றங்களில் குழுமம் விசாரணையை முடிப்பதற்கு மேலும் கால நீட்டிப்பு தேவையாகும் நேர்வில் தலைமை நீதித்துறை குற்றவியல் நடுவரோ அல்லது தலைமைப் பெருநகர குற்றவியல் நடுவரோ எழுத்துருவில் காரணங்களைப் பதிவு செய்து மேற்கொண்டு கால நீட்சி வழங்கலாம்.

குழுமம் நேரிய மற்றும் விரைவான விசாரணையை உறுதிப்படுத்தும் வகையில் குழுமம் கீழ்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(5) (அ) விசாரணையின் தொடக்கக் காலத்தில், சட்டத்திற்கு முரண்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட குழந்தை, காவல் துறையினரால், வழக்குரைஞர் (அ) நன்னடத்தை அலுவலர், உள்ளிட்ட பிற நபர் எவராலும் தவறாக நடத்தப்படுவதற்கு உள்ளாக்கப்படவில்லை என்பதில் குழுமம் தாமாகவே உள நிறைவு கொள்ள வேண்டும். மற்றும் அதனால் அத்தகயை முறைகேடான நடத்தையின் நேர்வில், சரி செய்யும் திருத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

(ஆ) இச்சட்டத்தின் கீழ் அனைத்து வழக்குகளும் இயன்ற வரை எளிய முறையில் நடவடிக்கைகள் நடத்தப்பட வேண்டும். மற்றும் எந்தக் குழந்தைக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளதோ அந்தக் குழந்தையின் பாதுகாப்பு உறுதி செய்தல் வேண்டும். வழக்கு விசாரணை நடைமுறையின்போது குழந்தையை இணக்க முறையில் நடத்துவதற்கான சூழலை உருவாக்க வேண்டும்.

(இ) குழுமத்தின் முன்பாக கொணரப்பட்ட ஒவ்வொரு குழந்தைக்கும் விசாரணையைக் கேட்டறிந்து பதிலளிக்கவும் மற்றும் அதில் பங்கு கொள்வதற்கும் வாய்ப்பு தரப்பட வேண்டும்.

(ஈ) சிறு குற்றங்கள் தொடர்பான வழக்குகளை, குழுமம், குற்றவிசாரணை முறைச்சட்டத்தின் 1973 (2/1973)-இன் கீழாக வகுத்துரைக்கப்பட்ட நடைமுறைகளின்படி, சுருக்க விசாரணை நடைமுறைகளைப் பின்பற்றி தீர்வு செய்யப்பட வேண்டும்.

(உ) கடுமையான குற்றங்கள் தொடர்பான விசாரணையை குழுமம், குற்ற விசாரணை முறைச்சட்டம், 1973 (2/1973)இன் கீழாக அழைப்பாணை வழக்குகளுக்குரிய விசாரணை நடைமுறைகளைக் கடைப்பிடித்து, குழுமத்தால் வழக்கு தீர்வு செய்யப்பட வேண்டும்.

(ஊ) கொடுங்குற்றங்கள் குறித்த விசாரணை :

(i) குற்றச் செயல் புரிந்த நாளில் (தேதியில்) குழந்தை பதினாறு ஆண்டுகள் வயதிற்கு கீழ் இருக்கும்போது, கூறு(உ)ன் கீழ், குழுமத்தால் வழக்கு தீர்வு செய்யப்பட வேண்டும்.

(ii) குற்றம் புரிந்த நாளன்று பதினாறு வயதிற்கு மேற்பட்ட குழந்தை மீது சட்டப் பிரிவு 15-இன் கிழ் வரையறுக்கப்பட்டுள்ள முறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**பிரிவு - 15**

**கொடுங் குற்றத்தின் தொடர்பாக, குழுமத்தின் முதனிலை மதிப்பீடு :**

(1) பதினாறு வயது நிறைவெய்திய அல்லது பதினாறு வயதிற்கு மேற்பட்ட குழந்தையால் கொடுங்குற்றம் புரிந்ததாகக் கூறப்படும் நேர்வில் அக்குற்றத்தைப் புரிய, அக்குழந்தைக்கு உள மற்றும் உடல் அளவிலான திறன், அக்குற்றத்தின் பின் விளைவுகள் அறிந்து கொள்ளும் திறன் மற்றும் எத்தகைய சூழலில் அக்குற்றம் புரிந்ததாகச் சாட்டப்பட்டுள்ளது என்பதையும், அந்தச் சூழல் தொடர்பான முதனிலை மதிப்பீட்டை குழுமம் செய்ய வேண்டும். மற்றும் சட்டப்பிரிவு 18 உட்பிரிவு (3)-இன் வகையத்திற்கேற்ப, குழுமம் ஆணையிடலாம்.

**வரம்புரையாக :**

அத்தகைய ஒரு மதிப்பீட்டிற்காக பட்டறிவு மிக்க உளவியலார்கள் அல்லது உளவியல் சமூக செயற்பாட்டாளர்கள் அல்லது ஏனைய விற்பன்னர்களின் உதவியைக் கோரிப் பெற்றுக் கொள்ளலாம்.

**விளக்கம் :**

இச்சட்டப்பிரிவின் நோக்கத்திற்காக தெளிவுபடுத்துவது யாதெனில், "முதனிலை மதிப்பீடு" என்பது வழக்கின் நீதித்துறை விசாரணை அல்ல; ஆனால் சாட்டுரைக்கப்பட்ட அக்குற்றச் செயல் புரிவதற்கு அதன் பின்விளைவுகளைப் புரிந்து கொள்வதற்கு அக்குழந்தைக்கு தகுதித் திறன் இருந்தது என்பதை மதிப்பீடு செய்வதே ஆகும் என தெளிவுறுத்துகிறது.

(2) முதனிலை மதிப்பீட்டில், குழுமம், திருப்தியுறும் நிலையில், அந்த விடயத்தை தீர்வு செய்தல் வேண்டும். பின்னர் குழுமம் குற்றமுறை விசாரணை முறைச் சட்டம் 1973 (2/1974)-இன் கீழ் வழக்கு விசாரணையைக் கூடிய வரையில் அழைப்பாணை வழக்கிற்கான நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.

**வரம்புரையாக :**

குழுமத்தின் ஆணையால் தீர்வு செய்யப்படும் அந்த பொருட்பாடு பிரிவு 101-இன் உட்பிரிவு (2)-இன் கிழ் மேல்முறையீடு செய்வதற்கு உரியதாகும்.

**மேலும் வரம்புரையாக :**

இச்சட்டப் பிரிவின் கீழ் மதிப்பீட்டை பிரிவு 14-இல் குறித்த கால வரையறைக்குள்ளாக முடிக்கப்பட வேண்டும்.

**பிரிவு - 16**

**வழக்குகளின் விசாரணை முடிவுறாநிலை குறித்த மீளாய்வு :**

(1) (இளைஞர் நீதிக்) குழுமத்தின் விசாரணையில் நிலுவையிலுள்ள வழக்குகளை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தலைமை நீதித்துறை குற்றவியல் நடுவர் (அ) தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் மீளாய்வு செய்தல் வேண்டும். அத்துடன் கூட்ட அமர்வுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க ஆணையிட வேண்டும் அல்லது கூடுதலான குழுமங்களை நிறுவப் பரிந்துரை செய்யலாம்.

(2) அவ்வாறு வழக்கு விசாரணை முடிவுறாதிருக்கும் நிலை குறித்த தகவல், அரையாண்டு அடிப்படையில் மாநில அரசால் குறித்துரைத்த அத்தகைய படிவத்தில் (இளைஞர் நீதிக்) குழுமத்தால் குற்றவியல் நீதித்துறை தலைமை நடுவர் அல்லது தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் மற்றும் மாவட்ட நடுவருக்கு, தலைவர் பதவியில் மாநில சட்டப்பணிகள் ஆணையத்தின் நிருவாகத் தலைவர், உள்துறைச்

செயலாளர், மாநிலத்தில் இச்சட்டத்தை அமலாக்கம் செய்யும் பொறுப்பில் உள்ள செயலாளர் மற்றும் தலைவரால் நியமனம் செய்யப்படும் ஒரு தன்னார்வ அல்லது அரசு சாரா அமைப்பிலிருந்து ஒரு சார்பாளர் (பிரதிநிதி) ஆகியோர் அடங்கிய ஓர் உயர்மட்டக் குழுவால் ஒவ்வொரு ஆறு மாதத்திற்கு ஒரு முறையும் (இளைஞர் நீதிக்) குழுமத்தின் முன்பாக நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை, அத்தகைய வழக்கின் முடிவுறா நிலையின் கால அளவு, முடிவுறா நிலையின் தன்மை மற்றும் அதற்கான காரணங்கள் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.

(3) நீதிமன்ற குற்றவியல் தலைமை நடுவர் (அ) பெருநகரக் குற்றவியல் தலைமை நடுவர் மற்றும் மாவட்ட நடுவருக்கு மாநில அரசால் வகுக்கப்பட்டவாறான அத்தகைய படிவத்தில், காலாண்டு அடிப்படையில் அத்தகைய முடிவுறா வழக்குகள் குறித்த தகவல், குழுமத்தால் அனுப்பப்பட வேண்டும்.

**பிரிவு - 17**

**குழந்தை ஒருவர் சட்டத்துடன் முரண்டபவில்லை எனக் கண்டறிந்தபோது, அக்குழந்தை தொடர்பான ஆணைகள் :**

(1) குழுமத்தின் முன்பாக கொரணப்பட்ட குழந்தை குற்றம் எதுவும் புரியவில்லை என வழக்கு விசாரணையில் குழுமம் மன நிறைவு (திருப்தி) கொள்ளும்போது, தற்போதைக்கு நடைமுறையில் உள்ள ஏனைய சட்டம் எதிலும் முரணான வகையில் என்ன சொல்லப்பட்டிருந்தாலும், அதன் விளைபயனாக குழுமம் ஆணை பிறப்பிக்க வேண்டும்.

(2) சட்ட உட்பிரிவு (1)-இல் மேற்சுட்டியவாறான குழந்தைக்குப் பராமரிப்பும் பாதுகாப்பும் தேவை என குழுமத்திற்குத் தோன்றும் நேர்வில், அது ஏற்புடைய ஆணைகளிட்டு அந்தக் குழந்தையைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும்.

**பிரிவு - 18**

**குழந்தை, சட்டத்துடன் முரண்பட்டுள்ளார் எனக் கண்டறிந்தபோது, அக்குழந்தை தொடர்பான ஆணைகள் :**

ஒரு குழந்தையின் வயதைப் பொருட்படுத்தாமல் சிறு குற்றம் அல்லது ஒரு கடுமையான குற்றம் புரிந்துள்ளார் அல்லது பதினாறு வயதிற்குக் கீழான ஒரு குழந்தை ஒரு கொடிய குற்றச்செயல் புரிந்துள்ளார் என்று ஒரு குழுமம் எண்ண நிறைவு (திருப்தி) கொள்ளும்போது, தற்போதைய அமலாக்கத்தில் உள்ள ஏதேனுமொரு பிறசட்டத்தில் முரணாகும் வகையில் என்ன சொல்லப்பட்டிருந்தாலும் கருத்தில் கொள்ளாது, குற்றத்தன்மையின் அடிப்படையில் மேற்பார்வை அல்லது குறுக்கீட்டுக்கான சிறப்புத் தேவை, சமூகப் புலனாய்வு அறிக்கையில் கூறப்பட்ட சூழல் மற்றும் குழந்தையின் கடந்த கால நடத்தை இவற்றின்பேரில் குழுமம் தக்கதெனக் கருதும், கீழ் வருவனவற்றைக் குழுமம் மேற்கொள்ளலாம்.

(அ) தக்க விசாரணை மேற்கொண்டு குழந்தை மற்றும் அவரது பெற்றோர் மற்றும் காப்பாளர்களுடன் உயர்நடை வழிகாட்டுதலைத் தொடர்ந்து அல்லது நெறிப்படுத்துதலைத் தொடர்ந்து எனக் கூறலாம். அறிவுரை (அ) நயமான கண்டிப்புடன் விடுவிப்புக்குப் பின்பு, அத்தகைய குழந்தையை அவரது இல்லத்திற்குச் செல்ல அனுமதிக்கலாம்.

(ஆ) குழு சார்ந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் அது போன்ற செயல் நடவடிக்கைகளில் பங்கேற்க, குழந்தைக்கு கட்டளை பிறப்பிக்கலாம்.

(இ) குழுமத்தில் அடையாளம் கண்ட ஒரு அமைப்பு (அ) நிறுவனம் (அ) ஒரு குறித்துரைத்த நபர், நபர்கள் (அ) நபர்கள் அடங்கிய ஒரு அமைப்பு (அ) நிறுவனம் (அ) ஒரு குறித்துரைத்த நபர், நபர்கள் (அ) நபர்கள் அடங்கிய குழுவின் மேற்பார்வையின் கீழ் குழந்தையை சமூகப் பணி (சேவை) செய்வதற்கு ஆணையிடலாம்.

(ஈ) குழந்தை (அ) அக்குழந்தையின் பெற்றோர் (அ) காப்பாளர் பணத்தண்டம் (அபராதம்) செலுத்துவதற்கு ஆணையிடலாம்.

**வரம்புரையாக :**

வேலை செய்யும் குழந்தையின் நேர்வில், அப்போதைக்கு அமலாக்கத்தில் உள்ள ஏதேனுமொரு தொழிலாளர் சட்டத்தின் வகையங்கள் மீறப்படவில்லை என்பதை அது உறுதிப்படுத்தலாம்.

(உ) மூன்றாண்டுகளுக்கு மிகாத ஏதேனுமொரு கால அளவிற்காக, நல்ல ஒழுகலாறு மற்றும் குழந்தையின் நலனுக்காக குழுமம் வேண்டுறுத்தலாம் என்ற அளவில் பிணையதாரருடனோ (அ) அவ்வாறில்லாமலோ பெற்றோர், காப்பாளர் (அ) தக்கார் ஒரு பிணைப்பத்திரத்தை அளிப்பதன் பேரில், அக்குழந்தையை நன்னடத்தைக் கண்காணிப்பில் விடுவிக்க மற்றும் அத்தகைய பெற்றோர், காப்பாளர் (அ) தக்காரின் கீழ் ஒப்பளிக்க கட்டளை பிறப்பிக்கலாம்.

(ஊ) மூன்றாண்டுகளுக்கு மிகாத ஏதேனுமொரு கால அளவில், நல்ல ஒழுகலாறு மற்றும் குழந்தையின் நலனை உறுதி செய்ய நன்னடத்தை கண்காணிப்பில் குழந்தையை விடுவிக்க மற்றும் ஏதேனுமொரு தகுநிலை வசதியகத்தில் பராமரிப்பு மற்றும் மேற்பார்வையின் கீழ் வைக்க கட்டளை பிறப்பிக்கலாம்.

(எ) சிறப்பில்லத்தில் தங்கியிருக்கும் காலத்தில், கல்வி, திறன்மேம்பாடு, உளவியல் சார்ந்த ஆற்றுப்படுத்துதல், நடத்தை மாற்றமைவு பேணுதல் மற்றும் உளவியல் மருத்துவம் சார்ந்த ஆதரவு நல்குதல் போன்றவற்றை உள்ளடக்கிய சீரான திருத்தப்பணிகளை வழங்க மூன்றாண்டு காலத்திற்கு மிகாத, தக்கதெனக் கருதுமளவில் அத்தகைய காலத்திற்கு குழந்தையை ஒரு சிறப்பில்லத்திற்கு அனுப்ப ஆணையிடலாம்.

**வரம்புரையாக :**

(1) அத்தகைய குழந்தையின் நடத்தை மற்றும் ஒழுகலாறு அக்குழந்தையின் நலனுக்கோ அல்லது சிறப்பில்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள பிற குழந்தைகளின் நலனுக்கோ ஏற்புடையதாக இல்லாதபோது, அக்குழந்தையை, குழுமம் வேறு பாதுகாப்பிடத்திற்கு அனுப்பி வைக்கலாம்.

(2) உட்பிரிவு-(1) கூறுகள் (அ) முதல் (எ)-இன் கீழாக ஆணை பிறப்பிக்கப்பட்டால், குழுமம், கீழ்வரும் ஆணைகளைக் கூடுதலாகப் பிறப்பிக்கலாம்.

(i) பள்ளிக்குச் செல்வதற்கு

(ii) தொழிற்பயிற்சி மையம் அல்லது

(iii) நோய்நீக்க மாற்றுச் சிகிச்சை மையம் அல்லது

(iv) குழந்தை ஒரு குறிப்பான இடத்திற்கு, அடுத்தடுத்து வெளிப்படையாகப் புலப்படும் வகையில் செல்வதைத் தடை செய்தல்

அல்லது

(v) போதை அடிமை மீட்புச் செயல்திட்ட வகுப்பில் கலந்து கொள்ளுதல்.

(3) பிரிவு-15-இன் கீழாக குழுமம் முதனிலை மதிப்பீட்டைக் கணித்த பிறகு சொல்லப்பட்ட அக்குழந்தை உரியதொரு வயது வந்தோராக இருக்கும் நிலையில், அந்த வழக்கில் குறிப்பிட்ட விசாரணை தேவைப்படுகிறது என்ற நிலையில், குழுமம் அத்தகைய குற்றங்களை விசாரிக்கும் அதிகார வரம்பெல்லை கொண்ட, குழந்தைகள் நீதிமன்றத்திற்கு அவ்வழக்கினை இடமாறுதல் செய்ய ஆணையிடலாம்.

**பிரிவு - 19**

**குழந்தைகள் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் :**

(1) சட்டப்பிரிவு 15-இன் கீழ் குழுமம் முதனிலை மதிப்பீட்டைப் பெற்ற பின்னர், குழந்தைகள் நீதிமன்றம் கீழ்வரும் வகையில் முடிவு செய்யலாம்.

(i) குற்ற விசாரணை முறைச் சட்டம் 1973 (2/1974)-இன்படி ஒரு உரிய வயதிற்கு வந்தவரான அக்குழந்தையின் நீதிமன்ற வழக்கு விசாரணை செய்வது அவசியமானதாக இருக்கும் போது, இப்பிரிவு மற்றும் பிரிவு 21-ன் வகையங்களுக்கு உட்பட்டு, விசாரணைக்குப் பிறகு ஏற்புடைய ஆணைகளை பிறப்பிக்காமல், குழந்தையின் சிறப்புத் தேவைகள், நேரிய வழக்கு விசாரணையின் சித்தாந்தக் கூறு ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

(ii) குழந்தைக்கு, வயது வந்தோருக்கான வழக்கு விசாரணையின்படி வழக்கு நடத்துவது அவசியமானதாக இருக்கும் போது, குழுமம் என்ற முறையில்

விசாரணை மேற்கொண்டு, ஏற்புடைய ஆணைகளை பிரிவு 18-இன் வகையங்களுக்கு இணங்க ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

(2) சட்டத்திற்கு முரண்படும் ஒரு குழந்தை தொடர்பாக குழந்தைகள் நீதிமன்றம் இறுதி ஆணை பிறப்பிப்பதற்கு உறுதிப்படுத்த வேண்டும். அது குழந்தையின் மறுவாழ்வுக்கான தனி ஒருவர் பராமரிப்புத் திட்டமும், நன்னடத்தை அலுவலர் அல்லது மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு அல்லது சமூகப் பணியாளரின் பின்தொடர் நடவடிக்கையை உள்ளடக்கி இருக்க வேண்டும் என்பதை குழந்தைகள் நீதிமன்றம் உறுதிப்படுத்த வேண்டும்.

(3) குழந்தை ஒருவர் சட்டத்துடன் முரண்பட்டதாகக் கண்டறியப்பட்டால், அக்குழந்தைக்கு இருபத்தொரு வயது நிறைவெய்தும் வரையில் அக்குழந்தையைப் பாதுகாப்பு அமைவிடத்திற்கு அனுப்பி வைக்க குழந்தைகள் நீதிமன்றம் உறுதிப்படுத்த வேண்டும். அதன் பின்னர் அந்த நபரை சிறைக்கு இட மாற்றம் செய்யப்பட வேண்டுமா என்பதை குழந்தைகள் நீதிமன்றம் முடிவுசெய்ய வேண்டும்.

**வரம்புரையாக :**

“மறுசீரமைப்புப்பணி” என்பதில் கல்விப்பணி, திறன் மேம்பாடு, பிணி நீக்கியல் மாற்று சிகிச்சை, உளவியல் ஆற்றுப்படுத்துதல், நடத்தை மாற்றமைவு, மனநல மருத்துவம் சார்ந்த உதவி போன்றவை உள்ளடங்கும். குழந்தை தங்க வைக்கப்படும் காலத்தில் பாதுகாப்பு அமைவிடத்தில் தங்க வைக்கப்பட்டிருக்கும் காலத்தில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(4) குழந்தைகள் நீதிமன்றம் தேவைப்படும் வகையில் நன்னடத்தை அலுவலர் அல்லது மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு அல்லது ஒரு சமூகப் பணியாளரிடம் ஆண்டு தோறும் காலமுறையிலான பின்தொடர் நடவடிக்கை அறிக்கை அனுப்ப உறுதி செய்ய வேண்டும். குழந்தையின் பாதுகாப்பு அமைவிடத்தில் முன்னேற்ற மதிப்பீடு செய்தல் வேண்டும்; குழந்தை எந்த வகையிலும் தவறாக நடத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

(5) உட்பிரிவு (4)-இன் கீழாக, அறிக்கைகளை குழந்தைகள் நீதிமன்றத்திற்கு பதிவேடு பராமரிக்க மேலனுப்புதல் வேண்டும்; வேண்டுறுத்தும் வகையில், பின்தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டும்.

**பிரிவு - 20**

**சட்டத்துடன் முரண்பட்ட குழந்தை இருபத்து ஒன்று வயதெய்தி பாதுகாப்பு இடத்தில் நிறுத்தி வைக்க, குறித்த கால வரம்பை இன்னும் முடிக்க வேண்டிய நிலை ஆதல் :**

(1) சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தை இருபத்து ஒன்று வயதெய்தி பாதுகாப்பிடத்தில் தங்கியிருப்பதற்கான கால வரம்பை இன்னும் முடிக்க வேண்டிய நிலையில், சீர்திருத்தத்துக்கான மாறுதலுக்கு உள்ளாகி உள்ளாரா மற்றும் அக்குழந்தை

சமூகத்தில் ஒரு பங்களிப்புக்குரிய உறுப்பினராக இருக்க முடியுமா என்பதை மதிப்பீடு செய்யும் வகையில் குழந்தைகள் நீதிமன்றம் தேவைப்படுமளவில் நன்னடத்தை அலுவலர் (அ) மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு (அ) சமூகப் பணியாளர் (அ) அதுவாகவே பின்தொடர் நடவடிக்கைக்கும் வகை செய்யப்பட வேண்டும் இந்த நோக்கத்திற்காக பிரிவு 19 உட்பிரிவு (4)-இன் கீழாக குழந்தையின் முன்னேற்றப் பதிவேடுகள் பராமரிப்பதுடன் தொடர்பான தொழில் முறை விற்பன்னர்களின் மதிப்பீட்டுடன் அதனை ஓர்பு மேற்கொள்ளுதல் (பரிசீலனை செய்தல்) வேண்டும்.

(2) சட்டப்பிரிவு (1)-இன் கீழாக குறித்த வகையிலான நடைமுறை முடிவுற்ற பின்பு, குழந்தைகள் நீதிமன்றம்:-

(i) தாம் தக்கதெனக் கருதும் வகையில், அத்தகைய வரைக் கட்டுகளின் (நிபந்தனைகளின்) பேரில், அக்குழந்தையை விடுவிக்க முடிவு செய்யலாம்.

(ii) சிறையொன்றில் அக்குழந்தைக்கான எஞ்சிய தங்கும் காலத்தை அவர் முடிப்பதற்கு முடிவெடுக்கலாம்.

**வரம்புரையாக :**

ஒவ்வொரு மாநில அரசும் வகுத்துரைக்கப்பட்ட விதத்தில் கண்காணிப்பு அதிகார அமைப்புகளின் பட்டியலையும் மற்றும் கண்காணிப்பு நடைமுறைகளையும் பேணுதல் வேண்டும்.

**பிரிவு - 21**

**சட்டத்திற்கு முரணான ஒரு குழந்தைக்கு எதிராக, எந்தவொரு ஆணையும் பிறப்பித்தல் கூடாது:**

இச்சட்டத்தின் வகையங்களின் கீழ் அல்லது இந்திய தண்டனைச் சட்டம் (45/1860)-இன் வகையங்களின் கீழ் அல்லது தற்போதைக்கு நடைமுறையில் உள்ள வேறு எந்த சட்டத்தின் கீழாக சட்டத்திற்கு முரணான குழந்தையை விடுவிப்பதற்கு இயலாமலிருக்கும்போது, அந்தக் குழந்தைக்கு மரண தண்டனை அல்லது ஆயுட்காலச் சிறைத் தண்டனை வழங்கக் கூடாது.

**பிரிவு - 22**

**குற்றவிசாரணை முறைச்சட்டம் இயல் 8-இன் கீழ் செயல் நடைமுறைகள், குழந்தைக்கு எதிராகப் பொருந்தாது :**

குற்ற விசாரணை முறை சட்டம் 1973 (2/1974)-இல் அல்லது அப்போதைக்கு நடைமுறையில் உள்ள ஏதேனுமொரு தடுப்புக்காவல் சட்டத்தில் முரணாக உள்ளவற்றைக் கருத்திலிருத்தாமல், எவரேனும் ஒரு குழந்தைக்கு எதிராக, எந்தவித நடவடிக்கையும் எடுக்கக் கூடாது; மற்றும் குற்ற விசாரணை முறைச் சட்டம் இயல் 8-இன்படி எந்தவொரு ஆணையும் பிறப்பிக்கலாகாது.

**பிரிவு - 23**

**சட்டத்துடன் முரண்பட்ட குழந்தை ஒருவரையும் குழந்தை அல்லாத ஒரு நபரையும் கூட்டிணை விசாரணை செய்யாமை :**

(1) குற்ற விசாரணை முறைச் சட்டம் 1973 பிரிவு - 223-இல் (சட்டம் 2/1974) அல்லது தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், அவற்றைக் கருத்திலிருத்தாமல், சட்டத்திற்கு முரணானவர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒரு குழந்தையின் நீதிமன்ற நடைமுறைகளின்போது, குழந்தை அல்லாத ஒரு நபருடன் குழந்தையைக் குற்றம் சாட்டுவதும், வழக்கில் கூட்டிணை விசாரணை செய்வதும் கூடாது.

(2) குழுமத்தால் அல்லது குழந்தைகள் நீதிமன்றத்தால் செய்யப்படும் விசாரணையின்போது, சட்டத்திற்கு முரண்பட்டவர் எனச் சாட்டப்பட்டுள்ள நபரை, ஒரு குழந்தை இல்லை எனக் கண்டறியப்பட்டபோது, அத்தகைய நபர் ஒரு குழந்தையுடன் வழக்கில் கூட்டிணைத்து விசாரணை நடத்தக் கூடாது.

**பிரிவு - 24**

**குற்றம் ஒன்று கண்டறிந்ததன் பேரில், தகுதிப்பாடின்மை நீக்குதல் :**

(1) தற்போது வேறு எந்த சட்டத்திலும் எது எவ்வாறிருப்பினும், குழந்தை ஒருவர் குற்றம் ஒன்றைச் செய்து, இச்சட்ட வகையங்களின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கும்போது, அவர் அச்சட்டத்தின் ஒரு குற்றச் செயலுக்கான தண்டனைத் தீர்ப்பின் பற்றுகையால் விளையும் தகுதிப்பான்மைக் கேடு ஏதேனும் இருப்பின், அதனால் பாதிப்பு எதுவும் ஏற்படக் கூடாது.

**வரம்புரையாக :**

குழந்தை ஒருவருக்கு பதினாறு வயது நிறைவெய்தியிருக்கும்போது அல்லது அதற்கு மேற்பட்டிருக்கும்போது, அந்தக் குழந்தை சட்டத்துடன் முரண்பட்டுள்ளார் என்று பிரிவு 19, உட்பிரிவு (1), கூறு (i)-இன் கீழாக குழந்தை நீதிமன்றத்தால் கண்டறிந்தபோது, அந்தவொரு குழந்தைக்கு உட்பிரிவு (1)-இன் வகையங்கள் பொருந்தாது.

(2) குழுமம், மேல் முறையீட்டுக் கால வரம்பு முடிவுற்ற பின்னரோ அல்லது விதிகளின் கீழ் வகுத்துரைக்கப்பட்டவாறோ ஒரு நியாயமான கால வரம்பிற்குப் பின்னரோ, நேர்விற்கேற்ப அத்தகைய குற்றத் தீர்ப்புடன் தொடர்புடைய பதிவுருக்களை நீக்கி அவற்றைப் பயனற்றதாக்க வேண்டுமென, காவல் துறைக்கு ஆணை ஒன்றைப் பிறப்பிக்க வேண்டும்.

**வரம்புரையாக :**

ஒரு கொடுங்குற்றத்தின் நேர்வில், சட்டத்துடன் முரண்பட்டதாகச் சாட்டப்பட்ட குழந்தை, சட்டப்பிரிவு 19-இன் உட்பிரிவு 1-இன் துணைப் பிரிவு (i)-இன் கீழ், கொடுங்குற்றம் செய்ததாகக் கண்டறியப்படும்போது, அத்தகைய குழந்தையின் தண்டனை தொடர்பான பதிவேடுகளை குழந்தைகள் நீதிமன்றம் இருத்தி வைத்துப் பாதுகாத்தல் வேண்டும்.

**பிரிவு - 25**

**முடிவுறா வழக்குகள் தொடர்பான சிறப்பு வகையம் :**

இச்சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும் கருத்தில் இருத்தாமல், இச்சட்டம் செயலாக்கத்திற்கு வந்த நாள் முதலாக, குழுமம் (அ) நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை முடிவுறாதிருக்கும் நிலையில், சட்டத்திற்கு முரண்பட்டதாகக் கூறப்படும் அல்லது சட்டத்திற்கு முரண்பட்டதாகக் கண்டறியப்பட்ட ஒரு குழந்தையின் நேர்விலான அனைத்து வழக்கு நடைமுறைகளும், இச்சட்டம் இயற்றப்படாமலிருந்தது போன்றே அந்த குழுமம் அல்லது நீதிமன்றத்தில் அந்த நிலையிலேயே தொடரப்பட வேண்டும்.

**பிரிவு - 26**

**சட்டத்துக்கு முரண்பட்ட குழந்தை தப்பி ஓடிவிடுதல் குறித்த வகையம்**

(1) அப்போதைக்கு நடைமுறையில் உள்ள ஏனைய சட்டம் எதிலும் முரணான வகையில் என்ன சொல்லப்பட்டிருப்பினும், ஒரு சிறப்பில்லம் அல்லது கூர்நோக்கில்லம் அல்லது பாதுகாப்பு அமைவிடம் அல்லது இச்சட்டத்தின் கீழாக எந்தவொரு நபரின் பாதுகாப்பில் அல்லது நிறுவனத்தில் வைக்கப்பட்டு, அங்கிருந்து ஒரு குழந்தை தப்பி ஓடியிருந்தால், அவருக்கான பொறுப்பை எந்தவொரு காவல் அலுவலரும் எடுத்துக் கொள்ளலாம்.

(2) உட்பிரிவு (1)-இன் மேற்சுட்டியவாறு அக்குழந்தையைப் பொறுத்த வரையில் எந்தக் குழுமம் மூல ஆணையைப் பிறப்பித்ததோ, அந்தக் குழுமத்திடம் முன்னெடுத்து 24 மணி நேரத்திற்குள்ளாக இயன்ற வரையில் ஒப்படைக்க வேண்டும் அல்லது அக்குழந்தை கண்டறியப்பட்ட இடத்திலிருந்து மிக அருகில் உள்ள குழுமத்திடம் முன்னிலையாகி ஒப்படைக்க வேண்டும்.

(3) குழந்தை அவ்வாறு தப்பியோடிச் சென்றதற்கான காரணங்களை, குழுமம் கண்டறிய வேண்டும். குழந்தை எந்த நபரின் பொறுப்புக் காவலில் இருந்து, எந்த நிறுவனத்திலிருந்து தப்பியோடிச் சென்றாரோ அந்த நபரிடம் அல்லது அந்த நிறுவனத்திடம் மீண்டும் அனுப்ப அல்லது அதுபோலவே அதே அமைவிடம் அல்லது நபரிடம் திருப்பி அனுப்பக் குழுமம் தக்கதெனக் கருதும் ஏற்புடைய ஆணை ஒன்றைப் பிறப்பிக்க வேண்டும்.

**வரம்புரையாக :**

அக்குழுமம் குழந்தையின் தேர்ந்த உயரிய நலப்பற்றின் காரணமாக, அவசியமானதெனக் கருதும் எந்தவொரு சிறப்பு நடவடிக்கைகள் எதுவும் என்பதற்குப் பதிலாக தனிச்சிறப்பான அடியெடுத்தலுக்கான கூடுதலாக ஆணைகள் பிறப்பிக்கலாம்.

(4) அத்தகைய குழந்தையைப் பொறுத்த வரையில், இதன் தொடர்பாக கூடுதலாக வழக்கு நடவடிக்கை எதுவும் தொடுக்கலாகாது.

# இயல் 5

**பிரிவு - 27**

**குழந்தை நலக்குழு**

(1) இச்சட்டத்தின் கீழ் குழந்தை பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக அளிக்கப்பட்ட அதிகாரங்களைச் செயல்படுத்தவும் கடமைகளைச் செய்வதற்கும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தை நலக்குழுக்களை, மாநில அரசு அதிகார முறை அரசிதழில் பதிவு செய்து அறிவிக்கையின் மூலம், ஏற்படுத்த வேண்டும். அறிவிக்கை நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்காக குழு உறுப்பினர்கள் அனைவரும் அடிப்படைப் பயிற்சி மற்றும் கூருணர்வு புத்தாக்கம் அளிக்க இயல்வித்து வகை செய்ய வேண்டும்.

(2) அந்தக் குழு ஒரு தலைமையரையும் (தலைவரை) மற்றும் பணி நியமனத்திற்கு தகுதியானவர்கள் என மாநில அரசு தக்கதெனக் கருதியவாறு, குழந்தைகள் குறித்த பொருட்பாடுகளின் விற்பன்னர்களில் நான்கு ஏனைய உறுப்பினர்களையும் குழு கொண்டிருக்க வேண்டும். அவர்களில் குறைந்தது ஒரு பெண் உறுப்பினரைக் கொண்டிருக்க வேண்டும்.

(3) குழு திறம்படச் செய்கடமை ஆற்ற அதற்கான செயலகமாக இயங்க தேவைப்படும் உதவிக்கான ஒரு செயலர் மற்றும் பிற பணியாளர்கள், ஆகியோரை மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு வழங்க வேண்டும்.

(4) குறைந்தது ஏழாண்டு காலத்திற்கு குழந்தைகள் தொடர்பான உடல் நலம், கல்வி மற்றும் குழந்தைகள் குறித்த நலப்பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபாடு கொண்ட அல்லது தொழில் முறையில் உளவியல் அல்லது மனநல மருத்துவம் அல்லது சட்டம், சமூகப்பணி அல்லது சமூகவியல் அல்லது மனிதவள மேம்பாட்டில் ஒரு பட்டக்கல்வி பயின்று பணியாற்றுபவராக இருந்தாலன்றி, ஏனைய நபர் எவரையும் அந்தக் குழுவின் உறுப்பினராக பணி நியமனம் செய்யக்கூடாது.

(5) வகுத்துரைக்கப்படலாமென்ற அத்தகைய பிற தகுதிகளை ஒரு நபர் கொண்டிருந்தாலன்றி, எந்தவொரு நபரும், உறுப்பினராகப் பணி நியமனம் செய்தலாகாது.

(6) குழுவின் உறுப்பினராக பணி நியமனம் செய்யப்படும் ஒரு நபரை, மூன்றாண்டு காலத்திற்கு மேலாக பணியமர்த்தக் கூடாது.

(7) குழுவிற்கு பணி நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் எவரும் கீழ்வரும் வகையில் இருந்தால், விசாரணை மேற்கொண்ட பின்னர், மாநில அரசு அவரை பதவி நீக்கம் (இரத்து) செய்ய வேண்டும்.

(i) இச்சட்டத்தின் கீழாக வழங்கப்பட்ட அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி குற்றம் புரிந்தவர் எனக் கண்டறியப்பட்டால்;

(ii) அவர், தீயொழுக்கத்திற்கான குற்றச் செயலில் ஈடுபட்டு தண்டனைக்குள்ளானபோது மற்றும் அத்தகைய கண்டிப்பு அத்தகைய குற்றத்தின் தொடர்பாக நேர்மாறாக மாற்றப்படாமலோ அமைக்கப்படாமலோ அல்லது முழுமையாக மன்னிப்பு வழங்கப் பெறாமலோ இருந்தால்;

(iii) செல்லத்தக்க காரணம் எதுவுமின்றி, குழுவின் அமர்வு நடைமுறையில் தொடர்ந்து மூன்று மாதங்கள் கலந்து கொள்ளத் தவறினால் அல்லது ஓராண்டின் அமர்வுகளில் நான்கில் மூன்று பங்கிற்கு குறையாமல் அவர் கலந்து கொள்ளத் தவறினால்;

(8) மாவட்ட நடுவர், குழுவின் செயற்பாடு குறித்து ஒரு காலாண்டு ஆய்வு மேற்கொள்ளுதல்

(9) குழந்தை நலக்குழு, ஒரு ஒருங்கமர் நடுவர் ஆயமாகச் செயற்பணி ஆற்றும்

மற்றும் நேர்விற்கேற்ப ஒரு பெருநகர் குற்றவியல் நடுவர் (அ) ஒரு நீதித்துறை முதல் வகுப்பு குற்றவியல் நடுவருக்கு, அவர் எவராக இருந்தாலும், குற்ற விசாரணை முறைச் சட்டம், 1973 (2/1974)ஆல் வழங்கிய அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.

10. குழந்தை நலக்குழுவிற்கான குறையுற்றோர் குறை தீர்க்கும் அதிகார அமைப்பாக மாவட்ட நடுவர் இருப்பார்; மற்றும் குழந்தை தொடர்பான எந்தவொரு நபரும் மாவட்ட நடுவரின் முன்பு ஒரு விண்ணப்பத்தைத் தாக்கல் செய்யலாம்; அதன் அடிப்படையில் அவர் அதனை ஓர்பு செய்து (பரிசீலனை செய்து) தக்க ஆணையைப் பிறப்பிப்பார்.

**பிரிவு - 28**

**குழு தொடர்பான நடைமுறை**

(1) குழு, மாதத்தில் குறைந்தது இருபது நாட்களாவது கூட்டப்பட வேண்டும். அது, அந்த கூட்டத் தொடர்களின் அலுவல் நடவடிக்கைகள் தொடர்பாக விதிகளையும், கூர்நோக்கி அனுசரித்து வகுத்துரைக்கப்பட்ட நடைமுறைகளையும் பின்பற்ற வேண்டும்.

(2) தற்போது தொடர்ந்து இயங்கிவரும் ஒரு குழந்தை பராமரிப்பு நிறுவனத்தைக் குழு பார்வையிடும் போது, அதன் செயற்பாடுகள் மற்றும் குழந்தைகளின் நலன் குறித்து சரிபார்த்து ஆய்வு செய்தல், குழுவின் கூட்டத் தொடர் அமர்வு போன்றே அது கருதப்படும்.

(3) பராமரிப்பும், பாதுகாப்பும் தேவைப்படும் ஒரு குழந்தையை, குழு அமர்வில் இல்லாதபோது, ஒரு குழந்தைகள் இல்லம் அல்லது தக்காரின் பராமரிப்பில் வைக்கப்பட, அவரைக் குழுவின் தனியொரு உறுப்பினர் முன்பாக முன்னிலைப்படுத்தப்படலாம்.

(4) குழுமத்தில் இடைக்காலக் கட்டளை அல்லது தீர்வாணையில் ஒரு வழக்கில் முடிவு எடுக்கப்படும் போது, குழுவின் உறுப்பினர்களுக்கிடையே கருத்து வேறுபாடு ஏதேனும் எழும்போது, பெரும்பான்மையோர் கருத்தே முடிவானதாக அமையும். அத்தகைய பெரும்பான்மை அங்கு இல்லாதிருக்கும்போது தலைமையரின் (தலைவரின்) முடிவே இறுதியானது ஆகும். (முதன்மை நடுவரின் கருத்தே முடிவானதாக இருக்கும்).

(5) குழுவின் உறுப்பினர் ஒருவரின் வாராமையைக் கருத்தில் கொள்ளாமல், உட்பிரிவு (1)-இன் வகையங்களுக்கு உட்பட்டு, குழு தொடர்ந்து செயல்படலாம். அத்தகைய நடவடிக்கையின் எந்தவொரு படி நிலையிலும், பிறப்பிக்கப்படும் ஆணை, குழுவின் எவரேனும் உறுப்பினர் வருகை தரவில்லை என்ற காரணத்தால் மட்டும், குழுவால் பிறப்பிக்கப்படும் ஆணை செல்லாதது ஆகி விடாது.

**வரம்புரையாக :**

ஒரு வழக்கின் இறுதி முடிவின்போது, குறைந்தது மூன்று உறுப்பினர்களாவது, அவ்விடத்தில் வருகை தந்திருக்க வேண்டும்.

**பிரிவு - 29**

**குழுவின் அதிகாரங்கள் :**

(1) பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவையாகும் குழந்தைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு, நடத்தும் முறை, மேம்பாடு மற்றும் மறுவாழ்வுக்கான வழக்குகளின் தீர்வுக்கான அதிகாரத்துடன் அது போன்றே அவர்களுக்கான அடிப்படைத் தேவைகள் மற்றும் பாதுகாப்பை வகை செய்தல் ஆகியவற்றில் முடிவெடுக்கும் குழு அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.

(2) குழு, ஏதேனும் ஒரு பகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ளபோது, அத்தகைய குழு தற்போதைக்கு நடைமுறையில் உள்ள ஏனைய சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருந்தாலும், இச்சட்டத்தில் பிறவாறு தெரிநிலையாக வகை செய்யப்பட்டாலன்றி, மற்றபடி பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவையாகும் குழந்தைகள் தொடர்பாக இச்சட்டத்தின் கீழ் எல்லா செயல் நடைமுறைகளும்

அதற்கென்றே முடிவு செய்யும் செயலாட்சி உரிமையைக் (அதிகாரத்தை) கொண்டிருக்கும்.

**பிரிவு - 30**

**குழுவின் செய்கடமைகளும், பொறுப்புகளும் :**

குழுவின் செய்கடமைகள் மற்றும் பொறுப்புகளில் கீழ் வருவன அடங்கும்.

(I) குழுவின் முன்பாக முன்னிலைப்படுத்தப்பட்ட குழந்தைகளை விசாரணைக்கு ஏற்புடையதாக எடுத்துக் கொள்ளுதல் மற்றும் அவர்களைப் பெற்றுக் கொள்ளுதல்

(II) இந்த சட்டத்தின் கீழ் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் நலன் தொடர்பான மற்றும் பாதிக்கும் அனைத்து எழுவினாக்களிலும் விசாரணை மேற்கொள்ளுதல்

(III) சமூகப் புலனாய்வு விசாரணை மேற்கொள்ள, குழந்தை நல அலுவலர்கள் அல்லது நன்னடத்தை அலுவலர்கள், மாவட்ட குழந்தை நல பாதுகாப்பு அலகு அல்லது அரசுசாரா அமைப்புகள், சமூகப் புலனாய்வு செய்து அறிக்கையைச் சமர்ப்பிக்க ஆணையிடல்.

(IV) பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவையாகும் குழந்தைகளுக்கானத் தகுதி வாய்ந்த நபர்களை (தக்காரை) அறிவிக்க உரிய விசாரணை மேற்கொள்ளுதல்.

(V) குழந்தையை ஒரு வளர்ப்பு பேணுகைத் திட்டத்தில் வைத்துப் பராமரிக்கக் கட்டளை இடுதல்

(VI) குழந்தையின் தனி ஒருவர் பராமரிப்புத் திட்டத்தின் அடிப்படையில் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைக்கு பராமரிப்பு, பாதுகாப்பு, ஏற்புடைய மறுவாழ்வு அல்லது குழந்தையின் முன்நிலை மீட்டளிப்பு இயல்விக்க வகை செய்தல், குழந்தையின் பெற்றோர் அல்லது காப்பாளர் அல்லது தக்கார் அல்லது தகுநிலை வசதியகம் இவற்றிற்கு அவசியமான கட்டளைகளைப் பிறப்பித்தல்.

(VII) குழந்தைகளின் அகவை (வயது), பாலினம், உடல் செயலிழக்கக் குறைபாடு மற்றும் தேவைகள் அடிப்படையில் மற்றும் நிறுவனத்தின் கொள்திறத்தை (இடவசதியை) உளத்திலிருத்தி, ஒவ்வொரு குழந்தைக்கும் நிறுவனத்தின் ஆதார உதவி பெறும் வகையில், அக்குழந்தையைத் தங்க வைப்பதற்கான பதிவு பெற்ற நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்தல்.

(VIII) பராமரிப்பு, பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள் உறையுள் வசதியை பெற்றிருக்கும்போது, அதனை ஒரு மாதத்தில் குறைந்தது இரண்டு ஆய்வும், மேற்பார்வையும் செய்தல் வேண்டும்; மற்றும் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு மற்றும் மாநில அரசுக்கு சேவைத்தரநிலையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்குப் பரிந்துரைத்தல்.

(IX) பெற்றோரால் எழுதி அளித்த, சரண் செய்த பத்திரத்தின் செயலாக்கத்திற்கு சான்றிடுதல், அவர்களின் முடிவை மறு ஓர்வு (மறுபரிசீலனை) செய்ய, கால

அவகாசம் வழங்க உறுதிப்படுத்துதல், மேலும் அதே தருணத்தில் குழந்தையை அவரது குடும்பத்தாருடன் ஒரு சேர இணைத்து வைப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளுதல்.

(X) வரையறுக்கப்படும் உரிய நடைமுறையைக் கடைப்பிடித்து, கைவிடப்பட்ட அல்லது காணாமற்போன குழந்தைகளை, அவர்களின் குடும்பத்தாருடன் மீளச் சேர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் உறுதி செய்தல்.

(XI) முறையான உரியதொரு விசாரணைக்குப் பின்பு, தாய் தந்தையற்ற குழந்தை, கைவிடப்பட்ட அல்லது காணாமற்போன குழந்தைகளை, அவர்களின் குடும்பத்தாருடன் மீளச் சேர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் உறுதி செய்தல்.

(XII) குழுவின் முன்பாக முன்னிலை ஆகாத, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளின் வழக்குகளில் குறைந்தது அமர்வின் மூன்று உறுப்பினர்களால் அத்தகைய முடிவு எடுத்தால் மட்டுமே, குழு தாமாகவே முற்பட்டு இயங்கு முறையில், அதனை விசாரணக்கு ஏற்புடைத்ததாக எடுத்துக் கொண்டு, அத்தகைய பொருட்பாட்டில் (விடயத்தில்) முடிவெடுத்து தொடர்பு கொள்ளுதல்.

(XIII) பாலியல் முறைகேட்டுக்கு உள்ளாக்கப்பட்ட குழந்தை தொடர்பான மறுவாழ்விற்காக நடவடிக்கை எடுத்தல்; அக்குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் என நேர்விற்கேற்ப இளைஞர் சிறப்புக் காவற்படைப்பிரிவு அல்லது உள்ளூர் காவல் துறையினரால், குழந்தைகளைப் பாலியல் குற்றங்களினின்றும் பாதுகாக்கும் சட்டம், 2012 (32/2012)-இன் கீழாக குழுவிடம் தெரிவிப்பதன் பேரில், அத்தகைய செயலாக்க நடவடிக்கையை மேற்கொள்ளுதல்.

(XIV) சட்டப்பிரிவு 17-இன் உட்பிரிவு (2)-இன் கீழாக குழுமத்தால் சுட்டியவாறான வழக்குகளில் நடவடிக்கை எடுத்தல்.

(XV) மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு (அ) மாநில அரசின் ஆதரவுடன் குழந்தையின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள காவல்துறை, தொழிலாளர் துறை மற்றும் ஏனைய முகமைகளுடன் ஒருங்கிணைத்தல்.

(XVI) ஏதேனுமொரு குழந்தை பராமரிப்பு நிறுவனத்தில் ஒரு குழந்தைக்கு எதிராக தவறாகப் பயன்படுத்தியுள்ளார் என ஒரு குற்ற முறையீடு வரப்பெற்றால், குழு ஒரு விசாரணையை மேற்கொள்ளுதல்; அதன் தொடர்பாக நேர்விற்கேற்ப காவல்துறை (அ) மாவட்டக் குழந்தை பாதுகாப்பு அலகு (அ) தொழிலாளர் துறை (அ) குழந்தை அவசர தொலைப்பேசி அழைப்பு சேவை மையத்திற்கு ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டும்.

(XVII) குழந்தைகளுக்கான ஏற்புடைத்த சட்டப்பணி உதவிக்கு அணுகும் வாய்ப்பு வழங்குதல்.

(XVIII) வகுத்துரைக்கப்பட்ட செயற்கடமைகளைச் செய்வதும், மற்றும் பொறுப்படைவுகளை மேற்கொள்வதும்.

# இயல் 6

**பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் தொடர்பான நடைமுறை :**

**பிரிவு - 31**

**குழுவின் முன்பு ஒப்படைத்தல் :**

(1) பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவையாகும் குழந்தை, குழுவின் முன்பாக கீழ்வரும் நபர்களால் முன்னிலைப்படுத்த வேண்டும் அதாவது

(i) காவல் துறை அலுவலர் அல்லது இளைஞர் சிறப்புக் காவல் பிரிவு அல்லது அதற்கெனப் பெயர் குறித்த குழந்தை நல காவல் அலுவலர் அல்லது மாவட்டக் குழந்தை பாதுகாப்பு அலகின் அலுவலர் அல்லது நடப்பில் நடைமுறையில் உள்ள தொழிலாளர் சட்டத்தின் கீழ் பணியமர்த்தப்பட்ட ஆய்வாளர்

(ii) எவரேனும் ஒரு பொது ஊழியத்துறைப் பணியாளர்;

(iii) குழந்தை பாதுகாப்பு உதவி சங்கம் அல்லது ஏதேனுமொரு தன்னார்வ அல்லது அரசு சாரா அமைப்பு அல்லது மாநில அரசால் தகவேற்பு இசைவளிப்பு செய்யப்பட்ட முகமை;

(iv) குழந்தை நல அலுவலர் (அ) நன்னடத்தை அலுவலர்;

(v) எவரேனும் ஒரு சமூகப் பணியாளர் அல்லது பொதுநல எழுச்சி மிக்க குடிமகன்;

(vi) குழந்தை தாமாகவே முற்படுதல் அல்லது;

(vii) எவரேனும் ஒரு செவிலியர், மருத்துவர் அல்லது மருத்துவ சிகிச்சை மையம், தனியார் மருத்துவமனை அல்லது மகப்பேறு இல்லத்தின் நிருவாகம்.

**வரம்புரையாக :**

குழந்தையை எவ்வித கால இழுப்பின்றி, ஆனால் பயணத்திற்கு அவசியமான நேரம் நீங்கலாக, இருபத்து நான்கு மணி நேரத்திற்குள்ளாக, குழுவின் முன்பாக முன்னிலைப்படுத்த வேண்டும்.

(2) இச்சட்டத்துடன் ஒத்திசைவாக மாநில அரசு பின்வருவன குறித்து விதிகளை உருவாக்க வேண்டும்:- குழுவிடம் அறிக்கையைச் சமர்ப்பிக்கும் முறை, விசாரணைக் காலத்தின்போது குழந்தையை, குழந்தைகள் இல்லம், தகுநிலை வசதியகம் அல்லது தக்காரிடம் பொறுப்பு ஒப்படைக்கும் முறை.

**பிரிவு - 32**

**காப்பாளரிடமிருந்து பிரிக்கப்பட்ட ஒரு குழந்தை குறித்து நீதிசார்ந்த உரிமைக் கட்டளையாகக் கருதி, முறைப்படி தெரியப்படுத்துதல் :**

(1) தனி ஒருவர் அல்லது ஒரு காவல் துறை அலுவலர் அல்லது ஒரு நிறுவனத்தின் செயற் பொறுப்பாளர் அல்லது பண்டுவம் (சிகிச்சை) செய்யும் மருத்துவமனை அல்லது மகப்பேறில்லம் இதில் எவர் ஒருவரோ அல்லது எந்த அமைப்போ கண்டுபிடித்துப் பொறுப்பில் எடுத்துக் கொள்ளவோ அல்லது குழந்தையை அளித்து அது கைவிடப்பட்டக் குழந்தை என முன்னிலை ஆகும் போது அல்லது குடும்பத்தாரின் ஆதரவற்ற தாய் தந்தை இல்லாதக் குழந்தையாகத் தோன்றும் போது அல்லது கோரும் போது இருபத்து நான்கு மணி நேரத்துள்ளாகத் தேவைப்படும் பயண நேரம் நீங்கலாகக் குழந்தை அவசரத் தொலைப்பேசி அழைப்பு அமைப்பின் சேவை அல்லது அருகில் உள்ள காவல் நிலையம் அல்லது குழந்தை நலக்குழு அல்லது மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகிற்கு தகவல் தரப்பட வேண்டும் அல்லது ஒரு குழந்தை பராமரிப்பு நிறுவனத்திடம் நேர்விற்கேற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

(2) உட்பிரிவு (1)-இல் குறித்துச் சுட்டியவாறு, ஒரு குழந்தை குறித்த தகவலை நடுவணரசு அல்லது குழந்தை நலக்குழு (அ) மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு அல்லது குழந்தை பராமரிப்பு நிறுவனம் குறித்துரைக்கும் வகையில் ஒரு வலைத்தளத்தில் கட்டாயமாக பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

**பிரிவு - 33**

**தகவல் தெரிவிக்காமை குற்றம் ஆகும் :**

சட்டப் பிரிவு 32-இன் கீழ் குழந்தை ஒருவரின் தொடர்பானத் தகவல் சட்டப்பிரிவு 32-இல் குறித்துரைக்கப்பட்டக் கால அளவுக்குள்ளாக அளிக்கப்படாத போது, அத்தகையச் செயல் ஒரு குற்றமாகவேக் கருதப்படும்.

**பிரிவு - 34**

**தகவல் தெரிவிக்காமைக்கு தண்டனை :**

பிரிவு 33-இன் கீழ் குற்றம் ஒன்று புரிந்திருக்கும் எந்த ஒரு நபருக்கு ஆறு மாதங்கள் வரையிலான சிறைத் தண்டனை அல்லது ரூபாய் பத்தாயிரம் வரையில் தண்டத் தொகை (அபராதம்) அல்லது அவை இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுவார்.

**பிரிவு - 35**

**குழந்தைகள் சரண் செய்யப்படுதல் :**

(1) எந்தவொரு பெற்றோர் அல்லது காப்பாளர் உடல் அளவிலும், உள்ளத்தெழுச்சி அளவிலும் மற்றும் சமூகக் காரணிகளாலும் ஆளுகைக் கட்டுப்பாட்டை மீறிய நிலையில் குழந்தையைச் சரண் செய்ய விழையும்போது, அவரைக் குழுவின் முன்பாக முன்னிலைப்படுத்த வேண்டும்.

(2) குறித்துரைக்கப்பட்ட விசாரணைமுறை மற்றும் உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்துதலுக்குப் பின்பு, குழு மன நிறைவுற்றால் பெற்றோர் (அ) காப்பாளரால் நேர்வுக்கேற்ப குழுவின் முன்பு சரண் செய்விக்கும் பத்திரத்தை விடுவிப்பு ஆவணமாக எழுதி நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) குழந்தையை விடுவித்து சரண் செய்யும் பெற்றோர் அல்லது காப்பாளருக்கு அவர்களின் இந்த முடிவை மறுபரிசீலனை செய்வதற்கு சில மாதகால அவகாசம் அளித்தல் வேண்டும்; மற்றும் இடைப்பட்ட காலத்தில் குழு உரியதொரு விசாரணைக்குப் பிறகு குழந்தை ஆறு வயதிற்கு கீழிருக்கும்போது மேற்பார்வையின் கீழ் அவரை பெற்றோர் (அ) காப்பாளரிடம் ஒப்படைக்கவும் அல்லது தனிச்சிறப்புத் தத்தெடுப்பு முகமையிடம் ஒப்படைக்கவும், ஆறு வயதிற்கு மேற்பட்டவராக இருக்கும் போது, ஒரு குழந்தையை குழந்தைகள் இல்லத்தில் நிறுத்தி வைக்க அனுமதிக்க வேண்டும்.

**பிரிவு - 36**

**விசாரணை**

(1) குழந்தை ஒருவரை முன்னிலைப்படுத்தியதன் பேரில் அல்லது சட்டப்பிரிவு (31)-இன் கீழ் அறிக்கை ஒன்றைப் பெற்றதன் பேரில் வகுத்துரைக்கப்படலாமென்றவாறு அத்தகைய வழி முறையில், குழு விசாரணையை மேற்கொள்ள வேண்டும். குழு தாமாக முற்பட்டோ அல்லது சட்டப்பிரிவு 31, உட்பிரிவு (2)-இல் குறித்த எவரேனும் ஒரு நபர் அல்லது முகமையிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையின் பேரில், குழந்தையை குழந்தைகள் இல்லம் அல்லது தகுநிலை வசதியகம் அல்லது தக்காரிடம் அனுப்ப ஆணையிட வேண்டும். மற்றும் சமூகப் பணியாளர் அல்லது குழந்தை நல காவல் அலுவலர் சமூகப் புலனாய்வு விரைந்து மேற்கொள்ளுமளவில் ஆணை பிறப்பித்தல் வேண்டும்.

**வரம்புரையாக**

பெற்றோரில்லாத அல்லது சரண் செய்யப்பட்ட அல்லது கைவிடப்பட்டதாகத் தோன்றும் நிலையில் காணப்படும் குழந்தைகள் அனைவரும் ஆறு வயதிற்கு கீழிருக்கும் போது அவர்களைத் தனிச்சிறப்புத் தத்தெடுப்பு முகமை இருக்குமிடத்தில் அவர்களைத் தங்க வைக்க வேண்டும்.

(2) குழந்தை முதலாவதாக முன்னிலைப்படுத்தியதிலிருந்து நான்கு மாத காலத்திற்குள்ளாக, இறுதி ஆணை பிறப்பிக்க குழுவினை இயல்விக்க, சமூக புலனாய்வை பதினைந்து நாட்களுக்குள்ளாக முடிக்க வேண்டும்.

**வரம்புரையாக**

பெற்றோரால் கைவிடப்பட்ட அல்லது சரண் செய்யப்பட்ட குழந்தைகளைப் பொறுத்தமட்டில், சட்டப்பிரிவு 38-இல் குறிப்பிட்டவாறு, விசாரணையை அந்தக் கால அளவிற்குள் முடிக்க வேண்டும்.

(3) விசாரணை முடிவுற்றப் பின்பு, சொல்லப்பட்ட அத்தகையக் குழந்தைக்கு குடும்ப உதவியோ, வெளிப்படையான ஆதரவோ இல்லை என்றோ, மற்றும் அக்குழந்தைக்கு பராமரிப்பும் பாதுகாப்பும் தொடர்ந்து தேவையாக உள்ளது எனக் குழு கருதும்போதோ, அக்குழந்தை ஆறு வயதிற்கு கீழிருந்தால், ஒரு தனிச்சிறப்பு தத்தெடுப்பு முகமைக்கு, குறித்துரைக்கப்படலாமென்றவாறு, குழந்தைக்கு ஏற்புடைய மறுவாழ்வு வழிமுறைகள் கண்டறியும் வரை, குழந்தைகள் இல்லம் அல்லது தகுநிலை வசதியகம் அல்லது தக்காரிடம் அல்லது வளர்ப்பு பேணுகை இல்லத்தில் அத்தகைய வகுத்துரைக்கப்பட்ட வயது வரையில் அல்லது அக்குழந்தை பதினெட்டு வயது நிறைவெய்தும் வரை அங்கு நிறுத்தி வைக்க அனுப்ப வேண்டும்.

**வரம்புரையாக**

குழந்தை தங்க வைக்கப்பட்டிருக்கும் குழந்தைகள் இல்லம் அல்லது தக்கார் வசதியகம் அல்லது தக்கார், வளர்ப்பு பேணுகை இல்லம் சூழலை வகுத்துரைத்தவாறு, குழுவால் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.

(4) விசாரணை முடிவுறாத வழக்குகள் மற்றும் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் தன்மையை மீளாய்வு செய்ய அதன் மீதான ஒரு காலாண்டு அறிக்கையை வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய முறையில், மாவட்ட நடுவருக்கு அனுப்ப வேண்டும்.

(5) சட்ட உட்பிரிவு (4)-ன் கீழ் மீளாய்வுக்குப் பின்பு மாவட்ட நடுவர் நிலுவையிலுள்ள வழக்குகளைக் குறைக்க அவசியமான தீர்வுகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள, குழுவிற்கு ஆணையிட வேண்டும்.

அவசியம் ஏற்படின் அத்தகைய மறு ஆய்வுகளை அறிக்கையாக அரசுக்கு அனுப்ப வேண்டும்; தேவை ஏற்பட்டால் கூடுதலான குழுக்களை நிறுவலாம்.

**வரம்புரையாக**

அத்தகைய ஆணைகள் பெறப்பட்ட மூன்று மாதங்களுக்குப் பின்னரும் கூட, வழக்கு நிலுவை நிலை குறித்து அக்கறையின்றி தொடர்ந்து வாளாவிருந்தால் மாநில அரசு, சொல்லப்பட்ட அந்தக் குழுவைக் கலைத்தல் வேண்டும்; அதற்குப் பதிலாக, ஒரு புதிய குழுவை ஏற்படுத்த வேண்டும்.

(5) குழு இரத்து செய்வதை எதிர்நோக்கி மற்றும் புதியதோர் குழுவை ஏற்படுத்துவதில், எவ்விதக் கால இழப்புமின்றி, குழுவின் உறுப்பினர்களாக பணி நியமனம் செய்யப்படுவதற்கு, தகுதி படைத்த நபர்களின் நிலையான தேர்ந்தப் பட்டியல் ஒன்றினை மாநில அரசு பேணி வருதல் வேண்டும்.

(6) உட்பிரிவு (5)-ன் கீழாக, புதியதொருக் குழுவை ஏற்படுத்துவதில் ஏதேனும் கால தாமதம் ஏற்படும் தறுவாயில், ஒரு அருகாமையிலுள்ள மாவட்டத்தின் குழந்தை நலக்குழு, இடைப்பட்டக் கால அளவில் கூடுதலாகப் பொறுப்பேற்க வேண்டும்.

**பிரிவு - 37**

**பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் ஒரு குழந்தை தொடர்பாக பிறப்பிக்கப்படும் ஆணைகள் :**

(1) குழுவின் முன்பாக முன்னிலையானக் குழந்தை பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தையாக இருக்கிறார் என விசாரணை மூலம் குழு மன நிறைவு (திருப்தி) கொள்ளும்போது, குழந்தை நல அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட சமூகப் புலனாய்வு அறிக்கையின் பேரில் மற்றும் ஒரு கருத்தை குழந்தை தெரிவிக்கப் போதுமான முதிர்ச்சியைப் பெற்றிருக்கும் போது அவரது விருப்பங்களைக் கருத்திலிருத்திக் கீழ்வரும் ஆணைகளில் ஒன்றை அல்லது அதற்கும் மேற்பட்ட ஆணைகளைக் குழு பிறப்பிக்கலாம் அதாவது:-

(அ) ஒரு குழந்தைக்கு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படுகிறது என விளம்புகை செய்தல்.

(ஆ) குழந்தை நல அலுவலர் (அ) பெயர் குறிப்பிடப்பட்ட சமூகப் பணியாளர் மேற்பார்வையுடன் அல்லது அவ்வாறின்றி பெற்றோர் (அ) காப்பாளர் (அ) குடும்பத்தாரிடம் குழந்தையை மீண்டும் ஒப்படைத்தல்.

(இ) குழந்தையின் குடும்பத்தாரைக் கண்டறிய இயலாது என்ற முடிவிற்கு வந்த பின்போ அல்லது கண்டுபிடிக்கப்பட்டாலோ குழந்தையை மீண்டும் ஒப்படைத்தல் என்பது அந்த குழந்தையின் தேர்ந்த உயரிய நலப்பற்றின்பால் அமையாது என்றபோது நீண்டகாலத் தத்தெடுப்பு அல்லது தற்காலிகப் பராமரிப்பிற்கான தத்தெடுப்பு நோக்கத்திற்காக, அத்தகையக் குழந்தைகளைத் தங்க வைக்க குழந்தைகள் இல்லம் (அ) தகுநிலை வசதியிடம் (அ) தனிச்சிறப்பு தத்தெடுப்பு முகமையின் கொள்திறத்தை (இடவசதியை) மனதிலிருத்தி, குழு அந்த நிறுவனத்தில் குழந்தையைத் தங்க வைத்தல் வேண்டும்.

(ஈ) நீண்டகால அல்லது தற்காலிகமான பராமரிப்புக்கு தக்காரிடம் குழந்தையை ஒப்படைக்கலாம்;

(உ) சட்டப்பிரிவு 44-இன் கீழாக வளர்ப்பு பேணுகை ஆணைகள்;

(ஊ) சட்டப்பிரிவு 45-இன் கீழாக ஏற்பாதரவுத் திட்டத்தில் ஆணைகள்;

(எ) குழந்தையின் பராமரிப்பு பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு தொடர்பான குழந்தை எந்த நபர்கள் அல்லது நிறுவனங்கள் அல்லது வசதியிடங்களுக்கு ஆணை பிறப்பித்தல் என்பதில் குழந்தைக்கு உடனடியாகப் புகலிடம் அளித்தல், மருத்துவ பண்டுவம், உளவியல் மருத்துவம் மற்றும் உளவியல் அணுக்கத் தேவையின் அடிப்படையிலான ஆற்றுப்படுத்துதல், வாழ்க்கைத் தொழில் வழி மாற்றுச் சிகிச்சை, நடத்தை மாற்றமைவு சிகிச்சை, செயல்திறப் பயிற்சி, சட்ட உதவி, கல்விச் சேவைகளை உள்ளடக்கிய ஏனைய மேம்பாட்டுச் செயல் நடவடிக்கைகள் அதே போன்று மாவட்டக் குழந்தைப் பாதுகாப்பு அலகு அல்லது மாநில அரசு மற்றும் ஏனைய முகமைகளுடன் தொடர் நடவடிக்கை மற்றும் ஒருங்கிணைப்பும் இதில் உள்ளடங்கிய ஆணைகள்.

(ஏ) சட்டப்பிரிவு 38-இன் கீழாக தத்தெடுப்பிற்காகக் குழந்தை, தடையில்லா நிலையில் சட்டப்படித் தகுதி படைத்து, தற்சார்பாக உள்ளார் என்பதை விளம்புதல்.

(2) குழு கீழ்க்கண்டவற்றிற்கு ஆணைகள் பிறப்பிக்கலாம்:-

(i) வளர்ப்பு பேணுகைக்காகத் தக்காரை விளம்பலாம்.

(ii) இச்சட்டத்தின் பிரிவு 46-இன் கீழாக பிற்காப்பு உறுதுணையாகவிருத்தல்

அல்லது

(iii) வகுக்கப்படலாமென்ற ஏதேனுமொரு ஏனைய செயற்கடமை தொடர்பான ஏதேனுமொரு பிற ஆணையைப் பிறப்பித்தல்.

**பிரிவு - 38**

**தத்தெடுப்பதற்கான ஒரு குழந்தை, சட்டப்படி தகுதி உள்ளவராக அறிவிப்பதற்கான நடைமுறை:**

(1) தாய் தந்தை அற்றக் குழந்தை மற்றும் கைவிடப்பட்டக் குழந்தையைப் பொறுத்தவரையில், அந்த குழந்தையின் பெற்றோர் அல்லது காப்பாளரைக் கண்டுபிடிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் குழு மேற்கொள்ள வேண்டும்; மற்றும் அத்தகைய விசாரணையின் முடிவில் அந்தக் குழந்தை தாய் தந்தை அற்றக் குழந்தை அல்லது அவரை எவரும் பராமரிக்க முன்வரவில்லை என்றோ அல்லது கைவிடப்பட்டவர் என்றோ உறுதிப்படுத்தப்பட்டால், அக்குழந்தை தத்தெடுப்பிற்கு சட்டப்படி தகுதியானவர் எனக் குழு விளம்புகை செய்தல் வேண்டும்.

**வரம்புரையாக**

இரண்டு வயது வரை உள்ள குழந்தைகளுக்காக அக்குழந்தையைக் குழுவிடம் ஒப்பளிப்பு செய்த நாளிலிருந்து இரண்டு மாதக் காலத்திற்குள்ளாகவும் மற்றும்

இரண்டு வயதிற்கு மேற்பட்டு இருக்கும் குழந்தைக்கு நான்கு மாதத்திற்குள்ளாகவும் அத்தகைய அறிவிப்பு செய்தல் வேண்டும்.

**மேலும் வரம்புரையாக**

(1) தற்போது நடைமுறையில் உள்ள ஏனைய

சட்டம் எதிலும் என்ன சொல்லப்பட்டிருந்தாலும், இச்சட்டத்தின் கீழ் முற்றிலும் கைவிடப்பட்டக் குழந்தை அல்லது சரண் செய்து விடுவிக்கப்பட்ட குழந்தை குறித்து விசாரணை நெறிமுனையின்போது அக்குழந்தையின் உயிரியல் ரீதியான பெற்றோருக்கு எதிராக, முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யக்கூடாது.

(2) ஒப்பளிப்பு செய்யப்பட்ட ஒரு குழந்தையின் நேர்வில், அதற்கான ஒரு மனுவின் பேரில், குழுவால் குழந்தை தங்க வைக்கப்பட்டுள்ள அந்த நிறுவனம், தத்தெடுப்பிற்காக குழந்தை சட்டபூர்வமான தகுதி உடையவர் என அறிவிக்கை செய்வதற்காக சட்டப்பிரிவு 35-இல் வகுத்துரைத்த குறிப்பிட்ட காலம் நிறைவெய்தியவுடன், குழுமத்தின் முன்பு அந்த வழக்கை உடனடியாக கொணர வேண்டும்.

(3) அப்போதைக்குச் செயலாக்கத்தில் உள்ள ஏதேனுமொரு பிற சட்டத்தில் உள்ளவை எவற்றையும் கருத்திலிருத்தாமல், ஒரு மனவளர்ச்சிக் குன்றிய பெற்றோரின் ஒரு குழந்தையை அல்லது பாலியல் வன்முறையில் பாதிப்புக்குள்ளான ஒரு வேண்டப்படாத நிலையிலுள்ளக் குழந்தையின் நேர்வில், இந்த சட்டத்தின் கீழான நடைமுறையைக் கடைப்பிடித்து, அத்தகைய குழந்தை தத்தெடுப்பதற்கு சட்டபூர்வமாக தகுதியுள்ளவர் என குழுமத்தால் அறிவிக்கப்படலாம்.

(4) ஒரு தாய் தந்தையற்ற குழந்தை, முற்றிலும் கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்டக் குழந்தையைத் தத்தெடுப்பிற்கு சட்டபூர்வமாக தத்தெடுப்பதற்கு தடையிலா தகுதி உடையவர் என அறிவிக்கை செய்வதற்கான முடிவு குறைந்தது குழுமத்தின் மூன்று உறுப்பினர்களால் எடுக்கப்பட வேண்டும்.

(5) ஒவ்வொரு மாதமும், தத்தெடுப்புக்குச் சட்டபூர்வ தகுதி உடையவர் என விளம்புகை செய்யப்பட்டக் குழந்தைகளின் எண்ணிக்கை தொடர்பான தகவலை மற்றும் இறுதி முடிவுக்காக, முடிவுறா விசாரணையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையையும் மாநில முகமை மற்றும் அதிகார அமைப்புக்கு குறித்துரைத்த வகையில் குழுமம் தெரிவித்தல் வேண்டும்.

# இயல் 7

## மறு வாழ்வு மற்றும் சமூக மறு ஒருங்கிணைப்பு

**பிரிவு - 39**

**மறுவாழ்வு மற்றும் சமூக மறு ஒருங்கிணைப்பின் நடைமுறை**

(1) இச்சட்டத்தின் கீழான குழந்தைகளின் மறுவாழ்வு மற்றும் சமூக ஒருங்கிணைப்புக்காகக் குழந்தையின் பராமரிப்புத் தொடர்பான நடவடிக்கைகள் குழந்தையின் தனி பராமரிப்புத் திட்டத்தின் அடிப்படையில் எடுக்க வேண்டும்.

குழந்தையை மேற்பார்வை செய்தல் அல்லது அவ்வாறின்றி குடும்பம் அல்லது காப்பாளரிடம் மீட்டு ஒப்படைத்தல் அல்லது ஏற்பாதரவுத் திட்டம் அல்லது தத்தெடுப்பு அல்லது வளர்ப்பு (பேணுகை) போன்ற அத்தகைய முன்னுரிமையான குடும்பம் சார்ந்த பராமரிப்பு மூலம் செயலாக்கம் மேற்கொள்ள வேண்டும்.

**வரம்புரையாக**

(1) உடன் பிறந்தோர் ஒரு சேர வைக்கப்படாமல் இருப்பது அவர்களின் தேர்ந்த உயர்நலப்பற்றின் காரணமாக இருந்தாலன்றி, நிறுவனத்தின் அல்லது நிறுவனம் சாரா பராமரிப்பில் அவர்கள் ஒன்றாக இணைத்து வைக்கப்படுவதற்கான எல்லா முயற்சிகளும் எடுக்க வேண்டும்.

(2) சட்டத்துடன் முரணான குழந்தைக்காக, அக்குழந்தைப் பிணையில் விடுவிக்கப்படவில்லையெனில் கூர் நோக்கில்லத்தில் அல்லது சிறப்பில்லத்தில் அல்லது தகுநிலை வசதியகத்தில் அல்லது தக்காரிடத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தால், அல்லது குழுமத்தின் ஆணையால் வைக்கப்பட்டிருந்தால் அவ்விடத்திலும் குழந்தைகளின் மறுவாழ்வு மற்றும் மறு ஒருங்கிணைப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்,

(3) பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் ஏதேனுமொரு காரணத்தால் குடும்பத்தில் வைக்கப்படாத போது, இச்சட்டத்தின் கீழ், அத்தகைய குழந்தைக்கென்று பதிவு செய்யப்பட்ட, ஒரு நிறுவனத்தில் அக்குழந்தைகளைத் தங்க வைத்தல் வேண்டும் அல்லது தக்காருடன் அல்லது தகுநிலை வசதியகத்தில், ஒரு தற்காலிக (அ) நெடிய கால அளவிலான அடிப்படையில் தங்க வைக்க வேண்டும்; அந்தக் குழந்தை தங்க வைக்கப்பட்டிருக்கும், அந்த நிறுவனம் அல்லது தக்கார் அந்தக் குழந்தையின் மறுவாழ்வு மற்றும் சமூக மறு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(4) சட்டத்துடன் முரண்பட்ட குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள், நிறுவனப் பராமரிப்பிலிருந்து விடுவிக்கப்படும் போது அல்லது பதினெட்டு வயது எய்திய நிலையில் சிறப்பில்லங்கள் அல்லது பாதுகாப்பு

அமைவிடத்திலிருந்து விடுவிக்கப்படும் போது அவர்கள் சமூக மைய நீரோட்டத்தில் மீண்டும் கூட்டாக இணைந்திட அவர்களுக்கு பிரிவு 46-இல் குறிப்பிட்டவாறு பொருளாதார ஆதரவு நல்குதல் வேண்டும்.

**பிரிவு - 40**

**பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தையை மீள ஒப்படைத்தல் :**

(1) ஒரு குழந்தையை மீட்டளித்தல் மற்றும் பாதுகாத்தல், என்பவை குழந்தைகள் இல்லம், தனிச்சிறப்பு தத்தெடுப்பு முகமை அல்லது திறந்த வெளி புகலிடத்தின் முதன்மை நோக்கமாக அமையும்.

(2) நேர்விற்கேற்ப, குழந்தைகள் இல்லம், தனிச்சிறப்பு தத்தெடுப்பு முகமை அல்லது திறந்தவெளி புகலிடம் குடும்ப சூழலிலிருந்து தற்காலிகமாகவோ அல்லது நிலையானதாகவோ பிரிக்கப்பட்ட குழந்தையை, அவர் எவருடைய பராமரிப்பிலும், பாதுகாப்பிலும், ஒப்படைக்கப்பட்டுள்ளாரோ, அதற்கு அவசியமாகக் கருதப்படும் எல்லாக் கட்டங்களையும் மேற்கொள்ள வேண்டும்.

(3) பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தையை அவரது பெற்றோர் (அ) காப்பாளர் (அ) தக்கார் அவரைப் பராமரிக்கப் பாதுகாக்கத் தகுதி உடையவராய் உள்ளார் என்பதற்கான, ஏற்புடைய சூழலை முடிவு செய்த பின்னர், அவர்களிடம் மீண்டும் ஒப்படைக்கக் குழு அதிகாரம் பெற்றுள்ள நிலையில் பொருத்தமானக் கட்டளைகளைப் பிறப்பிக்க வேண்டும்.

**விளக்கம் :**

இந்த சட்டப்பிரிவின் நோக்கங்களுக்காக ஒரு குழந்தையின் மீண்டும் ஒப்பளிப்பு மற்றும் பாதுகாப்பு என்பது கீழே குறிப்பிட்டோரிடம் திரும்பவும் ஒப்படைப்பு எனப் பொருள்படும்.

(அ) பெற்றோர்

(ஆ) தத்தெடுப்பு பெற்றோர்

(இ) வளர்ப்பு பேணுகை பெற்றோர்

(ஈ) காப்பாளர் அல்லது

(உ) தக்கார்

**பிரிவு - 41**

**குழந்தை பராமரிப்பு நிறுவனங்களைப் பதிவு செய்தல் :**

(1) அப்போதைக்கு நடைமுறையில் உள்ள ஏனையச் சட்டம் எதிலும் என்ன சொல்லப்பட்டிருந்தாலும் கருத்தில் கொள்ளாமல், பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத்

தேவைப்படும் குழந்தை அல்லது சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தை நிறுத்தி வைக்கப்படுவதற்கு, முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ மாநில அரசால் நிறுவப்பட்ட அல்லது தன்னார்வத் தொண்டு நிறுவனம் அல்லது அரசு சாரா அமைப்புகளால் நிறுவப்பட்ட எல்லா நிறுவனங்களையும், இச்சட்டம் அமலாக்கத்திற்கு வந்த தொடக்க நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள்ளாக குறித்துரைக்கப்பட்ட வகையில் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்; அது நடுவணரசு அல்லது மாநில அரசின் நிதி உதவி பெற்றாலும், பெறாவிட்டாலும் பதிவு செய்யப்பட வேண்டும்.

**வரம்புரையாக :**

இச்சட்டம் நடைமுறைக்கு வந்த தொடக்க நாளில் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்டம் 2000) (56/2000)-இன் கீழாக செல்லத்தக்க பதிவைக் கொண்டுவரும் நிறுவனங்கள், இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாதாகவே கொள்ளப்படும்.

(2) இப்பிரிவின் கீழாக பதிவு செய்யப்படும் சமயத்தில் மாநில அரசு, நிறுவனத்தின் கொள்திறம் (இடவசதி அளவு) மற்றும் நோக்கத்தை முடிவு செய்து அதனைப் பதிவு செய்ய வேண்டும். அந்த நிறுவனத்தை ஒரு குழந்தைகள் இல்லமாகவோ அல்லது திறந்தவெளிப் புகலிடமாகவோ அல்லது தனிச்சிறப்பு தத்தெடுப்பு முகமையாகவோ அல்லது கூர்நோக்கில்லமாகவோ அல்லது சிறப்பில்லமாகவோ அல்லது பாதுகாப்பு அமைவிடமாகவோ எதுவாக இருந்தாலும் பதிவு செய்யப்பட வேண்டும்.

(3) பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்துடன் முரண்பட்ட குழந்தைகளைத் தங்க வைக்கத் தற்போது இயங்கி வரும் அல்லது புதியதொரு நிறுவனத்தை, இச்சட்டத்தின் செயல் எல்லைக்கு உட்படுத்தி பதிவு செய்யலாம்; அந்த நிறுவனத்தின் கொள்திறத்தை (இடவசதி அளவு) முடிவு செய்து பதிவு செய்வதற்கான சான்றிதழில் குறிப்பிடப்பட வேண்டும்.

**வரம்புரையாக :**

பதிவு செய்வதற்கு குறித்துரைக்கப்பட்ட அளவீட்டை, மேற்கூறிய நிறுவனம் சட்ட உட்பிரிவு (1)-இல் குறித்துரைக்கப்பட்ட காலவரம்பில் இன்றியமையாத தேவைகள் நிறைவேற்றப்படாதபோது, தற்காலிகமான பதிவுநீக்கம் செய்யப்படும் மற்றும் சட்ட உட்பிரிவு (5)-இன் வகையங்கள் அதற்குப் பொருந்துவதாக அமையும்.

(4) மனுச் செய்த நபரிடமிருந்து மாநில அரசு ஒரு மாத காலத்திற்குள்ளாக தற்காலிகப் பதிவுச் சான்றிதழ் வழங்காத போது, பதிவு செய்தலுக்காக விண்ணப்பம் பெற்றதற்கான சான்றாதாரத்தை அத்தகைய நிறுவனம் பெருமக்கால அளவாக (அதிகபட்சம்) ஆறு மாதங்கள் வரை செயல்பட சிறுமக் கால அளவிற்காகத் தரப்பட்ட பதிவுச் சான்றிதழாகக் கொள்ளப்பட வேண்டும்.

(5) பதிவு செய்தலுக்கான விண்ணப்பத்தை மாநில அரசின் அலுவலர் எவரும் அல்லது அலுவலர்கள் அல்லாத எவரெனினும் ஆறு மாத காலத்திற்குள்ளாக முடிக்காத போது அது கடமையினின்றும் வழுவியதாகும் என உயர் நிலை ஆட்சி அதிகார அமைப்பால் கருதப்பட்டு, அவர்களுக்கு எதிராக துறைநிலையிலான ஒழுங்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

(6) ஒரு நிறுவனத்திற்கான பதிவு கால எல்லையானது ஐந்தாண்டுகள் ஆகும் மற்றும் ஐந்தாண்டுகளுக்கொருமுறை பதிவு செய்து முறையே புதுப்பிக்கப்பட வேண்டும்.

(7) மாநில அரசு வகுத்துரைத்த நடைமுறைகளைப் பின்பற்றி, நேர்விற்கேற்ப பதிவு செய்தமையை நீக்கம் செய்யலாம் அல்லது பதிவு செய்ததை நிறுத்தி வைக்கலாம். அத்தகைய நிறுவனங்கள் பிரிவு 53-இல் குறித்துரைக்கப்பட்ட மறுவாழ்வு அல்லது மறுஒருங்கிணைப்பு வழங்கத் தவறிய நிலையில் அவ்வாறு செய்யலாம். அந்த நிறுவனத்தைப் பதிவு செய்ததைப் புதுப்பிக்கப்படும் வரை அல்லது பதிவு செய்தல் வழங்கப்படும் அத்தகைய காலம் வரையில், மாநில அரசு அந்த நிறுவனத்தை ஏற்று நிருவாகம் செய்ய வேண்டும்.

(8) இச்சட்டப் பிரிவின் கீழாக குழந்தை பராமரிப்பு நிறுவனம் எதுவும் அதன் கொள்திறத்திற்கு உட்பட்டு குழந்தைகளை (குழந்தை நலக்) குழுவின் ஆணை வழி, குழந்தைகளைச் சேர்ப்பதற்கு கடமைப்பட்டதாகும். அது நடுவணரசின் (அ) மாநில அரசின் பொருளுதவியைப் (மானியம்) பெற்றாலும் பெறவில்லையெனினும், நேர்விற்கேற்ப அவ்வாறு குழந்தைகளைச் சேர்க்க கடப்பாடு உடையதாகும்.

(9) தற்போது நடைமுறையிலுள்ள ஏனைய எந்த சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருந்தாலும் கருத்தில் கொள்ளாமல், பிரிவு 54-இன் கீழாக நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழு, குழந்தைகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் எந்த நிறுவனத்தையும் ஆய்வு செய்யத்தக்க அதிகாரத்தை உடையதாகவிருக்கும். இச்சட்டத்தின் கீழ் நிறுவனம் ஒன்று பதிவு செய்யப்படவில்லை எனினும் அத்தகைய நிறுவனம் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளை தங்க வைக்கத் தகுதி கொண்டதாக உள்ளதா என்பதைத் தீர்மானிக்க, அவற்றை ஆய்வு மேற்கொள்ளலாம்.

**பிரிவு - 42**

**குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் பதிவு செய்யப்படாமல் இருப்பின், அதற்கான தண்டனை :**

(1) பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணான குழந்தைகளை தங்க வைத்துள்ள நிறுவனம் ஒன்றுக்குப் பொறுப்பேற்றுள்ள எவரேனும் ஒரு நபர் அல்லது நபர்கள் பிரிவு-41, உட்பிரிவு

(1)-இன் கீழ் வகையங்களை நிறைவேற்றத் தவறும் நிலையில் அவர் ஓராண்டு காலம் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

**வரம்புரையாக :**

பதிவு செய்யும் பொருட்டு விண்ணப்பிப்பதில் ஏற்படும் ஒவ்வொரு முப்பது நாட்கள் காலதாமதமும், ஒரு தனிக்குற்றமாகக் கருதப்பட வேண்டும்.

**பிரிவு - 43**

**திறந்தவெளி புகலிடம் :**

(1) மாநில அரசு தாமாகவோ அல்லது தன்னார்வ அமைப்புகள் அல்லது அரசுசாரா அமைப்புகள் மூலமாகவோ தேவைப்படும் அளவில் திறந்தவெளிப் புகலிடங்களை நிறுவிப் பேணலாம் அல்லது குறித்துரைக்கப்பட்ட முறையில் அத்தகைய திறந்தவெளிப் புகலிடங்கள், அவ்வாறான முறையில் பதிவு செய்வதை மேற்கொள்ளலாம்.

(2) உட்பிரிவு (1)-இல் சுட்டியவாறு, திறந்தவெளி புகலிடங்கள், உறையுள் ஆதார உதவி தேவையாகும் குழந்தைக்கு சமுதாய அடிப்படையிலான வசதியகமாக, குறுகிய கால அடிப்படையில் செயலாற்ற வேண்டும். அது குழந்தைகளை முறைகேடாக பயன்படுத்துவதிலிருந்து பாதுகாக்கும் நோக்கத்துடன் செயற்படுதல் வேண்டும். அவர்களை பழக்கத் தொடர்பற்றவர்களாக்குவது அல்லது அவர்களை வாழ்க்கைத் தடத்திலிருந்து ஒதுக்கி வீதியோர வாழ்க்கையோடு புறந்தள்ளும் நிலையினின்றும் பாதுகாக்கும் குறிக்கோளுடன் செயற்கடமை ஆற்ற வேண்டும்.

(3) திறந்த வெளிப்புகலிடத்தில் குறித்துரைக்கப்பட்ட வகையில், குழந்தைகளுக்கு கிடைக்கப்பெறும் சேவைகள் தொடர்பான தகவலை, ஒவ்வொரு திங்களும், மாவட்டக் குழந்தை பாதுகாப்பு அலகு மற்றும் குழுமத்திற்கு திறந்த வெளிப் புகலிடங்கள் அனுப்ப வேண்டும்.

**பிரிவு - 44**

**வளர்ப்புப் பேணுகை இல்லம் :**

(1) பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகளை, வளர்ப்பு பேணுகையில் தங்க வைக்கலாம். பேணுகை வளர்ப்பு என்பது இதன் பொருட்டான குறித்துரைக்கப்பட்ட நடைமுறைகளைக் கடைப்பிடித்து, குழுவின் ஆணைகள் மூலம் உருவாக்கப்பட்டக் குழு அமைப்பாக உள்ள வளர்ப்பு பேணுகையும் உள்ளடக்கும். ஒரு குடும்பம் என்பது, குழந்தையின் உயிரியல் ரீதியான ஈன்று புறந்தந்த பெற்றோரின் குடும்பம் அல்லது குழந்தையைத் தத்தெடுத்த பெற்றோரின் குடும்பம் இதில் உள்ளடங்காது அல்லது இதன் நோக்கத்திற்காக மாநில அரசால் ஒரு சிறுமக் கால அளவிற்கு அல்லது நீட்டிக்கப்பட்ட ஒரு கால அளவில் தகுதி

படைத்ததாக அங்கீகரிக்கப்பட்ட குடும்பத்துடன் உறவு அமையாத ஒரு குடும்பமும் இதில் உள்ளடங்காது.

(2) குழந்தை வளர்ப்பு பேணுகை குடும்பத்தை தேர்வு செய்தல் என்பது குடும்பத்தாரின் திறப்பாடு, மன நோக்கம், தகவுடைமை மற்றும் குழந்தைகளைப், பராமரிப்பு மேற்கொள்வதற்கான பட்டறிவு (அனுபவம்) ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு செய்தல் வேண்டும்.

(3) குழந்தை வளர்ப்பு பேணுகையில் ஏனைய உடன் பிறந்தோருடன் ஒன்றுபடச் சேர்த்து வைத்தல், குழந்தையின் நலனுக்கு ஏற்புடையதன்று என்றிருந்தாலன்றி பிறவாறு குழந்தைகளை வளர்ப்பு பேணுகையில் மற்றவர்களுடன் சேர்த்து வைத்தலுக்கான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

(4) மாநில அரசு, குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு அத்தகைய வளர்ப்புப் பேணுகைக்குக் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பின்பற்றிய பின்பு, மாவட்டக் குழந்தைப் பாதுகாப்பு அலகின் மூலம் திங்கள் தோறும் நிதி வழங்குதல் வேண்டும் குழந்தைகளின் செவ்விய நலனை உறுதிப்படுத்துவதை இயல்விக்கும் விதமாக ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

(5) குழந்தையின் பெற்றோர் தகுதி அற்றவர்கள் அல்லது திறமையற்றவர்கள் என்று குழுவால் கண்டறியப்பட்டு, குழுவால் வளர்ப்பு பேணுகை குடும்பத்தில் தங்க வைத்திருக்கும் நேர்வில், அக்குழந்தையின் பெற்றோர் அக்குழந்தைகளைப் பார்வையிடுதல், அக்குழந்தைகளின் நலனுக்கு உகந்ததன்று என்று குழு கருதினாலன்றி, பிறவாறு அக்குழந்தையின் பெற்றோர் அக்குழந்தைகளை பேணுகை வளர்ப்பகத்தில், முறையான இடைவெளியில் நேர்காண அனுமதி அளிக்கவும். பதிவு செய்யப்படும் காரணங்களுக்காக குழந்தையின் உயர் நலப்பற்றிற்கு உகந்தது இல்லை எனக் குழுவால் ஒருவேளை முடிவு செய்வதன் விளைவாக, குழந்தையை அவரது பெற்றோர் இல்லத்திற்கு ஒரு தடவை திரும்ப அனுப்பலாம்.

(6) வளர்ப்புப் பேணுகை இல்லம் குழந்தைக்குக் கல்வி, உடல் நலம் மற்றும் சத்துணவு அளிக்கும் பொறுப்பு, குழந்தையை வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய முறையில் ஒட்டுமொத்தமான நலனை இயல்விக்கும் விதமாக அமைய வளர்க்க வேண்டும்.

(7) குழந்தைகளுக்கு வளர்ப்புப் பேணுகை எவ்வகையில் வழங்கப்பட வேண்டும் என்பதை விரித்துரைக்கும் நோக்கில், நடைமுறைகளின் அளவீடு குறித்த நோக்கத்திற்காக மாநில அரசு விதிகளை இயற்றலாம்.

(8) குழந்தைகளின் வளர்ப்புப் பேணுகை, குடும்பத்தார் குறித்துரைக்கப்பட்ட வகையில், குழுவால் திங்கள்தோறும் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த இல்லங்களில் குழந்தைகள் செவ்வனேப் பேணப்படுகின்றனரா என்பதை முறையே ஆய்வு செய்தல் வேண்டும். ஒரு குழந்தையின் வளர்ப்புப் பேணுகை இல்லம், குழந்தைகளை நன்முறையில் பராமரிக்கவில்லை எனக் கண்டறிய நேர்ந்தால்,

குழுவானது குழந்தையை அந்த வளர்ப்புப் பேணுகை இல்லத்திலிருந்து நீக்கம் செய்துத் தக்கதெனக் கருதும் பிறிதொரு இல்லத்திற்கு இடமாற்றம் செய்விக்கலாம்.

(9) குழுவால் ஏற்கப்படும் குழந்தையை, அக்குழுவானது நெடுங்காலப் பேணுகை வளர்ப்புக்கு அளித்தலாகாது.

**பிரிவு - 45**

**ஏற்பாதரவுத் திட்டம் :**

(1) குழந்தைக்கு தனி ஆளாக ஏற்பாதரவுத் திட்டம் தொடர்ந்து நடத்துதல், குழுவாகத் தொடர்தல் அல்லது சமுதாயத் திட்டமாக தொடர்தல் போன்ற குழந்தைகளின் வெவ்வேறு திட்டங்களைப் பொறுப்பேற்றுச் செயல்விக்கும் நோக்கத்திற்காக, மாநில அரசு விதிகளை இயற்ற வேண்டும்.

(2) ஏற்பாதரவுத் திட்டம் தொடர்வதற்கான அளவீட்டில், கீழ்வருவன உள்ளடங்கும்:-

(i) தாய் ஒரு கைம்பெண் அல்லது மணமுறிவு ஆனவர் அல்லது குடும்பத்தால் கைவிடப்பட்டவராக இருக்கும்போது.

(ii) குழந்தைகள், பெற்றோர் இல்லாத குழந்தைகளாக இருந்து கூட்டுக் குடும்பத்தில் வாழ்வது.

(iii) உயிரை அச்சுறுத்தும் பிணியால் பெற்றோர் பாதிக்கப்பட்டிருத்தல்.

(iv) பெற்றோர் விபத்தால் குழந்தைகளைப் பராமரிக்கும் தகுதிறன் அற்றவர்களாக இருத்தல், பணவசதியின்மை, உடல்திறன் குறைபாட்டுத்தடை இவற்றால் குழந்தைகளைப் பராமரிக்க இயலாதவர்களாக இருத்தல்.

(3) ஏற்பாதரவுத் திட்டத்தின் காலம், வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய முறையிலேயே அமைதல் வேண்டும்.

(4) தொடங்கப்படும் ஏற்பதாரவுத் திட்டத்தின் தொடர்பு துணைநிலை ஆதரவால் குடும்பங்களுக்குக், குழந்தைகள் இல்லங்களுக்கு மற்றும் சிறப்பில்லங்களுக்கு குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்தில், குழந்தைகளின் மருத்துவம், ஊட்ட உணவு, கல்வி மற்றும் ஏனைய தேவைகளுக்காக வழங்கப் பெறவும் வேண்டும்.

**பிரிவு - 46**

**குழந்தை பராமரிப்பு நிறுவனத்திலிருந்து விடுவிக்கப்படும் குழந்தைகளின் பிற்காப்பு :**

பதினெட்டு வயது நிறைவெய்தியதின் பேரில் குழந்தை எவரும் குழந்தை பராமரிப்பு நிறுவனத்திலிருந்து விட்டகலும் போது, அக்குழந்தை, சமூக மைய நீரோட்டத்தில் திரும்பவும் இணைவதற்கான வசதி ஏற்படுத்தி, ஆதரவாக பொருளுதவியும் நல்குதல் வேண்டும்.

**பிரிவு - 47**

**கூர்நோக்கில்லங்கள் :**

(1) இச்சட்டத்தின் கீழ் நிலுவையிலிருக்கும் விசாரணையின்போது, சட்டத்திற்கு முரண்பட்டதாகக் குற்றச்சாட்டப்பட்டக் குழந்தையின் தற்காலிக வரவேற்பு, பேணுகை, மறுவாழ்வு ஆகியவற்றிற்காக, மாநில அரசு தாமாகவோ (அ) தன்னார்வத் தொண்டு நிறுவனம் வாயிலாகவோ (அ) அரசு சாரா அமைப்புகள் வாயிலாகவோ ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் (அ) ஒருங்கிணைந்த மாவட்டத் தொகுப்புகளிலும் இச்சட்டப்பிரிவு 41-இன் கீழ் பதிவு செய்யப்படும் கூர்நோக்கில்லங்களை நிறுவிப் பேணுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ் சட்டத்திற்கு முரண்பட்டதாகக் கூறப்படும் குழந்தைகள் தொடர்பான வழக்கு விசாரணை முடிவுறா நிலையில் இருக்கும்போது, உட்பிரிவு (1)-இன் கீழாக பராமரிக்கப்படும் சிறார் இல்லம் தவிர ஏனைய பதிவு பெற்ற நிறுவனங்கள் எதுவும் இருப்பதாக இச்சட்டத்தின் கோட்பாடுகளுக்காகக் கருதப்படும்போது, அத்தகைய நிறுவனங்களை கூர்நோக்கில்லங்களாகப் பதிவு செய்யலாம்.

(3) சட்டத்திற்கு முரணானவர் எனக் குற்றம் சாட்டப்பட்ட ஒரு குழந்தையின் மறுசீராக்கத்திற்கு, சமூக மறு ஒருங்கிணைப்புக்கு சிறார் கூர் நோக்கில்லங்களில் வழங்கப்படும் பணித்தர வகைகள், தரநிலை நிர்ணயங்கள் மற்றும் வெவ்வேறு வழிவகைகளை உள்ளடக்கி, அந்த இல்லங்களின் மேலாண்மை மற்றும் கண்காணிப்பிற்காக மற்றும் சிறார் கூர்நோக்கில்லங்களுக்கு எந்த சூழமைவில், எவ்வகையில் சான்றுறுதி அளிக்கப்பட வேண்டும் அல்லது திரும்பப் பெற வேண்டும் என்பது குறித்து மாநில அரசு இந்தச் சட்டத்தின் கீழாக உருவாக்கப்படும் விதிகளால் வழிவகை செய்யலாம்.

(4) சட்டத்திற்கு முரண்பட்டதாகக் குற்றம் சாட்டுரைக்கப்பட்டக் குழந்தை, அவரது பெற்றோரிடம் (அ) காப்பாளரிடம் வைக்கப்படாமல் ஒரு கூர்நோக்கில்லத்திற்கு அனுப்புகையில், குழந்தையின் உடல், உள்ளத் தகுநிலை மற்றும் அவர் புரிந்த குற்றச் செயலின் படிநிலைத் தன்மை ஆகியவற்றை ஓர்ந்து, அக்குழந்தையின் அகவை மற்றும் பாலினம், கருத்தில் கொண்டு, தக்க வகையில் தனித்தனியே பிரித்து வைக்கப்பட வேண்டும்.

**பிரிவு - 48**

**சிறப்பில்லங்கள் :**

(1) சட்டத்துடன் முரண்பட்டக் குழந்தை குற்றம் புரிந்ததாகக் கண்டறிந்த போது, அவரை பிரிவு 18-இன் கீழாக இளைஞர் நீதிக் குழுமத்தின் ஆணை ஒன்றால் தேவையாகும் மறுவாழ்வுக்காக, மாநில அரசு தாமாகவோ (அ) தன்னார்வ (அ)

அரசுசாரா அமைப்பு மூலமாகவோ சிறார் சிறப்பில்லங்களை மாவட்டத்திற்கு ஒன்று வீதமோ அல்லது ஒருங்கிணைந்தப் பல மாவட்டங்கள் அடங்கியக் குழுவிற்கு ஒன்று வீதமோ நிறுவிப் பராமரிக்கலாம்; அந்த சிறார் சிறப்பில்லங்கள், வகுத்துரைக்கப்பட்ட அத்தகு முறையில், பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) மாநில அரசு விதிகள் மூலமாக சிறப்பில்லங்களுக்கான மேலாண்மை மற்றும் கண்காணிப்பை வகை செய்யலாம். அதில் குழந்தை ஒருவர் சமூக மறுஒருங்கிணைப்புக்கு அவசியமான வெவ்வேறு தரவாரியான சேவைகள் மற்றும் அத்தகைய சிறப்பில்லங்களுக்கான பதிவு எத்தகைய சூழலில் மற்றும் எத்தகைய வழிமுறையில் வழங்கலாம் அல்லது திரும்பப் பெறலாம் என்பதும் உள்ளடங்கும்.

(3) சட்ட உட்பிரிவு (1)-இன் கீழாக வரையப்பட்ட விதிகள், சட்டத்துடன் முரண்பட்டதாகக் கண்டறிந்தக் குழந்தைகளின் அகவை, பாலினம், குற்றச்செயலின் தன்மை மற்றும் குழந்தையின் உள, உடல் தகுநிலையை அடிப்படையாகக் கொண்டு குழந்தைகளைப் பிரித்தெடுக்கவும், தனியிடத்தில் அமர்த்தவும் வழி செய்தல் வேண்டும்.

**பிரிவு - 49**

**பாதுகாப்பு அமைவிடம் :**

(1) சட்டத்துடன் முரண்பட்ட பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஒரு நபர் அல்லது பதினாறு வயது முதல் பதினெட்டு வயதுக்கிடையில் ஒரு கொடுங் குற்றச் செயலைச் செய்ததாகச் சாட்டுரைக்கப்பட்ட அல்லது தண்டிக்கப்பட்டிருக்கும், சட்டத்திற்கு முரணான குழந்தையைத் தங்க வைப்பதற்கு மாநில அரசு பிரிவு 41-இன் கீழாக பதிவு செய்யப்பட்ட ஒரு பாதுகாப்பு அமைவிடத்தை மாநில அரசு ஏற்படுத்த வேண்டும்.

(2) அத்தகைய ஒவ்வொரு பாதுகாப்பு அமைவிடமும் வழக்கு விசாரணை நடைமுறையின்போது, அத்தகைய குழந்தைகள் அல்லது நபர்கள் மற்றும் ஒரு குற்றச் செயலைச் செய்திருக்கும் குழந்தைகள் அல்லது நபர்களுக்காக தனித்தனியான ஏற்பாட்டுடன், தங்க வைப்பதற்கான வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(3) சட்ட உட்பிரிவு (1)-இன் கீழ் பாதுகாப்பு அமைவிடமாக அறிவிக்க, பெயர் குறிக்கப்பட்ட, தரவாரியாகப் பிரித்த இடங்களை அறுதியிட வேண்டும். மற்றும் அதற்கான வசதிகள் மற்றும் சேவைகள் குறித்து மாநில அரசு விதிகளை வகுத்துரைக்கலாம்.

**பிரிவு - 50**

**குழந்தைகள் இல்லம் :**

(1) பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவையாகும் குழந்தைகளின் பராமரிப்பு, நடத்தும் பாங்கு, கல்வி, பயிற்சி, வளர்ச்சி மற்றும் மறுவாழ்வுக்காக குழந்தைகளைத் தங்க வைக்க மாநில அரசு தாமாக அல்லது தன்னார்வ அல்லது அரசு சாரா அமைப்புகள் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அல்லது பல மாவட்டங்களுக்கு ஒரு குழந்தைகள் இல்லத்தை நிறுவிப் பேணலாம்.

(2) மாநில அரசு, தேவைக்கேற்றவாறு தனிச்சிறப்பு தேவைகள் வழங்கும் வகையில், மாநில அரசு தக்கதெனக் கருதும் குழந்தைகள் இல்லம் அதற்கான தகுதி வாய்ந்த இல்லமாக பெயரிட்டுக் குறிப்பிடலாம்.

(3) ஒவ்வொரு குழந்தையும் தனி ஒருவர் பராமரிப்புத் திட்டத்தின் அடிப்படையில் குழந்தைகள் இல்லங்களால் வழங்கலாகும் தர நிர்ணய நிலைகள் மற்றும் சேவையின் தன்மைகளை உள்ளடக்கி, அவற்றின் கண்காணிப்பு மற்றும் மேலாண்மையை, மாநில அரசு விதிகளால் வழிவகை செய்து வகுக்கலாம்.

(4) நேர்விற்கேற்ப, அங்கீகாரம் செய்யப்பட்ட அயல்நாட்டுத் தத்தெடுப்பு முகமை (ஆ) மத்திய அதிகார அமைப்பு அல்லது ஒரு தொடர்பான அரசுத்துறை அத்தகைய உத்தேசத் தத்தெடுக்கும் பெற்றோரின் குடும்ப நிலை ஆய்வறிக்கைகளைத் தயார் செய்ய வேண்டும். அவர்கள் தகுதி படைத்தவர்கள் எனக் கண்டறிந்ததன் பேரில், அதிகார ஆயத்தால் இயற்றப்பட்ட தத்தெடுப்பு ஒழுங்கு முறையில் வழிவகை கண்ட முறையில், மனுக்களை, இந்தியாவிலிருந்து குழந்தைகளை தத்துக் கொடுக்கும் அதிகார அமைப்புக்கு தக்க செயல் நடவடிக்கை எடுக்க அனுப்பி வைக்கப்படும்.

**பிரிவு - 51**

**தகுநிலை வசதியகம் :**

(1) தற்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டம் எதனாலும் பதிவு செய்யப்பட்டு ஒரு அரசு அமைப்பு அல்லது ஒரு தன்னார்வ அல்லது அரசு சாரா அமைப்பால் நடத்தப்படும் ஒரு வசதி இடத்தை, ஒரு குறித்த நோக்கத்திற்காக ஒரு குழந்தையின் பொறுப்பை அப்போதைக்கு எடுத்துக் கொள்ள ஏற்புடையதாக உள்ளது என குழுமம் அல்லது குழு தகவேற்பிசைவு தர வேண்டும். அத்தகைய அமைப்பு, வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய முறையில், குழந்தையைப் பராமரிக்க எடுத்துக் கொள்ள வேண்டும்.

(2) உட்பிரிவு (1)-இன் கீழாக எழுத்துருவில் பதிவு செய்யப்படும் காரணங்களுக்காக, அங்கீகாரத்தை குழுமம் (அ) குழு திரும்பப் பெறலாம்.

**பிரிவு - 52**

**தக்கார்**

(1) நம்புதற்குரிய ஆதாரச் சான்றை உரியவாறு சரி பார்த்த பின்பு, ஒரு குழந்தையை குறிப்பிட்ட கால வரையறையில், வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய முறையில் பராமரிக்கவும், பாதுகாக்கவும், மற்றும் நடத்துவதற்கும், தற்காலிகமாக ஏற்றுக் கொள்ள எவரேனும் ஒரு நபர் தகுதியானவர் என குழுமம் அல்லது குழு அங்கீகரித்தல் வேண்டும்.

(2) சட்ட உட்பிரிவு (1)-இன் கீழ் வழங்கப்பட்ட அங்கீகாரத்தை குழுமம் (அ) குழு எழுத்துருவில் பதிவு செய்யும் காரணங்களுக்காக நேர்விற்கேற்ப மீளப் பெறலாம்.

**பிரிவு - 53**

**இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் மறுவாழ்வு மற்றும் மறு ஒருங்கிணைப்பு பணிகள் மற்றும் அதன் மேலாண்மை :**

குழந்தையின் மறுவாழ்வு மற்றும் மறு ஒருங்கிணைப்பை இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களால், வழங்க வேண்டிய பணிகள், மற்றும் கீழ் வருவனவற்றை உள்ளடக்கி குறித்துரைக்கப்படலாம் என்ற அத்தகைய வகையில் முறையே செய்தல் வேண்டும்.

(i) குறித்துரைக்கலாகும் தரநிலையில் உணவு, புகலிட உறையுள், உடை, மருத்துவக் கவனிப்பு முதலிய அடிப்படைத் தேவைகள்.

(ii) சக்கர நாற்காலிகள், செயற்கை உறுப்புக் கருவிகள், செவித் திறனளிக்கும் கருவிகள், பார்வையற்றோருக்கானப் பிரையிலி சாதனங்கள் அல்லது தனிவகைத் தேவைகளுக்கானக் குழந்தைகளுக்கு அவசியமான ஏதேனும் ஏற்புடைய சாதனங்கள்.

(iii) கூட்டாக இணைந்த கல்வி, சிறப்புக் கல்வி, தனிவகைத் தேவைகளுடன் கூடிய குழந்தைகளுக்கான உரியதொரு கல்விமுறை உள்ளடங்கிய ஏற்புடைய கல்வி.

**வரம்புரையாக :**

ஆறு வயது முதல் பதினான்கு வயது வரையிலானக் குழந்தைகளுக்குக் கட்டணமில்லா கட்டாயக் கல்விக்கான, கட்டாயக் கல்வி உரிமைகள் சட்டம் 2009 (35/2009) வகையங்கள் பொருந்தும்.

(iv) திறன் மேம்பாடு;

(v) வாழ்க்கைத் தொழில், மாற்றுச் சிகிச்சை மற்றும் வாழ்க்கைத் திறன் சார்ந்த கல்வி;

(vi) குழந்தையின் தேவைக்குச் சிறப்பாகத் தேவைப்படும் உளவியல் ஆற்றுப்படுத்துதல் உள்ளடக்கிய உளநலநிலை தலையீடுகள்;

(vii) விளையாட்டு மற்றும் பண்பாட்டு, ஊக்கமுறு செயல் நடவடிக்கைகள் உள்ளடக்கிய பொழுதுபோக்கு செயற்பாடுகள்;

(viii) தேவையாகும் போது சட்ட உதவி;

(ix) கல்விக்கான சுட்டியவாறான சேவைகள், தொழிற்பயிற்சி, தேவைப்படும் போது, போதை மருந்து அடிமைப் பிணி நீக்கச் சிகிச்சை;

(x) தனியாள் பராமரிப்பு செயற்திட்டத்தின் தயாரிப்பும், பின்தொடர் நடவடிக்கைகளும் உள்ளடக்கிய நேர்வு மேலாண்மை;

(xi) பிறப்பு பதிவுச் சான்று;

(xii) தேவையுறுங்கால் அடையாள நிரூபணச் சான்று;

(xiii) மாநில அரசு பதிவுப் பெற்ற நிறுவனங்களால் அல்லது தக்க நபர்களால் அல்லது தகுந்த நிறுவனங்களால் அல்லது உரியத் தொடர்பானதாகச் சுட்டிக்காட்டப்பட்ட சார்பு நிலைப் பணித் துறைகளால் குழந்தையின் நலனை இயல்விக்கவும், உறுதிப்படுத்தும் முறையிலும் நியாயமான பிற சேவைகளை நேரடியாகச் செயல்படுத்துவதன் மூலமும் உள்ளடங்கும்.

(2) நிறுவனத்தை நிர்வாகம் செய்ய மற்றும் ஒவ்வொரு குழந்தையின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க, வகுக்கப்படலாமென்ற வகையில், ஒரு நிர்வாகக் குழுவை ஒவ்வொரு நிறுவனமும் ஏற்படுத்த வேண்டும்.

(3) ஆறு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளைத் தங்க வைத்திருக்கும் ஒவ்வொரு நிறுவனத்தின் பொறுப்பு அலுவலர், அந்த நிறுவனத்திலுள்ளக் குழந்தைகளின் பாதுகாவல் மற்றும் நலனில் வகுக்கப்படலாமென்ற அத்தகைய செயலூக்க நடவடிக்கைகளில் பங்கு கொள்ள, குழந்தைகள் குழுக்களை ஏற்படுத்த வசதி செய்ய வேண்டும்.

**பிரிவு - 54**

**இச்சட்டத்தின் கீழாகப் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் ஆய்வு :**

(1) குறித்துரைக்கப்பட்ட அத்தகையக் கால அளவிற்கு மற்றும் அத்தகைய நோக்கத்திற்கு இச்சட்டத்தின் கீழாக பதிவு செய்யப்பட்ட அல்லது தகுநிலையானது எனத் தகவேற்பு செய்யப்பட்ட (அங்கீகரித்த) அனைத்து நிறுவனங்களையும், மாநிலத்தில் அல்லது மாவட்டத்தில் எதுவாயினும், ஆய்வு செய்ய மாநில அரசு ஆய்வுக் குழுக்களை நியமிக்க வேண்டும்.

(2) அத்தகயை ஆய்வுக்குழு தமக்கு ஒதுக்கப்பட்டப் பகுதியில் அமைந்துள்ளக் குழந்தைகள் வசிப்பிடங்களைக், குறைந்தது மூன்று மாதங்களுக்கொருமுறையாவது கட்டாயமாகப் பார்வையிட வேண்டும். அந்த ஒன்றுபட்ட குழுவில் மூன்று உறுப்பினர்களுக்கு குறைவின்றி இருக்க வேண்டும். அவர்களில் குறைந்தது ஒரு பெண்ணாவது இருத்தல் வேண்டும். அதில் ஒரு மருத்துவர் இடம் பெற வேண்டும். அங்ஙனம் பார்வையிட்ட பின்பு நேர்விற்கேற்ப, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகிடம் அல்லது மாநில அரசுக்கு பார்வையிடலின் அறிக்கையை ஒரு வாரத்திற்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) ஆய்வுக்குழுவால் ஒரு வாரத்திற்குள் ஆய்வறிக்கை சமர்ப்பிக்க மாவட்டக் குழந்தை பாதுகாப்பு அலகு அல்லது மாநில அரசு ஒரு மாதத்திற்குள்ளாக தேவையான செயல் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்; அதனின் செயல் நிறைவேற்ற அறிக்கையை மாநில அரசுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**பிரிவு - 55**

**உள்கட்டமைப்புகளின் செயற்பாட்டைக் கணித்து மதிப்பீட செய்தல் :**

(1) நடுவணரசு (அ) மாநில அரசு தன்னிச்சையாக குழுமம் (அ) குழு இளைஞர் காவல் சிறப்பு பிரிவுகள், பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் அல்லது தகுநிலை நிறுவனங்கள் அல்லது தக்கார், அரசால் தகவேற்பிசைவு (அங்கீகாரம்) அல்லது குறித்துரைத்த அத்தகைய காலவரம்பிற்கு, அந்த நிறுவனங்களின், தக்கவசதி இடங்களின் செயற்பாட்டை தற்சார்பாக கணித்து மதிப்பீடு செய்யலாம்.

(2) மைய அரசும், மாநில அரசும் ஒரே சமயத்தில் தம்மிச்சையான மதிப்பீடு செய்யும் நேர்வில், மைய அரசின் கணிப்பாய்வே மேலோங்கி நிற்கும்.

# இயல் 8

## தத்தெடுப்பு

**பிரிவு - 56**

**தத்தெடுப்பு :**

(1) இந்த சட்டத்தின் வகையங்களின்படி, இதன் கீழ் இயற்றிய விதிகளால் மற்றும் அதிகார அமைப்பால் உருவாக்கப்பட்டத் தத்தெடுப்பு ஒழுங்கு முறைகளுக்கிணங்க தாய்தந்தையற்றக் குழந்தை, கைவிடப்பட்ட மற்றும் கண்டெடுக்கப்பட்டக் குழந்தையின் குடும்பத்திற்கான உரிமையை இயல்வித்து மீட்டளிப்பை உறுதி செய்தல் வேண்டும்.

(2) இந்த சட்டத்தின் வகையங்கள் மற்றும் அதிகார ஆயத்தால் உருவான தத்தெடுப்பு ஒழுங்குமுறைகளின்படி, குழந்தை ஒருவரின் தத்தெடுப்பு, ஒரு உறவினரிடமிருந்து வேறு உறவினருக்கு கொடுக்கும் போது, அவர்கள் தழுவிய சமயம் (மதம்)

எதுவாக இருப்பினும், இச்சட்டத்தின் வகையங்களின் மற்றும் அதிகார அமைப்பால் உருவான தத்தெடுப்பு ஒழுங்குமுறையால் கொடுக்கலாம்.

(3) இந்து தத்தெடுப்பு மற்றும் வாழ்க்கைப் பொருளுதவிச் சட்டம் 1956 (78/1956)-இன் கீழான வகையங்களின்படி, இச்சட்டம் குழந்தையின் தத்தெடுப்புக்கு பொருந்தாது.

(4) இச்சட்டத்தின் வகையங்கள் மற்றும் அதிகார ஆயத்தால் உருவான தத்தெடுப்பு ஒழுங்குமுறை விதிகளின்படி மட்டுமே, நாடுகளுக்கிடையேயான எல்லா தத்தெடுப்புகளும் நடைபெறும்.

(5) நீதிமன்றத்திலிருந்து ஒரு செல்லத்தக்க ஆணையின்றி, எந்தவொரு நபரும் குழந்தை ஒருவரை, வெளிநாட்டிற்கு கொண்டு செல்லவோ அல்லது அனுப்பவோ அல்லது குழந்தை ஒருவரை வெளிநாட்டைச் சார்ந்த நபர் ஒருவரின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பில் மாற்றுவதற்கான ஏற்பாடு எதிலும் பங்கேற்றால் சட்டப்பிரிவு 80-இன் உட்பிரிவு (1)-இன் வகையங்களின்படி தண்டிக்கப்பட வேண்டியவராவார்.

**பிரிவு - 57**

**தத்தெடுக்கும் உத்தேச பெற்றோரின் தகுதி**

(1) தத்தெடுக்க முனையும் பெற்றோர் உடல் நலமும், நிதியும், விழிப்புணர்வும், திட மனத்திட்பமும், ஒரு குழந்தைக்கு நல்லதொரு வளர்ப்பை வழங்குவதற்குரிய உயரிய நோக்கவுணர்வும், கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

(2) தம்பதியராக இருப்பின் தத்தெடுப்பிற்கு இருவரின் ஒத்திசைவும் தேவை.

(3) ஒரு தனி நபர் அல்லது மணமுறிவு பெற்ற நபரும் தத்தெடுக்கலாம். அதிகார ஆயத்தால் வகுக்கப்பட்ட தத்தெடுப்பு ஒழுங்குமுறை வகையங்களுக்கு இணங்கவும் மற்றும் தகவுடைமைக்கான அளவீட்டை நிறைவேற்றும் வகையில், அவர் அவ்விதமாகத் தத்தெடுக்கலாம்.

(4) ஒரு தனி ஆணுக்கு சிறுமியை (அ) சிறு பெண்ணை தத்தெடுக்க தகுதி இல்லை.

(5) அதிகார ஆயத்தால் இயற்றப்பட்ட தத்தெடுப்பு ஒழுங்கு முறையில் குறிப்பிடப்பட்ட ஏனைய தகுதிப்பாட்டின் அளவீடுகள் வேறெதுவும்.

**பிரிவு - 58**

**உத்தேச தத்தெடுக்கும் பெற்றோர், இந்தியராக இருந்து இந்தியாவில் வாழும் போது தத்தெடுப்புக்கான நடைமுறை :**

(1) உத்தேச தத்தெடுக்கும் பெற்றோர் இந்தியராக இருந்து இந்தியாவில் வாழ்ந்துவரும் போது, அவர்களின் சமய வேறுபாட்டைப் பொருட்படுத்தாமல், ஒரு தாய்தந்தையற்ற

குழந்தை அல்லது கைவிடப்பட்டக் குழந்தை அல்லது சரண் செய்யப்பட்ட குழந்தையைத் தத்தெடுக்க விழைந்தால், அதற்காகத் தனிச்சிறப்புத் தத்தெடுப்பு முகமையில், அதிகார ஆயத்தால் இயற்றப்பட்ட ஒழுங்கு முறையில் வழி செய்த அந்த வகையில் விண்ணப்பிக்கலாம்.

(2) உத்தேச தத்தெடுப்புப் பெற்றோரின் இல்லநிலை குறித்த ஆய்வறிக்கையைத் தனிச்சிறப்புத் தத்தெடுப்பு முகமை தயாரிக்க வேண்டும்; மற்றும் அவர்களின் தகுதிப்பாட்டைக் கண்டறிந்துக் குழந்தை நிலை குறித்த அறிக்கை, மருத்துவ அறிக்கையின் இணைப்புடன், குழந்தைச் சட்டப்படியானத் தத்தெடுப்புக்குத் தடையில்லா உரிமை கொண்டதாக உள்ளது என, அதிகார ஆயத்தால் இயற்றப்பட்ட தத்தெடுப்பு ஒழுங்குமுறைகளில் வகை செய்தவாறு, அத்தகைய விதத்தில் அறிவிக்க வேண்டும்.

(3) உத்தேச தத்தெடுப்பு பெற்றோரால் பெறப்பட்டதன் ஒப்புதலுக்காகக் கையொப்பமிட்ட குழந்தை நிலை குறித்ததான அறிக்கை மற்றும் மருத்துவ அறிக்கை தரப்பட வேண்டும். தனிச்சிறப்பு தத்தெடுப்பு முகமை குழந்தையைத் தத்தெடுக்க முந்தைய வளர்ப்பு பேணுகைக்கு அளித்தல் வேண்டும். தத்தெடுப்புக்கான ஆணையை நீதிமன்றத்தில் பெற்றுக் கொள்வதற்கு அதிகார ஆயத்தால் இயற்றப்பட்டத் தத்தெடுப்பு ஒழுங்குமுறையில் வகை செய்த வண்ணம், மனு ஒன்றைத் தாக்கல் செய்ய வேண்டும்.

(4) நீதிமன்ற ஆணையின் ஒரு சான்றிட்ட நகலைப் பெற்றுக் கொண்டதன் பேரில் தனிச்சிறப்புத் தத்தெடுப்பு முகமை, அதனை உடனடியாக உத்தேச தத்தெடுக்கும் பெற்றோருக்கு அனுப்ப வேண்டும்.

(5) குழந்தையைத் தத்தெடுத்தக் குடும்பத்தில், குழந்தையின் முன்னேற்றம் மற்றும் நலன் குறித்து, அதிகார ஆயத்தால் வனையப்பட்டத் தத்தெடுப்பு ஒழுங்குமுறையில் வகை செய்தவண்ணம் தொடர்ந்து கடைப்பிடிக்கவும் மற்றும் உறுதிப்படுத்தவும் வேண்டும்.

**பிரிவு - 59**

**ஒரு தாய் தந்தையற்ற குழந்தை அல்லது கைவிடப்பட்ட அல்லது சரண் செய்யப்பட்ட குழந்தையின், நாடுகளுக்கிடையேயான தத்தெடுப்பு நடைமுறை :**

(1) தத்தெடுப்பு ஒரு சட்டப்படித் தகுதியானக் குழந்தை என அறிவிக்கப்பட்டதிலிருந்து அறுபது நாட்களுக்குள், தனிச்சிறப்புத் தத்தெடுப்பு முகமை மற்றும் மாநில தத்தெடுப்பு முகமை கூட்டிணையாக முயற்சி செய்தும்கூட அதன் இந்தியத் தத்தெடுப்பு பெற்றோர் அல்லது இந்தியாவில் வசிக்காத அவரது இந்திய உத்தேச தத்தெடுப்புப் பெற்றோரிடம் சேர்க்க இயலாதபோது, அக்குழந்தை நாடுகளுக்கிடையே தக்கதொரு தடையற்ற தன்னுரிமையுடன் தகுதி உள்ளதாக இருக்க வேண்டும்.

**வரம்புரையாக :**

அதிகார ஆயத்தால் வரையறுக்கப்படலாமென்ற தத்தெடுப்பு சட்டபூர்வமான நடைமுறை விதியின்படி உடல் மற்றும் உள்ளத்தளவில் செயலிழப்புக் குறைபாடு உடைய குழந்தைகள், உடன்பிறந்தோர் மற்றும் ஐந்தாண்டுகள் வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு இடையேயான தத்தெடுப்பிற்கு ஏனையக் குழந்தைகளைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

(2) இந்தியக் குழந்தைகளை, நாடுகளுக்கிடையே தத்துக் கொடுப்பதில் இந்தியாவில் வசிக்காதத் தகுதி படைத்த இந்தியர் அல்லது இந்திய வம்சாவழிநபர் அல்லது கடல் கடந்து வெளிநாட்டில் வசிக்கும் இந்தியக் குடிமகன் இவர்களுக்கே முன்னுரிமை வழங்க வேண்டும்.

(3) அயல்நாட்டில் வசிக்கும் உத்தேசமான தத்தெடுப்பு பெற்றோர் ஆகின்ற ஒரு இந்தியாவில் வசிக்காத இந்தியர் அல்லது அயல் நாட்டில் வாழும் இந்தியக் குடிமகன் கடல் கடந்து அல்லது இந்திய வம்சாவழி நபர் அல்லது ஒரு வெளிநாட்டவர் அவர்கள் தழுவிய சமயம் (மதம்) குறித்துப் பொருட்படுத்தாமல், இந்தியாவிலிருந்து தாய் தந்தையற்ற ஒரு குழந்தை அல்லது கைவிடப்பட்ட அல்லது சரண் செய்து ஒப்புவிக்கப்பட்ட குழந்தையை தத்தெடுப்புக்கு விரும்பும்படி இருந்தால் அதிகார ஆயத்தால் அங்கீகாரம் செய்யப்பட்ட ஒரு அயல்நாட்டுத் தத்தெடுப்பு முகமை அல்லது மத்திய அதிகார அமைப்பு அல்லது அவர்கள் வழக்கமாக குடியிருக்கும் அவர்களுடைய நாட்டின் அரசின் தொடர்பானத் துறையில் அதிகார ஆயத்தால் வனையப்பட்டத் தத்தெடுப்பு ஒழுங்குமுறையின்படி, முறையே விண்ணப்பித்தல் வேண்டும்.

(4) நேர்விற்கேற்ப, அங்கீகாரம் செய்யப்பட்ட அயல் நாட்டுத் தத்தெடுப்பு முகமை (அ) மத்திய அதிகார அமைப்பு அல்லது ஒரு தொடர்பான அரசுத்துறை, அத்தகைய உத்தேச தத்தெடுக்கும் பெற்றோரின் குடும்ப நிலை ஆய்வறிக்கைகளைத் தயார் செய்ய வேண்டும். அவர்கள் தகுதி படைத்தவர்கள் எனக் கண்டறிந்ததன் பேரில், அதிகார ஆயத்தால் இயற்றப்பட்ட தத்தெடுப்பு ஒழுங்குமுறைகளில் வழிவகை கண்ட முறையில், மனுக்களை, இந்தியாவிலிருந்து குழந்தைகளைத் தத்துக் கொடுத்தால், அதிகார அமைப்புக்குத் தக்கச் செயல் நடவடிக்கை எடுக்க அனுப்பி வைக்க வேண்டும்.

(5) அத்தகைய உத்தேச தத்தெடுக்கும் பெற்றோரின் மனுவைப் பெற்றுக் கொண்டதன் பேரில், அதிகார ஆயம் அம்மனுவினை ஆய்ந்து மனுதாரர்கள் தகுதி படைத்தவர்கள் எனக் காணும் நிலையில் அது, அந்த மனுவினை சட்டப்படியாக தடையில்லா உரிமை படைத்த தனிச்சிறப்புத் தத்தெடுப்பு முகமைகளில் ஏதேனும் ஒன்றுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(6) தனிச்சிறப்பு தத்தெடுக்கும் முகமை ஒத்திசைவான ஒரு குழந்தைக்கு அத்தகைய உத்தேச தத்தெடுக்கும் பெற்றோரைக் கண்டறிய வேண்டும். அத்தகைய பெற்றோருக்கு குழந்தை குறித்து ஆய்ந்தறிந்த அறிக்கை மற்றும் குழந்தையின் மருத்துவ அறிக்கையை அனுப்புதல் வேண்டும். அப்பெற்றோர் அந்தக் குழந்தையை ஏற்றுக் கொள்வதன் பேரில், குழந்தை குறித்த ஆய்வறிக்கையையும், மருத்துவ அறிக்கையையும் முறையே கையொப்பம் இட்டு, மேற்கூறிய முகமைக்கு அனுப்புதல் வேண்டும்.

(7) உத்தேச தத்தெடுப்பு பெற்றோரிடமிருந்து குழந்தையை ஏற்றுக் கொண்டு பெற்றமைக்கான ஒப்புகையின் பேரில் தத்தெடுப்புக்கான ஆணையைப் பெற தனிச்சிறப்புத் தத்தெடுப்பு முகமை நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்ய வேண்டும். அதனை அதிகார ஆயத்தால் வகுத்துரைக்கப்பட்ட தத்தெடுப்பு ஒழுங்குமுறைகளில் வகை செய்யப்பட்டவாறான விதத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

(8) நீதிமன்ற ஆணையின் ஒரு சான்றளிக்கப்பட்ட நகலைப் பெற்றதன் பேரில், தனிச் சிறப்பு தத்தெடுப்பு முகமை உடனடியாக அதனை அதிகார ஆயம் மாநில முகமை மற்றும் தத்தெடுக்கும் பெற்றோருக்கு அனுப்ப வேண்டும்; மேலும் அந்தக் குழந்தைக்கான கடவுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(9) அந்த தத்தெடுப்புக் குறித்தத் தகவலை அதிகார ஆயம் இந்தியாவின் குடிபுகும் மக்கள் அதிகார அமைப்புக்கும் மற்றும் குழந்தையை ஏற்றுப் பெற்றுக் கொள்ளும் நாட்டுக்கும் தெரிவிக்க வேண்டும்.

(10) அக்குழந்தைக்குக் கடவுச்சீட்டும், அயல்நாட்டு நுழைவுரிமைச் சீட்டும் வழங்கப்பட்டவுடன், உத்தேச தத்தெடுக்கும் பெற்றோர் குழந்தையைத் தனிச் சிறப்பு தத்தெடுக்கும் முகமையில் நேரடியாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(11) நேர்விற்கேற்ப அதிகாரமளிக்கப்பட்ட அயல்நாட்டுத் தத்தெடுப்பு முகமை அல்லது மத்திய அதிகார அமைப்பு அல்லது தொடர்பான அரசுத்துறை, தத்தெடுத்த குடும்பத்தில் அக்குழந்தையின் முன்னேற்றம் குறித்த அறிக்கைகள் சமர்ப்பிப்பதை உறுதிப்படுத்த வேண்டும். மற்றும் அதிகார ஆயத்தால் வனையப்பட்ட தத்தெடுப்பு ஒழுங்குமுறைகளில் வழிவகை செய்த வண்ணம் அதிகார ஆயம் மற்றும் தொடர்பான இந்தியத் தூதரகத்துடன் கலந்து ஆலோசனை செய்து, ஏதேனுமொரு நேர்வில் மாற்று ஏற்பாட்டைச் செய்வதற்குப் பொறுப்பாக வேண்டும்.

(12) ஒரு அயல் நாட்டவர் அல்லது ஒரு இந்திய வம்சாவழி நபர் அல்லது இந்தியாவில் வழக்கமானக் குடியிருப்பிடத்தைக் கொண்டுள்ள அயல் நாட்டில் வாழும் ஒரு இந்தியக் குடிமகன் இந்திய நாட்டிலிருந்து ஒரு குழந்தையைத் தத்தெடுக்க விழைந்தால், அதன் பொருட்டு அதிகார ஆயத்திற்கு இந்தியாவிலுள்ள அந்த நாட்டின் தூதரகத்திலிருந்து ஒரு தடையிலாச் சான்றிதழுடன் விண்ணபிக்கிலாம்.

மேற்கொண்டு அவசியமான நடவடிக்கைகளுக்காக, அதிகார ஆயத்தால் வகுத்துரைக்கப்பட்ட தத்தெடுப்பு ஒழுங்குமுறையில் வழிவகை செய்த வண்ணம் செய்தல் வேண்டும்.

**பிரிவு - 60**

**நாடுகளுக்கிடையேயான உறவினர் தத்தெடுப்பிற்கான நடைமுறை :**

(1) அயல்நாட்டில் வசிக்கும் ஒருவர், இந்தியாவில் அவரது உறவினரின் குழந்தை ஒருவரை தத்தெடுக்க விழையும் போது, அவர் நீதிமன்றத்திலிருந்து ஆணை ஒன்றைப் பெற வேண்டும். அதிகார ஆயத்திலிருந்து தடையிலாச் சான்று (மறுப்பின்மைச் சான்று) பெற விண்ணப்பித்தல் வேண்டும். அதிகார ஆயத்தின் தத்தெடுப்பு நெறிமுறைகளில் வகை செய்யப்பட்டவாறு, அத்தகைய முறையில் விண்ணப்பிக்க வேண்டும்.

(2) சட்டஉட்பிரிவு (1)-இன் கீழான ஆணையும் குழந்தையின் ஈன்றெடுத்த பெற்றோர் (அ) தத்தெடுத்த பெற்றோரிடமிருந்து விண்ணப்ப படிவம் பெற்ற பின்னர் அதிகார ஆயமானது தடையிலாச் சான்றை வழங்க வேண்டும். இந்தியாவின் குடிபுகல் அமைப்பு மற்றும் குழந்தையைப் பெற்றுக் கொள்ளும் நாட்டின் குடிபுகல் அதிகார அமைப்புக்கு அத்தகவலைத் தெரிவிப்பதன் பேரில் அதனை வழங்கப் பெறுதல் வேண்டும்.

(3) சட்ட உட்பிரிவு (2)-இன் கீழாக தடையிலாச் சான்றை தத்தெடுக்கும் பெற்றோர் பெற்றதற்குப் பின்னர், குழந்தையை ஈன்றெடுத்த பெற்றோரிடமிருந்து பெற வேண்டும். ஈன்றெடுத்த பெற்றோர் தத்தெடுக்கப்பட்ட குழந்தையுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்கும், தத்தெடுக்கப்பட்ட குழந்தையின் உடன்பிறந்தோர் மற்றும் ஈன்றெடுத்த பெற்றோரும் அவ்வப்போது தொடர்பு வைத்துக் கொள்வதற்கும் வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும்.

**பிரிவு - 61**

**தத்தெடுப்புக்கு மறுபயனாக பணம் அளித்தலுக்கு எதிரான தண்டனை மற்றும் நீதிமன்ற நடைமுறை :**

(1) தத்தெடுப்பு ஆணையை வழங்குவதற்கு முன்னதாக நீதிமன்றம் கீழ் வருவனவற்றில் தாமாக நிறைவு கொள்ள வேண்டும்.

(அ) தத்தெடுப்பு குழந்தையின் நலனுக்கானது;

(ஆ) குழந்தையின் அகவை (வயது) மற்றும் புரிந்து கொள்ளும் தன்மையை உரிய கவனத்தில் கொண்டுக் குழந்தையின் விருப்பங்களை எண்ணிப் பார்க்க வேண்டும்;

(இ) உறவினர்களுக்கிடையேயான தத்தெடுப்பில் அதிகார ஆயத்தால் வகுக்கப்பட்ட தத்தெடுப்பு ஒழுங்கு முறைகளின் கீழாக அனுமதிக்கப்பட்ட தத்தெடுப்புக்

கட்டணங்கள் அல்லது சேவை கட்டணம் அல்லது குழந்தை பராமரிப்பு மூல நிதித்தொகை நீங்கலாக மற்றவாறு தத்தெடுப்பில் மறுபயனாகச் செலுத்தும் தொகை அல்லது வெகுமதி எதனையும் தத்தெடுக்கும் பெற்றோரோ அல்லது தனிச்சிறப்புத் தத்தெடுக்கும் முகமையோ அல்லது குழந்தையின் பெற்றோரோ அல்லது காப்பாளரோ கொடுக்கவோ அல்லது கொடுப்பதற்கு இசைவு அளிக்கவோ கூடாது.

(2) தத்தெடுப்பு தொடர்பான நடைமுறைகள் நீதிமன்ற மறைவரங்கில் (தனி அறையில்) நடத்தப்பட வேண்டும் மற்றும் அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள்ளானக் கால அளவிற்குள்ளாக, நீதிமன்றத்தால் தீர்வு செய்யப்பட வேண்டும்.

**பிரிவு - 62**

**கூடுதலான நடைமுறைத் தேவைகள் மற்றும் ஆவணப்படுத்துதல் :**

(1) தாய் தந்தை இல்லாத ஒரு குழந்தை, கைவிடப்பட்ட குழந்தை மற்றும் விடுவித்து சரண் செய்யப்பட்ட குழந்தைகள், இந்திய நாட்டில் வாழும் உத்தேச தத்தெடுப்பு பெற்றோர் அல்லது இந்திய நாட்டில் வசிக்காத இந்தியர் அல்லது வெளிநாட்டில் வாழும் ஒரு இந்தியக் குடிமகன் அல்லது இந்திய வம்சாவழியைச் சார்ந்த ஒரு நபர் அல்லது அயல்நாட்டு உத்தேச தத்தெடுப்புப் பெற்றோர், தத்தெடுத்தலை ஆவணப்படுத்துதல் மற்றும் ஏனைய நடைமுறைத் தேவைகள் தொடர்பாக இச்சட்டத்தில் வெளிப்படையாக வகை செய்யாதபோது அதிகார ஆயத்தால் வகுக்கப் பெற்றத் தத்தெடுப்பு ஒழுங்கு நெறிகளின்படி நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.

(2) உத்தேச தத்தெடுப்புப் பெற்றோரின் வழக்கை, மனுவினைப் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள்ளாக சிறப்புத் தத்தெடுப்பு முகமை முடிவுறுத்த உறுதி செய்தல் வேண்டும் மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட வெளிநாட்டு தத்தெடுப்பு முகமை, அதிகார ஆயம் மற்றும மாநில முகவாண்மை தத்தெடுப்பு வழக்கின் முன்னேற்றத்தை பின்தொடர்ந்து கவனிக்கவும், தேவை எழும் போதெல்லாம் தலையீடு செய்யும் வழிவகை உண்டு.

**பிரிவு - 63**

**தத்தெடுப்பின் விளைபயன் :**

நீதிமன்றம் ஒரு குழந்தைத் தொடர்பாக ஒரு தத்தெடுப்பு ஆணை பிறப்பிப்பதன் பேரில் அந்தக் குழந்தை அதன் பின்னர் தத்தெடுப்பு பெற்றோரின் குழந்தையாகவே ஆகிவிடும். தத்தெடுத்தப் பெற்றோர், இயற்கை எய்தும் முன்பாகவே விருப்புறுதி ஆவணம் (உயில்) எழுதாமல் அல்லது சொத்து மாற்றம் உள்ளிட்ட அனைத்து நோக்கங்களுக்காகவும், தத்தெடுக்கப்பட்ட அக்குழந்தை அவர்களுக்குப்

பிறந்ததாகவே கருதப்படும். அந்த தத்தெடுப்பிற்கான ஆணை பிறப்பித்த நாளிலிருந்து அமலாக்கத்திற்கு வரும். அந்நாளிலிருந்து (அந்த தேதி முதல்) அக்குழந்தை பிறந்த குடும்பத்தின் எல்லாவித பந்தமுடிச்சுகளும் துண்டிக்கப்பட்டுவிடும்.

தத்தெடுப்பு ஆணையால் அக்குழந்தை தத்தெடுப்பு குடும்பத்திற்கு மாற்றாக்கம் செய்யப்படும்.

**வரம்புரையாக :**

தத்தெடுப்பு ஆணை செயலாக்கத்திற்கு வரும் நாளுக்கு முன்னதாக சொத்துரிமை எதுவும் கடமைப் பொறுப்புணர்வுடன் தத்தெடுத்தக் குழந்தையிடம் ஒப்பளிக்கப்பட்டிருந்தால், அந்தக் கடமைப் பொறுப்புக்கு உட்பட்டு அச்சொத்து, தொடர்ச்சியாக அந்தத் தத்தெடுக்கப்பட்ட குழந்தையின் வசமே இருக்கும். அச்சொத்தின் உரிமையாளராக அக்குழந்தை இருக்கும். அக்குழந்தையின் ஈன்றெடுத்த புறந்தந்த பெற்றோரின் உறவினர் எவரையும் பேணுகை கடப்பாடு இருப்பின், அவ்வாறே பேணிக் காத்திடுதல் வேண்டும்.

**பிரிவு - 64**

**தத்தெடுப்பைத் தெரிவித்தல்**

தற்போது நடைமுறையில் உள்ள ஏனைய சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருந்தாலும் கருத்தில் கொள்ளாமல், தொடர்பான நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட அனைத்து தத்தெடுப்பு ஆணைகள் பொறுப்பானத் தகவலை, தத்தெடுப்புப் புள்ளி விவரங்களைப் பேணும் வகையில், அதிகார ஆயம் பராமரிப்பதற்கேற்ற வழிவகையில், ஆயத்தால் வகுக்கப்பட்டத் தத்தெடுப்பு ஒழுங்கு நெறிமுறையில் வகை செய்யப்பட்ட அத்தகைய வழிமுறையில் மாதாந்தர அடிப்படையில் அதிகார ஆயத்திற்கு அனுப்ப வேண்டும்.

**பிரிவு - 65**

**தனிச்சிறப்பு தத்தெடுப்பு முகமைகள் :**

(1) தாய்தந்தையற்றக் குழந்தைகள், கைவிடப்பட்டக் குழந்தைகள் அல்லது சரண் செய்யப்பட்டக் குழந்தைகளுக்குத் தத்தெடுப்பு மற்றும் நிறுவனம் சாராப் பராமரிப்பு மூலமாக அதிகார ஆயத்தால் குறித்துரைக்கப்பட்ட தத்தெடுப்பு ஒழுங்குமுறையில் செய்த, அத்தகைய வழிமுறையில் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் உள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனங்கள் அல்லது அமைப்புகளை, மாநில அரசு ஒரு தனிச்சிறப்பு தத்தெடுப்பு முகமையாக தகவேற்பு இசைவளிப்பு (அங்கீகாரம்) பெற வேண்டும்.

(2) தனிச்சிறப்புத் தத்தெடுப்பு முகமைகளுக்கு அங்கீகாரம் அல்லது மீண்டும் புதுப்பித்தல் வழங்கப்பட்டவுடன், சான்றிதழ் அல்லது அங்கீகாரம் அல்லது மீண்டும்

புதுப்பித்தல் கடித நகல்களுடன் அத்தகைய அமைப்புகளின் பெயர், முகவரி மற்றும் தொடர்பான விவரங்களை, மாநில அமைப்பு அதிகார ஆயத்திற்கு அளிக்க வேண்டும்.

(3) ஒவ்வொரு தனிச்சிறப்புத் தத்தெடுப்பு முகமையும் ஓராண்டில் குறைந்தது ஒரு முறையாவது ஆய்வு செய்யப்பட வேண்டும்; மற்றும் தேவை ஏற்பட்டால், மாநில அரசு தீர்வழி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

(4) சட்டப்படித் தடையில்லா உரிமையுடன் தகுதி படைத்த நிலையில், தாய் தந்தையற்ற ஒரு குழந்தை அல்லது கைவிடப்பட்ட அல்லது ஒப்பளிப்பு செய்யப்பட்டக் குழந்தையை குழுவிடமிருந்து பெற வசதியாக அல்லது உத்தேசத் தத்தெடுப்புப் பெற்றோரின் குடும்ப நிலைகுறித்த ஆய்வறிக்கையை முடிப்பதில் அல்லது குறித்துரைத்தக் கால அளவில் நீதித்தலத்திலிருந்து ஆணையைப் பெறுவதில் இச்சட்டத்தில் அல்லது அதிகார ஆயத்தால் வகுத்துரைத்தத் தத்தெடுப்பு ஒழுங்குமுறையில் வகை செய்தவண்ணம் தேவையான செயல் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். தனிச்சிறப்புத் தத்தெடுப்பு முகமை அவசியமானச் செயற்பாடுகளைத் தாமே எடுக்கத் தவறும் நிலையில், ரூபாய் ஐம்பதாயிரம் வரையில் தண்டத் தொகை விதித்து தண்டனைக்கு உள்ளாவார்; அதே குற்றச்செயல் பன்முறை புரிந்திருந்தால் அந்தத் தனிச்சிறப்புத் தத்தெடுப்பு முகமைக்கு, மாநில அரசு வழங்கிய அங்கீகாரம் திரும்பப் பெறுவதற்கு உள்ளாகும்.

**பிரிவு - 66**

**தத்தெடுப்பு முகமைகளாகப் பதிவு செய்யப்படாத நிறுவனங்களை உறைவிடமாகக் கொண்டுள்ள குழந்தைகளின் தத்தெடுப்பு :**

(1) இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட எல்லா நிறுவனங்களுக்கும், சிறப்பு தத்தெடுப்பு முகமைகளாக தகவேற்பு (அங்கீகாரம்) செய்யப்பட வேண்டியதில்லை. அதன் பராமரிப்பின் கீழ் இருக்கும் தாய் தந்தையற்றக் குழந்தைகள் அல்லது கைவிடப்பட்ட குழந்தைகள் அல்லது சரண் செய்த குழந்தைகள் சட்டப்பிரிவு 38-ன் வகையங்களின் பேரில் (குழந்தைகள் நலக்) குழுவால் தத்தெடுப்புக்குச் சட்டப்படியானத் தகுதி பெற்றது என குழுவால் தெரிவிக்கப்படுவதை முன்னிலையாகி ஒப்படைக்கப்படுவதை மற்றும் அறிவிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

(2) சட்ட உட்பிரிவு (1)-இல் குறிப்பிடப்பட்ட எல்லா நிறுவனங்களும் அருகாமையிலுள்ள தனிச்சிறப்பு தத்தெடுப்பு முகமையுடன், முறையான விதிமுறைக்குட்பட்டு தொடர்பு இணைப்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். மற்றும் தத்தெடுப்பிற்கு சட்டப்படி தகுதி பெற்றவர்கள் குறித்த விவரங்களை, வகுத்துரைக்கப்பட்ட முறையில் உரிய தொடர்பான அனைத்து பதிவேடுகளின் தனிச்சிறப்புத் தத்தெடுப்பு முகமைக்கு வழங்குதல் வேண்டும்.

(3) சட்ட உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2)-இன் வகையங்களை ஏதேனுமொரு அத்தகைய நிறுவனம் மீறினால், பதிவு செய்யும் அதிகார அமைப்பால் ஒவ்வொரு நிகழ்வுக்கும் ரூபாய் ஐம்பதாயிரம் தண்டத் தொகை விதிக்கப்படும். மற்றும் விடாப்பிடியாகத் தொடர்ந்து அவமதித்துப் புறக்கணித்தால், அந்த நிறுவனத்தின் தகவேற்பளிப்பு நீக்கமாகும் வகையில் (அங்கீகாரம் இரத்து செய்யும் வகையில்) ஈர்க்கப்படும்.

**பிரிவு - 67**

**மாநிலத் தத்தெடுப்பு வள ஆதார முகமை :**

(1) அதிகார ஆயத்தின் வழிகாட்டு நெறியின்படி, மாநிலத்தில் தத்தெடுப்புகள் மற்றும் அதன் தொடர்பானப் பொருட்பாடுகளைச் செய்யும் வகையில் மாநில அரசு மாநிலத் தத்தெடுப்பு வள ஆதார முகமை ஒன்றை அமைக்க வேண்டும்.

(2) அத்தகைய மாநில முகமை அங்கு ஏற்கெனவே இருக்கும்போது, அது இச்சட்டத்தின் கீழாக நிகழ்நிலையில் நிகரானதாகக் கருதப்பட வேண்டும்.

**பிரிவு - 68**

**மத்திய தத்தெடுப்பு வள ஆதார முகமை :**

இந்த சட்டத்தின் அமலாக்கத் தொடக்கத்துக்கு முன்பாகவே, மத்திய தத்தெடுப்பு வள ஆதார முகமை இருந்தால், அதனை இச்சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மத்திய தத்தெடுப்பு வள ஆதார அமைப்பாகக் கருதப்பட வேண்டும். கீழ்வரும் செயற் கடமைகள் ஆற்றிட :

(அ) மாநில முகமையுடன் ஒருங்கிணைந்து, நாட்டில் தத்தெடுப்பை ஊக்குவித்து, மாநிலங்களுக்கு இடையேயானத் தத்தெடுப்புக்கு உதவுதல்.

(ஆ) நாடுகளுக்கிடையோனத் தத்தெடுப்பை முறையே ஒழுங்குபடுத்துதல்.

(இ) அவசியமாகும் போது, அவ்வப்போது தத்தெடுப்பு மற்றும் தொடர்பான பொருட்பாடுகளுக்கு முறையே ஒழுங்கு முறைகளை வகுத்தல்.

(ஈ) நாடுகளுக்கிடையேயான தத்தெடுப்புத் தொடர்பாக, குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைப்பு மீதான ஹேக் (Hague) பேராண்மை பெருநிறுவன உடன்படிக்கையின் (சாசனம்) கீழ், மத்திய அதிகார அமைப்பின் செயற் கடமைகளை ஆற்றுதல்.

(உ) வகுத்தமைக்கப்பட்ட ஏனைய செயற்கடமைகள்

**பிரிவு - 69**

**அதிகார ஆயத்தின் செயலாக்க ஆணைக்குழு**

(1) கீழ்வரும் உறுப்பினர்களுடன் ஒரு செயலாக்க விரைவுக் குழுவை, அதிகார ஆயம் அமைக்க வேண்டும்.

(அ) இந்திய அரசின், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகச் செயலர், பதவி சார் தலைவர்

(ஆ) இந்திய அரசின், மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகம், இணை செயலாளர், (பதவி நிலையின் நிமித்தம்).

(இ) இணைச் செயலாளர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு (பதவி நிலையின் நிமித்தம் / நிதி கையாளுநர்)

(ஈ) ஒரு மாநிலத் தத்தெடுப்பு வள ஆதார மையம் மற்றும் இரண்டு தனிச்சிறப்புத் தத்தெடுப்பு மையங்கள்.

(உ) தத்தெடுத்தப் பெற்றோர் மற்றும் தத்தெடுக்கப்பட்டவர்.

(ஊ) குடும்ப நலச் சட்டத்தில் குறைந்தது பத்தாண்டுப் பட்டறிவு கொண்ட ஒரு வழக்குரைஞர் (அ) ஒரு பேராசிரியர்.

(எ) உறுப்பினர் - செயலர் - முதன்மைச் செயலர் : இவரே இந்த அமைப்பின் முதன்மை நிர்வாக அலுவலர் ஆவார்.

(2) (ஈ) முதல் (ஊ) முடிய உள்ளவர்களில், குறிப்பிட்ட உறுப்பினர்களின் தேர்வு அல்லது பணி நியமனத்திற்கான இன்றியமையாத அளவுகோல், அவர்களின் பதவிவரைக் காலம் அது போலவே பணி நியமன வரையறைகளும் வரைக்கட்டுகளும், (நிபந்தனைகளும்) வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய வகையில் அமைதல் வேண்டும்.

(3) செயலாக்க ஆணைக் குழு கீழ்வரும் பணிகளை ஆற்ற வேண்டும் அதாவது :

(அ) மிகுந்த திறத்துடன் செயற்படும் நிலையில், முடுக்கு விசையுடன் விரைவுச் செயலாக்கத்திற்கு அதிகார ஆயத்தை மேற்பார்வையிடுவதுடன் அவ்வப்போது செயற்கடமைகளை மறுஆய்வும் செய்தல்.

(ஆ) ஆண்டு நிதிநிலை அறிக்கை, ஆண்டுக்கான கணக்குகள் மற்றும் ஆய்வு அறிக்கைகள் அதுபோலவே செயற்திட்டம் மற்றும் அதிகார ஆயத்தின் ஆண்டறிக்கைகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்படும்.

(இ) நடுவணரசின் முன்னேற்புடன் அதிகார ஆயத்தின் பணி நியமன விதிகள், பணிக்கால விதிகள், நிதி சார்ந்த விதிகள் ஆகியவற்றை ஏற்றல் வேண்டும. அதேப்போன்று நிர்வாக ஆளுகைக்கான மற்றைய ஒழுங்குமுறைகள், மத்திய அரசாங்கத்தின் முந்தைய அங்கீகாரத்துடனான அமைப்புக்கு உட்பட்ட அதிகாரங்கள், இன்னபிற ஒழுங்குமுறைகள்.

(ஈ) நடுவணரசால் அவ்வப்போது அதற்கு வழங்கலாகும் ஏதேனுமொரு பிற பணி.

(4) செயலாக்க விரைவுக்குழு வகுத்தமைத்த அத்தகைய வழியில், மாதந்தோறும் கூட்டப்பட வேண்டும்.

(5) அதிகார ஆயமானது அதன் தலைமை அலுவலகத்திலிருந்து செயலாற்றுவதுடன், செயற்பணியின் தேவைக்கேற்ப உருவாக்கப்பட்ட அதன் மண்டல அலுவலகங்கள் மூலமும் செயலாற்ற வேண்டும்.

**பிரிவு - 70**

**அதிகார ஆயத்தின் செயலாட்சி உரிமைகள் (அதிகாரங்கள்) :**

(1) இந்த அமைப்பின் செயற்பாடுகளைத் திறம்பட ஆற்ற அதிகார ஆயம், கீழ்வரும் அதிகாரங்களைப் பெற்றுள்ளது. அதாவது:-

(அ) தனிச் சிறப்புத் தத்தெடுப்பு முகமை அல்லது குழந்தைகள் இல்லம் அல்லது எந்தவொரு குழந்தை பாதுகாப்பு நிறுவனமும் பெற்றோர் இல்லாத குழந்தை, கைவிடப்பட்ட குழந்தை வேறு மாநில முகமை அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட அயல் நாட்டுத் தத்தெடுப்பு முகமை எதற்கும் தக்க அறிவுறுத்து ஆணைகளைப் பிறப்பிக்கலாம்;

(ஆ) அத்தகைய வழிகாட்டு முகமைகளால், அதனால் வழங்கப்பட்ட அறிவுறுத்துக் கட்டளைகளைத், தொடர்ந்து நிறைவேற்றத் தவறினால், துறை பொது அலுவலர் அல்லது பதவியியல் செயற்பாட்டாளர் அல்லது நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் நிறுவனத்தார் மீது உரிய நடவடிக்கை எடுக்க, தொடர்பான அரசுத்துறை அல்லது அதிகார ஆயத்திற்குப் பரிந்துரைக்க வேண்டும்.

(இ) எவரேனும் ஒரு பொது ஊழியர் அல்லது துறை மேலாண் அலுவலர் அல்லது நிறுவனத்தின் அறிவுறுத்தல்களைத் தொடர்ந்து, இணக்கமற்ற நிலையில் செயற்படுத்தாத ஏதேனுமொரு வழக்கை நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்வதற்கு, பணி வரம்பெல்லை கொண்டிருக்கும் ஒரு நீதித்துறை குற்றவியல் நடுவருக்கு அனுப்புவதற்கு மற்றும் எந்த குற்றவியல் நடுவருக்கு அத்தகைய வழக்கு அனுப்பப்பட்டுள்ளதோ அந்த குற்றவியல் நடுவர் குற்ற விசாரணை முறைச்சட்டம் 1973 (2/1974) பிரிவு 345-இன் கீழாக அது அவருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது போன்றே அதனை விசாரிக்க வேண்டும்.

(ஈ) நடுவணரசால் வழக்கு உரிமை அதிகாரம் வழங்கப்படலாம் என்றவாறு அமையும் ஏதேனுமொரு பிற அதிகாரம்

(2) உத்தேச தத்தெடுப்பு பெற்றோர் (அ) தத்தெடுக்கப்பட்ட வேண்டிய ஒரு குழந்தையின் சட்டமுறைமைத் தகுதிப்பாட்டினை உள்ளடக்கிய ஒரு தத்தெடுப்பு வழக்கில், ஏதேனுமொரு கருத்து வேறுபாடு எழும் நோக்கில், அதிகார ஆயத்தின் முடிவே மேலோங்கி இருக்கும்.

**பிரிவு - 71**

**அதிகார ஆயத்தின் ஆண்டறிக்கை :**

(1) அதிகார ஆயம் வகுத்தமைத்த அத்தகைய முறையில், ஆண்டறிக்கை ஒன்றை, நடுவணரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(2) அதிகார ஆயத்தால் சமர்ப்பிக்கப்படும் அத்தகைய ஆண்டறிக்கையை, நடுவணரசு நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் முன்பாகவும், முறையேத் தாக்கல் செய்தாக வேண்டும்.

**பிரிவு - 72**

**நடுவணரசின் நிதியுதவி (மானியங்கள்) :**

(1) இதற்கென சட்டத்தை, நாடாளுமன்றத்தில் முறைப்படியான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர், இச்சட்டத்தின் கீழான அதிகார ஆயத்தின் செயற் கட்டளைகளை, நிறைவேற்றப் பயன்படுத்துவதற்கு, நடுவணரசு தக்கதெனக் கருதும் நிதித் தொகையை மானிய உதவியாக அதிகார ஆயத்திற்கு அளிக்க வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்டச் செயற்கடமைகளை நிறைவேற்ற அதிகார ஆயம், தக்கதெனக் கருதும் அத்தகைய நிதித் தொகையைச் செலவு செய்யலாம் மற்றும் அத்தொகைச் சட்ட உட்பிரிவு (1)-இல் மேற்சுட்டியவாறு மானிய உதவித் தொகையிலிருந்து வழங்கப்படும் செலவினம் எனக் கொள்ளுதல் வேண்டும்.

**பிரிவு - 73**

**அதிகார ஆயத்தின் கணக்குகளும், தணிக்கையும் :**

(1) அதிகார ஆயம் முறையான கணக்குகளையும், ஏனைய தொடர்பான பதிவேடுகளையும் பேணுதல் வேண்டும்; மற்றும் நடுவணரசு இந்தியத் தணிக்கைத் துறையுடன் கலந்தாலோசித்து, குறித்துரைத்த அந்த படிவத்தில் ஆண்டு வரவு செலவுக் கணக்கு விவர அறிக்கையை அதிகார ஆயம் தயாரிக்க வேண்டும்.

(2) அதிகார ஆயத்தின் கணக்குகள் இந்தியக் கணக்காய்வர் மற்றும் தணிக்கையரால், குறிக்கப்பட்ட அத்தகையக் கால இடைவெளிகளில் தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்; அந்த தணிக்கை தொடர்பாக எழும் எந்தவொருச் செலவினமும், அது அந்த அதிகார ஆயத்தால் இந்தியக் கணக்காய்வர் மற்றும் தலைமைத் தணிக்கைத் துறையகத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) இந்த சட்டத்தின் கீழான அதிகார ஆயத்தின் கணக்குகள் தொடர்பாக தணிக்கை செய்யும் தணிக்கைத் துறைத் தலைவர் மற்றும் அவரால் இதன் பொருட்டு பணி நியமனம் செய்யப்படும் எவரேனும் ஒரு நபர் நடுவணரசின் கணக்குகளைத் தணிக்கை செய்யும் அதிகார ஆயத்தின் அதே உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகள்

(சலுகைகள்) கொண்டிருப்பார்; மற்றும் குறிப்பாக புத்தகங்கள், கணக்குகள் தொடர்பான செலவின பற்றுச் சீட்டுகள் ஏனைய ஆவணங்கள் மற்றும் பதிவுத் தாள்களை ஒப்படைக்குமாறு கேட்கும் சிறப்புரிமைகளையும், அதுபோலவே அந்த அதிகார ஆயத்தின் எந்தவொரு அலுவலகத்தையும் ஆய்வு செய்வதற்கான உரிமையையும் பெற்றிருப்பார்.

(4) அதிகார ஆயத்தின் கணக்குகள் தணிக்கைத் துறைத் தலைவர்களால் அல்லது இதன் காரணமாக அவரால் நியமிக்கப்பட்ட ஏனைய நபர் எவராலும் சான்றளித்ததை அடுத்து, அந்த சான்றுடன் சார்ந்த தணிக்கை விவர அறிக்கையையும் ஒரு சேர ஒருங்கிணைத்து அதிகார ஆயத்தால் ஆண்டுதோறும் நடுவணரசுக்கு மேலனுப்புதல் வேண்டும்.

(5) நடுவணரசு, அந்த தணிக்கை அறிக்கைகளைப் பெற்றதன் பின்னர், அதனைக் கூடிய விரைவில் நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் பின்னேற்பு பெறலாம் என்ற நிலையில் தாக்கல் செய்தாக வேண்டும்.

# இயல் 9

## குழந்தைகளுக்கு எதிரான ஏனைய குற்றங்கள்

**பிரிவு - 74**

**குழந்தைகளின் அடையாளம் காணுவதை வெளிப்படுத்துதல் மீதான தடை :**

(1) சட்டத்திற்கு முரண்பட்டக் குழந்தை (அ) பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் ஒரு குழந்தை அல்லது தற்போது நடைமுறையில் ஏனைய சட்டம் எதன் கீழும் தொடர்பானப் பொருட்பாடு குறித்தக் குற்றச் செயலால் பாதிக்கப்பட்டக் குழந்தை அல்லது ஒரு குற்றத்தின் சாட்சியாளரின் அடையாளம் தெரிந்து கொள்ளும் வகையில் விசாரணை, புலனாய்வு விசாரணை அல்லது நீதித்துறை நடைமுறைகள் செய்தித்தாள், காலமுறை இதழ், துண்டுச் செய்தி மடல், ஒலி மற்றும் ஒளிபரப்பு ஊடகம் அல்லது குறிப்பாக குழந்தையின் பெயர், முகவரி அல்லது பள்ளி அல்லது ஏனைய விவரம் எதனையும் வெளியிடக் கூடாது; அத்தகைய குழந்தையின் நிழற்படத்தையும் வெளியிடக்கூடாது.

**வரம்புரையாக :**

எழுத்து வடிவில் காரணங்களைப் பதிவு செய்து கொண்டு, நேர்விற்கேற்ப குழுமம் அல்லது குழு அவ்விதம் வெளிப்படுத்துவது குழந்தையின் உயரிய நலப்பற்றிற்கு ஏற்றதெனக் கருதினால், ஒரு விசாரணையை மேற்கொண்டு, அத்தகைய வெளிப்படுத்தலுக்கு அனுமதி வழங்கலாம்.

(2) ஒரு வழக்கு முடிவுறும் நிலையில் அல்லது தீர்வாகும் நிலையில் குழந்தையின் நடத்தைச் சான்றிதழ் வழங்கும் நோக்கத்திற்காக, குழந்தையின் பதிவேடு எதனையும் காவல்துறை வெளிப்படுத்துதல் கூடாது.

(3) சட்டஉட்பிரிவு (1)-இன் வகையங்களை மீறும் எவர் ஒருவரும், ஆறு மாதங்கள் வரையில் நீட்டிக்கப்படலாம் என்ற கால அளவில் சிறைத் தண்டனையுடன் அல்லது ரூபாய் இரண்டு இலட்சங்கள் வரை நீட்டிக்கப்படலாம் என்ற தண்டத் தொகையுடன் (அபராதத்துடன்) அல்லது இரண்டும் சேர்த்து தண்டிக்கப்பட வேண்டும்.

**பிரிவு - 75**

**குழந்தையைக் கொடுமைப்படுத்துதலுக்கான தண்டனை**

ஒரு குழந்தை மெய்யாகவே எவருடைய பொறுப்பில் அல்லது ஆளுகைக் கட்டுப்பாட்டில் உள்ளாரோ, அந்தக் குழந்தை மீது வன் தாக்குதல் நடத்துதல், முற்றிலுமாகக் கைவிடுதல் முறைகேடாகப் பயன்படுத்துதல், காட்சிப் பொருளாக ஆக்குதல் அல்லது விழைந்தே புறக்கணித்தல் அல்லது அத்தகைய குழந்தைக்கு அவசியமற்ற உள்ளத்தளவிலும், உடலளவிலும், அவதியுறும் வகையில், வன்தாக்குதல் நிகழ்த்தவோ, முற்றிலும் கைவிடவோ, முறைகேடாகப் பயன்படுத்தவோ காட்சிப்படுத்தவோ அல்லது புறக்கணிக்கவோ செய்யும்படி செய்தல் அல்லது குழந்தையை அதன் காரணமாகப் பெறுதல் குற்றத்தை புரிபவர், மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை அல்லது ரூபாய் ஒரு இலட்சம் வரையிலான பணத்தண்டம் (அபராதம்) அல்லது இரண்டும் விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்.

**வரம்புரையாக :**

ஈன்ற பெற்றோர் தங்களின் கட்டுப்பாட்டை மீறிய புறக்காரணிகளால் குழந்தையைக் கைவிடின் அவ்வாறான கைவிடல் விருப்பப் புறக்கணிப்பாகாது. மேலும் இச்சட்டத்தின் கீழான தண்டனை வகையகங்கள் அதற்குப் பொருந்தாது.

**மேலும் வரம்புரையாக**

பராமரிப்பு மற்றும் பாதுகாப்புக்காக ஒப்பளிப்பு செய்யப்பட்ட ஒரு அமைப்பால் பணி நியமனமாகி இருக்கும் அல்லது நிருவாக மேலாண்மை புரியும் எவரேனும் ஒரு நபரால் அத்தகைய குற்றம் செய்யப்படும்போது, ஐந்தாண்டுகள் வரையில் நீட்டிக்கப்படலாமென்ற கடுங்காவல் சிறைத் தண்டனையுடன் மற்றும் ரூபாய் ஐந்து இலட்சம் வரையில் நீட்டிக்கப்படலாமென்ற பணத்தண்டத்துடன் (அபராதத்துடன்) அவர் தண்டிக்கப்பட வேண்டும்.

**மென்மேலும் வரம்புரையாக :**

மேலே சொல்லப்பட்ட கொடுமைப்படுத்தலின் விளைவாக, அந்த குழந்தை உடலளவில் தகுதிறன் அற்றவராகும்போது அல்லது ஒரு மனப்பிணிக்கு உள்ளாகும்போது அல்லது வழக்கமான அன்றாடக் கடமைகளைச் செய்ய இயலாத போது அல்லது உயிர் அல்லது உடலுறுப்புக்கு அபாயம் ஏற்படுத்த முனையும்போது, அவர் மூன்றாண்டுகளுக்குக் குறையாத ஆனால் பத்தாண்டுகள் வரையில் நீட்டிக்கப்படலாமென்றக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும். மற்றும் ரூபாய் ஐந்து இலட்சம் பணத்தண்டம் (அபராதம்) விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும்.

**பிரிவு - 76**

**இரத்தல் தொழிலில் குழந்தையை வேலைக்கு அமர்த்துதல் :**

(1) எந்தவொரு நபரும் குழந்தையை இரத்தல் (பிச்சை எடுத்தல்) தொழிலில் வேலைக்கு அமர்த்தினாலோ அல்லது பயன்படுத்தினாலோ அல்லது எவரேனும் ஒரு குழந்தையை இரத்தல் தொழிலில் ஈடுபடுத்தக் காரணமாக இருந்தாலோ ஐந்தாண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம் என்ற கால அளவிலான சிறைத் தண்டனையுடன் ஒரு இலட்சம் ரூபாய் வரையில் தண்டத்தொகை விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்.

**வரம்புரையாக :**

இரத்தல் தொழில் நோக்கத்திற்காக, அந்த நபர் குழந்தையின் உடலுறுப்பை இழக்க வைத்தாலோ அல்லது முடமாக்கினாலோ அவர் ஏழாண்டுகளுக்குக் குறைவில்லாத ஆனால் பத்தாண்டுகள் வரை நீட்டிக்கப்படலாமென்ற ஒரு கால அளவில் கடுங்காவல் சிறைத் தண்டனையுடன், ரூபாய் ஒரு இலட்சம் தண்டத் தொகை விதிக்கப்பட்டு தண்டனைக்குரியவராவார்.

(2) குழந்தையின் பொறுப்பை அல்லது கட்டுப்பாட்டை உண்மையில் கொண்டிருக்கும் எவரேனும் சட்டஉட்பிரிவு (1)-இன் கீழ் ஒரு குற்றத்தைச் செய்வதில் உடந்தையாக உள்ளாரோ, அவர் உட்பிரிவு (1)-இல் அதே தண்டனை விதிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார். அந்த நபர் பிரிவு 2 கூறு (14) உட்கூறு (V)-இன் கீழ் தகுதியில்லாதவர் என்று கருதப்படுவார்.

**வரம்புரையாக :**

மேற்கூறப்பட்ட குழந்தை எச்சூழல்களிலும் சட்டத்திற்கு முரணானக் குழந்தையெனக் கருதப்படமாட்டாது. மேலும் அக்குழந்தை அவ்வாறான பாதுகாவலரின் காப்பாளரின் ஆளுமைக் கட்டுப்பாட்டிலிருந்து பிரிக்கப்பட்டு, உரிய மீள்வாழ்விற்காக குழுவின் முன்பாக ஒப்படைக்கப்படும்.

**பிரிவு - 77**

**ஒரு குழந்தைக்கு வெறியூட்டும் மதுவையோ உணர்வு நீக்க போதை மருந்துப் பொருளையோ அல்லது உளக்கிளர்ச்சி ஊட்டும் போதைப் பொருளையோ கொடுத்ததற்கான தண்டனை :**

பிணிவாய்ப்பட்டிருக்கும் நிலையில் முறையானத் தகுதிப் பெற்ற மருத்துவத் தொழிலாற்றுநர் ஆணையிருந்தாலன்றி, குழந்தை ஒருவருக்கு வெறியூட்டும் மது அல்லது போதை மருந்து அல்லது உளக்கிளர்ச்சியூட்டும் போதைப் பொருளை அளிக்கிறார் அல்லது அளிக்கக் காரணமாக இருக்கிறார் என்றால், அவர் ஏழாண்டுகளுக்கு நீடிக்கக்கூடியக் கால அளவில் சிறைத் தண்டனையுடன், ஒரு இலட்சம் ரூபாய் வரையிலான பணத்தண்டம் (அபராதம்) விதிக்கும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்.

**பிரிவு - 78**

**ஏதேனுமொரு போதையூட்டும் மது, போதை மருந்து, அல்லது உளமயக்கப் பொருளை ஓரிடத்தில் விற்க, இடம் விட்டேகி விற்க, எடுத்துச் செல்ல, தருவித்து வழங்க, அல்லது கடத்தலுக்காக ஒரு குழந்தையைப் பயன்படுத்துதல் :**

குழந்தை ஒருவரை மது, போதை மருந்து, போதைப் பொருள் விற்றலுக்கு தருவித்து வழங்க அல்லது கடத்தலுக்கு வேறொருவர் பயன்படுத்துகிறாரோ, அவர் ஏழாண்டுகள் வரையில் சிறைத் தண்டனை மற்றும் ரூபாய் ஒரு இலட்சம் வரையில் தண்டத் தொகை (அபராதம்) விதித்து தண்டிக்கப்படுவார்.

**பிரிவு - 79**

**ஒரு குழந்தை தொழிலாளரைச் சுரண்டுதல் :**

தற்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதிலும் என்ன சொல்லப்பட்டிருப்பினும், தான் ஈட்டிய ஊதியத்திற்கு அல்லது பொருளீட்டலுக்குப் பயன்படுத்துவதற்காகக் குழந்தை ஒருவரை எவர் ஒருவர் உண்மையை மறைக்கும் அளவில் வேலைக்கு அமர்த்துகிறாரோ மற்றும் வேலையின் நிமித்தம் அடிமை நிலையில் தம்மிடம் வைத்துள்ளாரோ, அந்த நபரின் ஊதியத்தைத் தாமே எடுத்துக் கொள்கிறாரோ தமது சொந்தப் பயன்பாட்டுக்காக அத்தகைய ஊதியத்தைப் பயன்படுத்துகிறாரோ அவர் ஐந்தாண்டு வரையிலான கடுஞ் சிறைத் தண்டனையும் மற்றும் ரூபாய் ஒரு இலட்சம் வரையில் தண்டத் தொகையும் விதிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்.

**விளக்கம் :**

இந்த பிரிவின் நோக்கத்திற்காக “வேலைக்கு அமர்த்துதல்” என்ற குறிப்பிட்ட சொற்கூறு என்பது பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் வேலை செய்தல் மற்றும் பொருள் ஊதியத்திற்காக பொதுவிடங்களில் வேலை மற்றும் கேளிக்கையை உள்ளடக்கியதாக அமையும்.

**பிரிவு - 80**

**தத்தெடுப்புக்கு வரையறுக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றாமைக்கான தண்டிப்பு நடவடிக்கைகள் :**

இச்சட்டத்தில் சொல்லப்பட்ட வகையங்கள் அல்லது நடைமுறைகளைப் பின்பற்றாமல் தத்தெடுப்பு நோக்கத்திற்காக நபர் எவரும் அல்லது நிறுவனம் எதுவும் பெற்றோர் இல்லாத குழந்தை, முற்றிலும் கைவிடப்பட்ட குழந்தை அல்லது விடுவிப்பில் சரண் செய்யப்பட்ட குழந்தை எவரையும் கொடுக்கவோ (அ) பெற்றிடவோ செய்தால், அந்த நபர் (அ) நிறுவனம் மூன்றாண்டுக்கால வரையறையுடன் கூடிய சிறைத் தண்டனை (அ) ஒரு இலட்சம் ரூபாய் வரைத் தண்டத்தொகை (அபராதம்) அல்லது இரண்டுமே விதிக்கப்பட்டுத் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்.

**வரம்புரையாக :**

தகவேற்பிசைவு பெறப்பட்ட (அங்கீகரிக்கப்பட்ட) தத்தெடுப்பு முகமையால் இந்தக் குற்றம் புரியப்பட்டிருப்பின், இந்த தண்டனையுடன் கூடுதலாக அந்த தத்தெடுப்பு முகமையின் அன்றாட அலுவல்களின் பொறுப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட மேற்கூறிய தண்டனையும் கூடுதலாக பிரிவு - 41-இன் கீழ் பதிவுச் செய்யப்பட்ட நிறுவனத்தின் பதிவு மற்றும் பிரிவு 65-இன் கீழ் அதன் அங்கீகாரமும் ஓராண்டிற்கான ஒரு சிறுமக்கால அளவிற்குத் திரும்ப பெறவும் வேண்டும்.

**பிரிவு - 81**

**குழந்தைகளை எந்தவொரு நோக்கத்திற்காகவும் விற்றல் அல்லது விலைக்கு முயன்று பெறுதல்:**

குழந்தை ஒருவரை எந்த நோக்கத்திற்காகவும், எவரும் விற்கவோ அல்லது விலைக்கு முயன்று பெற்றாலோ, அவர் ஐந்தாண்டுகள் வரையில் கடுஞ்சிறைத் தண்டனையும், ரூபாய் ஒரு இலட்சம் வரையிலான பணத்தண்டமும் (அபராதமும்) விதிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்.

**வரம்புரையாக :**

அத்தகையக் குற்றச்செயல் அக்குழந்தையை மெய்யாகவே தமது பொறுப்பில் பெற்றுள்ள ஒரு மருத்துவமனையின் பணியாளர்கள், தனியார் மருத்துவமனை அல்லது மகப்பேறு இல்லம் உள்ளிட்ட நபர் ஒருவரால் செய்யப்பட்டிருந்தால், அவர் மூன்றாண்டுகளுக்கு குறையாமல் ஏழாண்டுகள் வரையில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்.

**பிரிவு - 82**

**உடலளவிலான தண்டிப்பு :**

(1) ஒரு குழந்தைப் பராமரிப்பு நிறுவனத்தின் பொறுப்பாளர் அல்லது அதில் பணிபுரிபவர், குழந்தை ஒருவருக்கு ஒழுங்குநெறிக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கத்தில் உடலளவிலான தண்டிப்புக்கு உட்படுத்தினால் அவரின் முதல் தண்டிப்பில் பத்தாயிரம் ரூபாய் வரையில் தண்டத் தொகை விதிக்கப்படும். இந்தச் செயலைப் பின்தொடரும் அக்குற்றத்திற்கு மூன்று மாதங்கள் வரையில் நீட்டிக்கப்படக்கூடிய சிறைத் தண்டனையும், அபராதமும் அல்லது இரண்டுமே சேர்த்து விதிக்கப்படும்.

(2) சட்டத்தின் உட்பிரிவு (1)-இல் குறிப்பிட்டுச் சுட்டியவாறு நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் நபர் ஒருவர், அச்சட்ட உட்பிரிவின் கீழ் ஒரு குற்றத்திற்காகத் தண்டனைக்கு உட்பட்டால், அவரைப் பணியிலிருந்து நீக்கப்பட வேண்டும் மற்றும் அதன் பின்னர், குழந்தையுடன் அவர் நேரடியாகப் பணியாற்றுவதிலிருந்து தடுக்கப்பட வேண்டும்.

(3) உட்பிரிவு (1)-இல் குறிப்பிட்ட நிறுவனத்தில் உடலளவிலான தண்டனை பற்றி தெரிவிக்கப்பட்டிருக்கும்போது, அந்த நிறுவனத்தின் நிருவாகம் அரசின் ஏதேனுமொரு விசாரணைக்கு ஒத்துழைப்பு தரவில்லை என்றாலோ அல்லது குழு (அ) குழுமம் (அ) நீதிமன்றம் (அ) மாநில அரசின் ஆணைகளை நிறைவேற்றாத நிலையில், அந்த நிறுவனத்தின் நிருவாகப் பொறுப்பாளருக்கு மூன்றாண்டு காலத்திற்குக் குறையாத காலவரம்பில் சிறைத்தண்டனையும் மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் தண்டத் தொகையும் (அபராதமும்) விதிக்கப்படுவார்.

**பிரிவு - 83**

**போராளிகள் அல்லது ஏனைய உரிய வயது வந்தோரால் குழந்தையைப் பயன்படுத்துதல் :**

(1) நடுவணரசால் அறிவிக்கப்பட்ட அவ்வண்ணமாக ஏதாவது ஒரு அரசு சாராத சுயமான தனிப்பாணியில் அமைந்த போராளிக்கு அல்லது தடை செய்யப்பட்ட தீவிரவாதக் குழு என்று எந்தவொரு நோக்கத்திற்காகவும், எவரெனும் ஒரு குழந்தையை வேலைக்கு அமர்த்தினால் அல்லது பயன்படுத்தினால் ஏழாண்டுகள் வரையில் நீட்டிக்கப்படலாம் என்ற ஒரு கால அளவில் கடுங்காவல் சிறைத் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார் மற்றும் ரூபாய் ஐந்து இலட்சத்திற்கான தண்டத் தொகையும் (அபராதத்தையும்) செலுத்த உட்படுத்தப்படுவார்.

(2) எவரேனும் ஒரு உரிய வயது வந்தோர் அல்லது அவர்களின் குழுவினர் எவரும் குழந்தைகளைச் சட்டத்திற்கு புறம்பான செய்கைகளில் தனிப்பட்ட வகையிலோ அல்லது கும்பலாகவோ பயன்படுத்தினால், அவர்கள் ஏழாண்டுகள் வரையில் நீட்டிக்கப்படலாமென்ற ஒரு கால அளவில் கடுங்காவல் சிறைத் தண்டனைக்கு

உள்ளாக வேண்டும்; மற்றும் ரூபாய் ஐந்து இலட்சத்திற்கான தண்டத் தொகையும் (அபராதமும்) செலுத்துவதற்கு உட்படுத்தப்படுவார்.

**பிரிவு - 84**

**சட்டத்திற்குப் புறம்பாக குழந்தைகளைக் கவர்ந்து செல்வதும், வன்கடத்துதலும் :**

இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இந்தியத் தண்டனைச் சட்டம், 1860 (45/1860) பிரிவுகள் 359 முதல் 369 வரையிலான வகையங்கள் ஒரு குழந்தை அல்லது பதினெட்டு வயதிற்கு கீழான ஒரு இளவருக்கு தேவையான மாறுதலுடன் பொருந்தும். மற்றும் எல்லா வகையங்களும் அவ்வாறே இணங்கிப் பொருந்துவனவாகவே பொருள் கொள்ள வேண்டும்.

**பிரிவு - 85**

**மாற்றுத் திறனாளிக் குழந்தைக்கு எதிராகச் செய்யப்படும் குற்றங்கள் :**

குழந்தை, உடல்திறன் குறைபாடு உடையவர் என தொழில்முறை மருத்துவரால் சான்றளிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்கு எதிராக, இந்த இயலில் குறிப்பிடப்பட்டக் குற்றச் செயல்களைப் புரியும் எவர் ஒருவரும், அந்த குற்றத் தண்டனையை இரட்டிப்பாக விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவர்.

**விளக்கம் :**

இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக “உடல் திறன் செயலிழக்கக் குறைபாட்டுத் தடை” என்ற சொற்கூறு உடல்திறன் குறைபாடுடைய நபர்கள் (சமவாய்ப்புகள், உரிமைகள், பாதுகாப்பு மற்றும் முழுமையாக பங்கேற்றல்) சட்டம் 1995 (1/1996) பிரிவு-2 கூறு (i)-இன் கீழ் அளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டதாக அமையும்.

**பிரிவு - 86**

**குற்றங்களின் வகைப்பாடு மற்றும் குறித்தமர்வு நீதிமன்றம் :**

(1) இச்சட்டத்தின் கீழான ஒரு குற்றம் மூன்றாண்டுகள் மற்றும் அதற்கும் மேற்பட்டு ஆனால் ஏழாண்டுகளுக்கு மிகாத ஒரு காலவரையறையில் சிறைத் தண்டனையுடன் தண்டிக்கத்தக்கதாக இருக்கும்போது பின்னர் அத்தகையக் குற்றம், பிடி ஆணை வேண்டாததாக, பிணையில் விடக்கூடாததாக மற்றும் குழந்தைகள் நீதிமன்றத்தால் விசாரணைபுரியக் கூடியதாக இருக்கும்.

(2) இச்சட்டத்தின் கீழான ஒரு குற்றம், மூன்றாண்டுகள் மற்றும் அதற்கு மேற்பட்டு ஆனால் ஏழாண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலவரம்பிலான சிறைத் தண்டனையுடன் தண்டிக்கப்படத்தக்கதாக இருக்கும்போது, பின்னர் அத்தகைய

குற்றம் பிடி ஆணை வேண்டாததாக பிணையில் விடக் கூடாததாக மற்றும் குற்றவியல் முதல்வகுப்பு நடுவரால் விசாரிக்கத்தக்கதாக இருக்கும்.

(3) இச்சட்டத்தின் கீழான ஒரு குற்றம், மூன்றாண்டுகளுக்கு குறைவான சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் (அபராதம்) மட்டும் விதித்து தண்டிக்கப்படக் கூடியதாக இருக்கும்போது, அந்தக் குற்றம் கைது செய்யக்கூடாதது ஆகும்; எந்த நடுவராலும் பிணையில் விடக்கூடியதும், விசாரிக்கப்படக் கூடியதும் ஆகும்.

**பிரிவு - 87**

**குற்ற உடந்தை**

இச்சட்டத்தின் கீழான குற்றம் எதற்கும் குற்ற உடந்தையாக இருக்கும் எவர் ஒருவரும், அந்தக் குற்றம், தூண்டுதலின் விளைவாக இருந்தால், அவர் குற்ற உடந்தைக்கான தண்டனை விதிக்கப்படுவார்.

**விளக்கம் :**

ஒரு செய்கை (அ) குற்றம் கூறப்பட்ட குற்ற உடந்தையின் விளைவாகச் செய்யப்படுவது என்பது, தூண்டுதலின் விளைவாக செய்யப்பட்டவாறு அல்லது சதியின் தொடர்வால் செய்யப்பட்டிருக்கும் போது அல்லது உறுதுணையாக இருக்கும்போது அது தூண்டுதலின் விளைவால் சட்ட உருக்கொண்டக் குற்ற உடந்தை ஆகும்.

**பிரிவு - 88**

**மாற்றுத்தண்டனை**

ஒரு செயல் அல்லது செய்தக்க (அ) செய்வன செய்யாமை இச்சட்டத்தின் கீழாக மற்றும் அப்போதைக்கு அமலாக்கத்தில் உள்ள ஏதேனுமொருப் பிற சட்டத்தின் கீழும் தண்டிக்கக்கூடியக் குற்றமாயின், அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருப்பினும் குற்றச் செயல் புரிந்தவர் எனக் கண்டறியப்பட்டு, அத்தகையச் சட்டத்தின் கீழ்த் தண்டனையின் அதிக அளவிலான குறித்துரைக்கப்பட்ட (உயர்ந்த பட்ச) தண்டனை விதிக்கப்படத்தக்கவர் ஆவார்.

**பிரிவு - 89**

**இந்த இயலின் கீழ், குழந்தையால் செய்யப்பட்ட குற்றம்**

இந்த இயலின் கீழாக, எந்தவொரு தவறானக் குற்றத்தையும் செய்த எவரேனும் ஒரு குழந்தை, இந்த சட்டத்தின் கீழாக “சட்டத்திற்கு முரணான ஒரு குழந்தை” எனக் கொள்ளப்பட வேண்டும்.

# இயல் 10

## பல்வகை

**பிரிவு - 90**

**குழந்தையின் பெற்றோர் (அ) காப்பாளர் முன்னிலையாதல் :**

(1) இச்சட்டத்தின் வகையங்கள் எதன் கீழாகவும், ஒரு குழந்தை நேர்விற்கேற்ப அக்குழு (அ) குழுமம் தக்கதெனக் கருதினால், அக்குழந்தையை மெய்யாகவே தமது பொறுப்பில் வைத்துள்ள காப்பாளர், அக்குழந்தையைப் பொறுத்தவரையிலான எந்தவொரு விசாரணை நடவடிக்கையிலும் முன்னிலையாகுமாறு பணிக்கலாம்.

**பிரிவு - 91**

**குழந்தை முன்னிலையாகும் வருகையைத் தவிர்த்தல் :**

(1) ஒரு விசாரணையின் போக்கில், எந்தப்படிநிலையிலும், அந்த விசாரணை நடைபெறும்போது குழந்தையின் வருகை, விசாரணையின் நிமித்தம் இன்றியமையாத கூறு இல்லை என குழு அல்லது குழுமம் எண்ண நிறைவு பெற்றால், நேர்விற்கேற்ப விசாரணையில் முன்னிலை ஆவதற்கு விலக்களிக்க வேண்டும் மற்றும் பின் தொடர்ச்சியாக, குழு அல்லது குழுமத்தால் பிறவாறாக ஆணையிட்டாலன்றி, தொடர்பானக் குழந்தை வாராமையின்போது கூட விசாரணை தொடரப்பட வேண்டும்.

**வரம்புரையாக**

இந்த சட்டப்பிரிவின் கீழாக, ஒருக் குழந்தை வரைக்கட்டின் பேரில் (நிபந்தனை பேரில்) விடுவிக்கப்பட்டிருந்தால், அல்லது எந்தவொரு நபரின் மேற்பார்வையின் கீழ் குழந்தைத் தங்க வைக்கப்பட்டிருந்ததோ, அத்தகைய நபர் அந்த வரைக்கட்டுக்களை நிறைவேற்றத் தவறும் நேர்வில் குழுமம் (அ) குழு தேவையெனில், தொடர்பான இல்லம் ஆளுகைப் பொறுப்பேற்று பின்னர் திரும்ப வைக்கப்படுவதற்கு வகை செய்யலாம்.

(2) குழுமம் (அ) குழுவின் முன்பாக நிகழும் விசாரணையில், குழந்தையின் வருகை கோரப்படும்போது, அக்குழந்தை தனக்கும், உடன் செல்லும் வழித்துணைக் காவலருக்கும் உண்மையாகவே நேர்ந்த செலவுத் தொகையை, நேர்வுக்கேற்ப குழுமம் (அ) குழு (அ) மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகிடம், நேர்ந்த செலவை ஈடுசெய்து திரும்பப் பெறுவதற்கான உரிமை உடையவர் ஆவார்.

**பிரிவு - 92**

**நீண்டகால பண்டுவம் தேவைப்படும் பிணியுற்ற ஒரு குழந்தையை மருத்துவப் பண்டுவத்திற்காக ஒரு ஒப்புதல் அளிக்கப்பட்ட இடத்தில் வைத்தல்**

குழு அல்லது குழுமத்திற்குக் கொணரப்பட்டக் குழந்தை, நீடிய மருத்துவப் பண்டுவம் தேவையாகும் பிணியால், பாதிக்கப்பட்டாலோ அல்லது உடலளவிலும்,

உள்ளத்தளவிலும், குறையுற்று அறியப்பட்டு மருத்துவ சிகிச்சை அளிப்பது அத்தியாவசியமாக உள்ளது எனக் கண்டறிந்தாலோ, நேர்விற்கேற்ப குழு அல்லது குழுமம் அக்குழந்தையை அந்த சிகிச்சை அத்தியாவசியமானது எனத் தேவையாகும் அத்தகைய கால அளவிற்கு, அங்கீகாரம் பெற்ற வகுத்துரைக்கப்பட்டத் தகுநிலை வசதியகத்திற்கு அனுப்பலாம்.

**பிரிவு - 93**

**மனநலம் பாதித்த (அ) மது மற்றும் போதை மருந்துகளுக்கு, அடிமையான ஒரு குழந்தையை இடமாற்றம் செய்தல் :**

(1) இந்த சட்டத்தின் வகையங்களை அடியொற்றி ஒரு சிறப்பில்லம் (அ) ஒரு கூர் நோக்கில்லம் (அ) ஒரு குழந்தைகள் இல்லம் (ஆ) ஒரு நிறுவனத்தில் தங்க வைக்கப்பட்டிருக்கும் எவரேனும் ஒரு குழந்தை, ஒரு நபரிடத்தில் நடத்தை மாற்றமைவுக்கு இட்டுச்செல்லும், உளநலம் பாதித்த நபராக (அ) மது (அ) ஏனைய போதை மருந்துகளுக்கு அடிமை ஆனவராக இருக்கும் நிலையில், குழு (அ) குழுமம் மனநலச் சட்டம், 1987 (14/1987)-இன் வகையங்கள் (அ) அதன் வழிக் கீழாக செய்யப்பட்ட விதிகளின் படி, ஒரு மன நோய் மருத்துவமனை (அ) தனியார் மனநல மருத்துவமனைக்கு, அந்த குழந்தையை மாற்றி அனுப்ப ஆணையிடலாம்.

(2) சட்ட உட்பிரிவு (1)-இன் கீழாக, ஒரு மனநோய் மருத்துவமனைக்கு (அ) மன நல மருத்துவ தனியார் சிகிச்சை மனைக்கு ஒரு குழந்தையை அனுப்பும் நேர்வில், குழு (அ) குழுமம் மனநோய் மருத்துவமனை (அ) தனியார் மனநல மருத்துவமனை பண்டுவத்தின் நிறைவில் விடுவிப்புச் சான்றிதழில் தரப்பட்டுள்ள அறிவுரையின் பேரில், உள நலம் பாதித்த நபர்களுக்காக (ஏதேனுமொரு போதைமருந்து (அ) உள மயக்கப் பொருளுக்கு அடிமையான நபர்களை உள்ளடக்கிய) மாநில அரசால் பராமரிக்கப்பட்டுவரும் போதைக்கு அடிமை ஆனவர்களுக்கான ஒரு ஒருங்கிணைந்த மறுவாழ்வு மையம் அல்லது அது போலவே உள்ள மையங்களுக்கு அந்த குழந்தை அனுப்பப்பட ஆணையிடலாம் மற்றும் அந்த குழந்தையின் உள்கை பிணியாளர், சிகிச்சைக்கு வேண்டுறுத்தும் கால அளவிற்கு மட்டுமே, அத்தகைய விடுவிப்பு அமைய வேண்டும்.

இந்த சட்டப்பிரிவின் நோக்கங்களுக்காக :

**போதைக்கு அடிமையானவர்களுக்கான ஒருங்கிணைந்த மறுவாழ்வு மையம் என்பது**

(அ) நடுவணரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளிக்கும் உரிமை அமைச்சகத்தால் அல்லது அப்போதைக்குச் செயலாக்கத்தில் உள்ள ஏதேனுமொரு ஏனைய ஒத்ததான செயற் திட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட மது, போதைப் பொருளுக்கு (மருந்துகள்) அடிமையாதல், தடுப்பு மற்றும் சமூக பாதுகாப்பு சேவைக்கான மத்தியப்

பொருளுதவி செயற்திட்டம் என குறிப்பிடப்படும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதே பொருளைக் கொண்டதாக அமையப்பெறும்.

(ஆ) ‘மனநலம் குன்றிய நபர்’ என்பது

மனநலச் சட்டம், 1987 (14/1987), சட்டப்பிரிவு 2-இன் கூறு (i)-இல் தரப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

(இ) ‘மனநல மருத்துவனை’ என்பது அல்லது தனியார் மனநல மருத்துவமனை என்பது மன நலச்சட்டம் 1987 (14/1987)-இல் பிரிவு கூறு (q)-இல் தரப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டதாக அமையும்.

**பிரிவு - 94**

**அகவை (வயது) பற்றிய ஊக்கமும், தீர்மானித்தலும்**

(1) இச்சட்டத்தின் வகையங்கள் எதன்கீழும் சாட்சியம் அளிக்கும் நோக்கமின்றி வேறு எதற்காகவும் கொணரப்படும் நபரின் தோற்றத்தின் அடிப்படையில், குழு அல்லது குழுமத்திற்கு, மேற்கூறிய அந்த நபர் ஒரு குழந்தை என ஐயத்திற்கிடமின்றி வெளிப்படையாக அறியப்படும்போது, அந்தக்குழு அல்லது குழுமம் அந்த நபர் ஒரு குற்றத்தை முடிவு செய்ததைப் பதிவு செய்து கொண்டு அந்தக் குழந்தையைக் கூர்நோக்கி ஏறத்தாழ நெருங்கிய அளவில் குழந்தையின் வயதைப் பதிவு செய்து, மேற்கொண்டு வயது குறித்த உறுதியான முடிவு செய்யப்படும் வரை காத்திராது பிரிவு 14 அல்லது 36-இன் கீழ் விசாரணை மேற்கொண்டு தொடரலாம்.

(2) குழு அல்லது குழுமத்தின் முன்பாக கொணரப்பட்ட நபர் ஒரு குழந்தையா அல்லது குழந்தை இல்லையா என்பதில் குழு அல்லது குழுமத்திற்கு ஒரு வேளை ஐயம் எழுவதற்கு தகவான அடிப்படை விசாரணை இருக்கும்போது, நேர்விற்கேற்ப, அந்தக்குழு அல்லது குழுமம் கீழ்வரும் வகையில் சாட்சியத்தை நாடுவதன் மூலம் குழந்தையின் வயது குறித்த முடிவான நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

(i) பள்ளியிலிருந்து பெறப்பட்டப் பிறப்புச் சான்றிதழ் அல்லது பதின் நிலைப்பள்ளி (மெட்ரிகுலேஷன்) சான்றிதழ் அல்லது தொடர்பான கல்விசார் தேர்வுக் குழுமத்திடமிருந்து அதற்கு இணையான சான்றிதழ்

(ii) அது இயலாத போது ஒரு மாநகராட்சி அல்லது நகராட்சி அதிகார அமைப்பு அல்லது ஊராட்சியால் வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ்

(iii) மேற்கூறிய (i) மற்றும் (ii)-இல் குறிப்பிட்ட எதுவும் இல்லாத போது மட்டும், வயது குறித்த முடிவு என்பது எலும்பு வளர்ச்சி சோதனை அல்லது ஏதேனும்

ஒரு அண்மைக் காலத்திய வயது முடிவுறுத்தலுக்கான மருத்துவக் குழுச் சோதனை ஒன்றை, குழு அல்லது குழுமத்தின் ஆணையை ஏற்றுச் செயல்படலாம்.

**வரம்புரையாக :**

குழு அல்லது குழுமத்தின் ஆணையின்படி, வயது முடிவு செய்யக் கையாளும் சோதனையை, அத்தகைய ஆணை பிறப்பித்த நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குள்ளாக முடிவு செய்தல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காகக் குழு அல்லது குழுமம் முன்பாகக் கொணரப்படும் நபரின் வயதை, குழு அல்லது குழுமம் பதிவு செய்யும்போது, அதையே அந்த நபரின் உண்மை வயதாகக் கொள்ள வேண்டும்.

**பிரிவு - 95**

**குழந்தையை, அவருடைய வசிப்பிடத்திற்கு இடமாற்றம் செய்தல்**

(1) விசாரணையின்போது, குழந்தை ஒருவர், நேர்விற்கேற்ப, குழுமம் (அ) குழு பணிவரம்பெல்லைக்கு அப்பால் கொணரப்பட்டுள்ளார் எனக் கண்டறிந்தபோது, உரியதொரு விசாரணைக்குப் பின்பு, குழந்தையின் தேர்ந்த உயர் நலப்பற்றைக் கருத்திலிருத்தி, உள நிறைவு கொண்டால், அக்குழந்தையின் சொந்த மாவட்டத்தின் (குழந்தை நலக்) குழு (அ) (இளைஞர் நீதி) குழுமத்தின் முறைப்படி கலந்தாய்ந்து, இயன்ற அளவில், விரைந்து அக்குழந்தையை, அவரது தொடர்பான ஆவணங்களுடன், வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய நடைமுறையைக் கடைப்பிடித்து, கூறப்பட்ட அத்தகைய குழுமம் (அ) குழுவுக்கு இடமாற்றம் செய்து, ஆணையிட வேண்டும்.

**வரம்புரையாக :**

சட்டத்திற்கு முரண்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒரு குழந்தையை இடமாற்றம் செய்தல் என்பது, குழுமத்தால் விசாரணை முடிவுற்று, இறுதி ஆணை பிறப்பித்த பின்பு, அவ்வண்ணமே இடமாற்றம் செய்யப்பட வேண்டும்.

**மேலும் வரம்புரையாக**

குழந்தை, மாநிலங்களுக்கிடையே இடமாற்றம் செய்து வைக்கப்படுவதன் நோக்கில், வசதிப்படுமளவில், அந்தக் குழந்தையை அந்தக் குழந்தையின் மாநிலத்தின் தலைநகரில் குழு (அ) குழுமத்திடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(2) குழந்தையை இடமாற்றம் செய்வதற்கான இறுதி முடிவு ஒரு தடவை எடுத்த பின்பு, நேர்விற்கேற்ப குழுமம் (அ) குழு அந்த ஆணை வரப்பெற்றதிலிருந்து பதினைந்து நாட்களுக்குள்ளாக குழந்தையின் வழித்துணைக் காவலுடன் அனுப்ப ஆணையிட வேண்டும்.

**வரம்புரையாக**

ஒரு பெண்ணின் பாதுகாவலுக்கு, பெண் காவல்துறை பெண் அலுவலர் ஒருவரை உடன் செல்ல அனுப்ப வேண்டும்.

**மேலும் வரம்புரையாக**

சிறப்பு இளைஞர் காவல் பிரிவு கிடைக்கப் பெறவில்லையெனில், நேர்விற்கேற்ப, குழு (அ) குழுமம் குழந்தை ஒரு சிறுமக்கால அளவில் (தற்காலிகமாக) தங்க வைக்கப்பட்ட அந்த நிறுவனம் மாவட்டக் குழந்தை பாதுகாப்பு அலகிற்கு ஆணையிட்டு, பயணத்தின்போது குழந்தையுடன் வழித்துணைக் காவலுக்கு வழி வகை செய்தல் வேண்டும்.

(3) குழந்தைக்கான வழித்துணைக் காவலுக்குச் செல்லும் பணியாளருக்கு முன்கூட்டியே பயணப்படி பெறுமளவில் செலுத்துவதற்கான விதிகள், மாநில அரசால் வகுக்கப்பட வேண்டும்.

(4) குழு (அ) குழுமம், நேர்விற்கேற்ப, இடமாற்றத்தில் வைக்கப்பட்டக் குழந்தையைக் குழு (அ) குழுமம் பெற்றுக் கொண்டதை அடுத்து, இச்சட்டத்தின் வழி கண்ட, அத்தகைய அவருடைய பெற்றோரிடம் மீள ஒப்படைத்தலுக்காக அல்லது மறுவாழ்வுக்கான அல்லது சமூக மறு ஒருங்கிணைப்புக்காக நிர்வாகச் செயல்முறைகள் தொடர வேண்டும்.

**பிரிவு - 96**

**இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து குழந்தைகள் இல்லங்களுக்கிடையில் அல்லது சிறப்பில்லங்கள் அல்லது தகுநிலை வசதியகங்கள் அல்லது தக்கார்க்கிடையே குழந்தையை இடம் மாற்றுதல்**

(1) மாநில அரசு, நேர்விற்கேற்ப ஒரு குழு அல்லது குழுமத்தின் பரிந்துரையின் பேரில் இந்த சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருந்தாலும், எந்தவொரு நேரத்திலும், குழந்தையின் உயர் நலப்பற்றினைக் கருத்திலிருத்தி, அதன் தொடர்பானக் குழு அல்லது குழுமத்திற்கு முன்கூட்டியே தகவல் தெரிவித்து, மாநிலத்திற்குள், குழந்தைகள் இல்லங்களுக்கிடையே அல்லது சிறப்பில்லங்களுக்கிடையே அல்லது தகுநில வசதியகங்களுக்கு இடையே அல்லது தக்காருக்கிடையே குழந்தையை இடமாற்றம் செய்திட ஆணையிடலாம்.

**வரம்புரையாக**

ஒரு குழந்தையை அதே மாவட்டத்தில், அதேப் போன்ற குழந்தைகள் இல்லம் அல்லது வசதியகம் அல்லது நபர்களுக்கிடையேயான இடமாற்றம் செய்யும்போது, நேர்வுக்கேற்ப, அந்த மாவட்டத்தின் குழு அல்லது குழுமம் அத்தகைய ஆணையொன்றைப் பிறப்பிக்க அதிகாரம் உடையதாகும்.

(2) ஒரு மாநில அரசால் மற்றொரு மாநிலம் சார்ந்த நிறுவனத்திற்கு இடமாற்றம் செய்வதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டால், அதன் தொடர்பான மாநில அரசுடன் கலந்தாலோசனை செய்த பின்னரே செய்யப்பட வேண்டும்.

(3) ஒரு குழந்தைகள் இல்லம் (அ) ஒரு சிறப்பில்லம் குழந்தைத் தங்குவதற்கான ஒட்டுமொத்தக் கால வரம்பு, அத்தகைய இடமாற்றங்களால் அதிகரிக்கப்படலாகாது.

(4) சட்ட உட்பிரிவுகள் (1) மற்றும் (2)-இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள், எந்தப் பகுதிக்கு குழந்தை அனுப்பப்படுகிறாரோ, அந்தப் பகுதிக்குரிய, செயற்படுத்துவதற்குரியதாகக் கருதப்பட வேண்டும்.

**பிரிவு - 97**

**ஒரு நிறுவனத்திலிருந்து குழந்தை ஒன்று விடுவிக்கப்படுதல்**

(1) ஒரு குழந்தைகள் இல்லம் (அ) சிறப்பில்லத்தில் வைக்கப்பட்டக் குழந்தை ஒருவரை நேர்விற்கேற்ப, ஒரு நன்னடத்தை அலுவலர், சமூகப்பணியாளர் (அ) அரசு அலுவலர் (அ) தன்னார்வலர் (இ) அரசு சாரா அமைப்பினரின் அறிக்கையின் பேரில் (குழந்தை நலக்) குழு அல்லது (இளைஞர் நீதிக்) குழுமம் முழுமையாகவோ அல்லது தக்கதெனக் கருதும் அத்தகைய வரைக்கட்டுகளைச் (நிபந்தனைகளை) சுமத்தியோ விடுவிக்கலாம். குழந்தை அவரது பெற்றோருடன் (அ) காப்பாளருடன் வாழ அனுமதி அளிக்கலாம் அல்லது வழங்கிய ஆணையில் பெயர் குறிக்கப்பட்ட அதிகார உரிமை பெற்ற எந்தவொரு நபரின் மேற்பார்வையின் கீழ் வாழ அனுமதி அளிக்கலாம். குழந்தையைத் தமது பொறுப்பேற்றுக் கல்வி மற்றும் பயனுறு வணிகம் அல்லது வாழ்க்கைத் தொழிலுக்கானப் பயிற்சி அளிக்கவும், மறுவாழ்வு தந்து கவனித்துக் கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**வரம்புரையாக**

இச்சட்டப்பிரிவின் கீழாக ஒரு குழந்தை ஒரு வரைக்கட்டின் பேரில் விடுவிக்கப்பட்டிருந்தால் அல்லது குழந்தை எந்த நபரின் மேற்பார்வையின் கீழ் வைக்கப்பட்டிருந்ததோ, அந்த நபர் அத்தகைய வரைக்கட்டுகளை நிறைவேற்றத் தவறும் தறுவாயில், குழுமம் (அ) குழு, தேவையெனில், தொடர்பான இல்லம், அந்த குழந்தையை பொறுப்பேற்று திரும்பவும் வைக்கப்படச் செய்யலாம்.

(2) ஒரு தற்காலிக அடிப்படையில் குழந்தை விடுவிக்கப்பட்டிருந்தால் உட்பிரிவு (1)-ன் கீழ், அனுமதி வழங்கப் பெற்ற ஒரு குழந்தை, முன்னிலை வருகை இன்றி தவறும் நேரத்தில், தொடர்பான அந்த நிறுவனத்தில், அந்த கால இழப்புப் பகுதி அளவிற்கு இணையானக் கால அளவில் குழந்தைகள் இல்லத்தில் (அ) சிறப்பில்லத்தில் தொடர்ந்து நீட்டித்துத் தங்க வைக்கப்படப் பொறுப்பு உடையவர் ஆவார்.

**வரம்புரையாக**

சட்டத்திற்கு முரண்பட்ட ஒரு குழந்தை ஒருவர் உட்பிரிவு (1)-இன் கீழ் குறித்தவாறு, குழுமத்தால் விதிக்கப்பட்ட வரைக்கட்டுகளை (நிபந்தனைகளை) நிறைவேற்றத் தவறும் நேர்வில் எந்தப் பகுதி கால அளவில், அந்த நிறுவனத்தில் தங்க வைத்தல் பொறுப்புள்ளதோ, அத்தகைய தவறுதலின் விளைவால் எழும் இழப்பு, அதற்கு இணையான காலப்பகுதி, குழுமத்தால் தங்க வைக்க, கால நீட்டிப்புக்கு வகை செய்ய வேண்டும்.

**பிரிவு - 98**

**ஒரு நிறுவனத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள குழந்தை ஒருவரின் வாராமைக்கான விடுப்பு அனுமதி**

(1) குழு அல்லது குழுமம், நேர்விற்கேற்பப் பள்ளித் தேர்வு, உறவினர் திருமணம், உற்றார் உறவினர் இறப்பு, அல்லது விபத்து, பெற்றோர் நோய்வாய்ப்படுதல் போன்ற நெருக்கடியான சூழலில் அல்லது அதுபோன்ற தன்மையிலான அவசர நிலையில், மேற்பார்வையின் கீழ் ஒரே தடவையில் பயண கால அளவு நீங்கலாக பொதுவாக ஏழு நாட்களுக்கு மிகாமல், குழந்தை எவரையும் வாராமைக்கான விடுப்பில் அனுமதிக்கலாம்.

(2) குழந்தை இச்சட்டத்தின் கீழ் வழங்கிய அத்தகைய அனுமதியின் தொடர்ச்சியாக அவர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிறுவனத்திலிருந்து, அவர் வராமைக்கானப் பகுதிக்கால அளவு, குழந்தைகள் இல்லம் அல்லது சிறப்பில்லத்தில் அவர் இதில் எந்த நிறுவனத்தில் வைக்கப்படப் பொறுப்புள்ளதோ அந்தப் பகுதிக்கால அளவு மீண்டும் அவரை எடுத்துக் கொள்ளக் கடப்பாடு உடையதாகச் செய்யலாம்.

(3) குழந்தைக்கு வழங்கப்பட்ட விடுப்புக்காலம் முடிவுற்றப் பின்பு அல்லது குழந்தைக்கு விடுப்புக்கு அளிக்கப்பட்ட அனுமதி திரும்பப் பெறப்பட்டு அல்லது பறிக்கப்பட்ட பின்னர், குழந்தை ஒருவர் குழந்தைகள் இல்லம் அல்லது சிறப்பில்லத்திற்கு திரும்புவதற்கு மறுத்தால் அல்லது திரும்பி வரத் தவறினால், அக்குழந்தையை தொடர்பானக் குழந்தைகள் இல்லத்திற்கு மீண்டும் கொணரும் பொறுப்பை, அவசியமெனில் நேர்வுக்கேற்ப குழுமம் (அ) குழு எடுத்துக் கொள்ள வேண்டும்.

**வரம்புரையாக,**

சட்டத்திற்கு முரணானக் குழந்தை ஒருவர் விடுப்பில் அனுமதிக்கப்பட்டக் காலம் முடிவுற்றப் பின்பு அல்லது அந்த விடுப்புக்கான அனுமதி திரும்பப் பெறப்பட்டு அல்லது பறிக்கப்பட்டப் பின்பு அக்குழந்தைச் சிறப்பில்லத்திற்குத் திரும்பி வரத் தவறிய காரணத்தால், அக்குழந்தை இழக்கப்படும் கால அளவுக்கு இணையான ஒரு கால அளவிற்கு நீட்டிப்பு செய்யலாம்.

**பிரிவு - 99**

**அறிக்கைகளின் மந்தணம் இரகசியம் பேணப்படுதல் வேண்டும்**

(1) குழந்தை தொடர்பான அறிக்கைகள் அனைத்தும், குழு அல்லது குழுமத்தால் மந்தணம் இரகசியம் பேணப்படுதல் வேண்டும்.

**வரம்புரையாக**

குழு அல்லது குழுமம், நேர்விற்கேற்பத் தக்கதெனக் கருதினால் அந்தப் பதிவேட்டின் தகவுடை உள்ளடக்கத்தை, பிறிதொரு குழு அல்லது குழுமத்திற்கு அல்லது அந்தக் குழந்தைக்கு அல்லது அந்தக் குழந்தையின் பெற்றோர் அல்லது காப்பாளருக்குத் தெரிவிக்கலாம். அந்த அறிக்கையில் உறுதிபடக் கூறப்பட்டப் பொருட்பாடு குறித்தத் தொடர்பான சாட்சியம் உருவாக்க, அத்தகைய குழு அல்லது குழுமம் அல்லது அந்தக் குழந்தை அல்லது பெற்றோர் (அ) காப்பாளருக்கு வாய்ப்பு ஒன்று வழங்கலாம்.

(2) இந்த சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருந்தாலும், பாதிப்புக்குள்ளானக் குழந்தை மீதான வழக்கு பதிவேடுகள், ஆணைகள் மற்றும் தொடர்பான ஆவணங்கள் பாதிப்புக்குள்ளானவர் பெறுவதை மறுக்கலாகாது.

**பிரிவு - 100**

**நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு :**

இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன்படியாக உருவாக்கப்பட்ட எந்தவொரு விதி அல்லது ஒழுங்குமுறை விதிகளின் கீழாக, நேர்வுக்கேற்ப மைய அரசு (அ) மாநில அரசு இட்ட ஆணைகளின் கீழ் புரிந்த செய்கை எதற்காகவும் அல்லது செய்யக் கருதும் செய்கை எதற்காகவும் மைய அரசு (அ) மாநில அரசுக்கு எதிராக அதன் ஆணையின்படி செயற்பட்ட நபர் எவருக்கும் எதிராக உரிமையியல் வழக்கு (அ) குற்றவியல் வழக்கு அல்லது ஏனைய சட்டப்படியான நடவடிக்கை எதனையும் தொடர முடியாது.

**பிரிவு - 101**

**மேல்முறையீடுகள்**

(1) இந்த சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு குழு அல்லது குழுமத்தில் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையால் பாதிக்கப்பட்டதாகக் கருதும் எந்தவொரு நபரும், அத்தகையத் தீர்வாணை பகரப்பட்டத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக மாவட்ட நடுவரின் நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்ய வேண்டும்.

**வரம்புரையாக :**

அமர்வு நீதிமன்றம் (அ) மாவட்ட நடுவர் எதுவாக அல்லது எவராக இருப்பினும், குறித்த காலத்தில் மேல் முறையீட்டைத் தாக்கீது செய்வதிலிருந்து, மேல்

முறையீட்டாளர் தடுக்கப்பட்டதற்குப் போதிய காரணம் உள்ளது என்ற நிலையில் அது (அ) அவர் தெளிதேற்றம் பெறின், சொல்லப்பட்ட முப்பது நாட்களென்ற வரம்பு நிறைவெய்திய பின்னரும் மேல்முறையீட்டை விசாரணைக்கு எடுத்துச் செல்லலாம். அம்மேல்முறையீடு 30 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் பிரிவு 15-இன் கீழாக, ஒரு கொடுங் குற்றத்தில் முதனிலை மதிப்பீடு செய்தப் பின்பு, பிறப்பித்தக் குழுமத்தின் ஆணை ஒன்றிற்கு எதிராக, அமர்வு நீதிமன்றத்திற்கு முன்பு ஒரு மேல் முறையீடு செய்ய வேண்டும்; மற்றும் நீதிமன்றம் அந்த மேல் முறையீட்டைத் தீர்வு ஓர்பு செய்யும்போது பரிசீலனை செய்யும்போதே சொல்லப்பட்டப் பிரிவின் கீழ் ஆணை பிறப்பிக்கப்பட்டதில், குழுமத்தால் அடையப் பெறும் உதவி நீங்கலாக வேறு பிற பட்டறிவு (அனுபவம்) கொண்ட உளவியலார்கள் மற்றும் மருத்துவ விற்பன்னர்களின் உதவியைப் பெறலாம்.

(3) கீழ்வருவனவற்றிலிருந்து மேல் முறையீடு எழாது:-

(அ) பதினாறு ஆண்டுகள் அகவை (வயது) நிறைவெய்தியிருக்கும் (அ) அதற்கு மேற்பட்டுள்ள ஒரு குழந்தையால் கொடுங் குற்றம் நீங்கலாக வேறு ஒரு குற்றம் செய்யப்பட்டிருப்பதாகச் சாட்டப்பட்ட ஒரு குழந்தையின் பொருட்டுக் குழுமத்தால் செய்யப்பட்ட ஏதேனுமொரு விடுதலை ஆணை அல்லது

(ஆ) பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவையாகும் ஒரு குழந்தையாக ஒரு நபர் இருக்கவில்லை எனக் கண்டறிந்ததின் பேரில் ஒரு குழுவால் செய்யப்பட்ட ஏதேனுமொரு ஆணை

(4) இந்த சட்டப்பிரிவின் கீழாக, மேல் முறையீட்டில் பிறப்பிக்கப்பட்ட அமர்வு நீதிமன்றத்தின் ஏதேனுமொரு ஆணையிலிருந்து எந்தவொரு இரண்டாவது மேல் முறையீடும் அமையக்கூடாது.

(5) குழந்தைகள் நீதி மன்றத்தின் ஒரு ஆணையால் பாதிக்கப்பட்ட எவரேனுமொரு நபர், குற்ற விசாரணை முறைச்சட்டம், 1973 (2/1974)-இல் குறித்துரைத்த நடைமுறைப்படி உயர்நீதிமன்றத்தின் முன்பு ஒரு மேல்முறையீட்டை முறையே தாக்கல் செய்யலாம்.

**பிரிவு - 102**

***சீராய்வு :***

உயர்நீதிமன்றம், எந்தவொரு நேரத்திலும், தாமாக அல்லது இதன் பொருட்டு விண்ணப்பம் ஒன்று ஏதாவதொரு அத்தகைய ஆணையின் ஏதேனுமொரு குழு அல்லது குழுமம் அல்லது குழந்தைகள் நீதிமன்றத்தில் உள்ள ஏதேனுமொரு செயல் நடவடிக்கை அல்லது ஆணை ஒன்றைப் பிறப்பித்த நீதிமன்றத்தின் வழக்கு தொடர்பாகப் பதிவேடுகளைக் கோரிப் பெறலாம்; அவ்வாணைச் சட்டபூர்வத்

தன்மையும், பொருத்தப்பாடு கொண்டத் தன்மையும் கொண்டு பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்பதில் திருப்தி கொள்ளும் வகையாக மற்றும் அதன் தொடர்பாகத் தக்கதெனக் கருதும் வகையிலான அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கலாம்.

**வரம்புரையாக :**

உயர்நீதிமன்றம், நபர் ஒருவரின் பதில்களை ஒரு வாதத்திற்கு ஒத்த வகையில் வாய்ப்பளிக்காமல், அவருக்கு ஊறு விளைவிக்கத்தக்க வகையில் ஆணை ஒன்றைப் பிறப்பித்தலாகாது.

**பிரிவு - 103**

**விசாரணை, மேல்முறையீடுகள் மற்றும் சீராய்வு நடவடிக்கைகளின் நடைமுறை**

(1) இந்த சட்டத்தால் பிறவாறாக வெளிப்படையாக மற்றும் ஏனைய வகையில் வகை செய்யப்பட்டாலன்றி, இந்த சட்டத்தின் வகையங்கள் எதன் கீழும் ஒரு குழு அல்லது குழுமம் ஏதேனுமொரு விசாரணை செய்யும்போது வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்; மற்றும் அதற்கு உட்பட்டு சுருக்க விசாரணை வழக்குகளின் (அழைப்பாணை வழக்குகள்) நீதித்தல விசாரணையின் பொருட்டு குற்ற விசாரணை முறைச்சட்டம் 1973 (2/1974)-இல் வரையறுக்கப்பட்ட நடைமுறையை இயன்ற அளவில் செயல்முறை சார்ந்துப் பின்பற்ற வேண்டும்.

(2) இச்சட்டத்தால் அல்லது இச்சட்டத்தின்கீழ் பிறவாறாக வெளிப்படையாக வகை செய்யப்பட்டாலன்றி, இச்சட்டத்தின் கீழ் மேல்முறையீடுகள் அல்லது சீராய்வு நடவடிக்கைகளில் இயன்றவரை குற்ற விசாரணை முறைச்சட்டம் 1973 (2/1974)-இன் வகையங்களில் உள்ளவாறு கடைப்பிடிக்க வேண்டும்.

**பிரிவு - 104**

**குழு அல்லது குழுமம் தாம் முறைசெய்து பிறப்பித்த ஆணைகளைத் தாமே திருத்தம் செய்வதற்கான அதிகாரம் :**

(1) இச்சட்டத்தில் அடங்கி உள்ள மேல்முறையீடு மற்றும் சீராய்வுக்கான வகையங்களுக்குப் பாதகம் இல்லாமல் குழு அல்லது குழுமம் மனு ஒன்றைப் பெறுவதன் மூலம், குழந்தை ஒருவரை, எந்த நிறுவனத்திற்கு அனுப்பப்பட வேண்டும் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஒரு குழந்தை நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாகப் பிறப்பிக்கப்பட்ட எந்தவொரு ஆணையையும் திருத்தம் செய்யலாம்.

**வரம்புரையாக :**

ஏதேனும் அத்தகைய ஆணைகளைத் திருத்தம் செய்வதற்கான விசாரணையின்போது, குற்றவியல் முதன்மை நடுவரைத் தலைவராகக் கொண்டு (இளைஞர் நீதிக்) குழுமம் குறைந்தது இரு உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும். மற்றும் (குழந்தைநலக்) குழு குறைந்தது மூன்று உறுப்பினர்களையும் கொண்டிருக்க வேண்டும். மற்றும் பகரப்பட்ட ஆணைகள் திருத்தம் செய்யப்படுவதற்கு முன்பாக, தொடர்பான அனைத்து நபர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ சார்பாளர்களின் கருத்தை, நேர்விற்கேற்ப குழு அல்லது குழுமம் எதுவாக இருப்பினும் கேட்கப்பட வேண்டும்.

(2) குழுவால் (அ) குழுமத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளில் கண்ட எழுத்துப் பிழைகள் அல்லது ஏதேனுமொரு எதிர்பாராத சூழலால் விளையும் தற்செயலான தவறுகள் அல்லது விடுகை (விடுபடுதல்) ஆகியவற்றை நேர்விற்கேற்ப குழு அல்லது குழுமத்தால் எந்த நேரத்திலும் தாமாகவோ அல்லது அதன் பொருட்டு பெற்றுக் கொண்ட மனுவின் பேரிலோ சரி செய்யப்படலாம்.

**பிரிவு - 105**

**இளைஞர் நீதி நிதியம் :**

(1) இந்தச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் குழந்தையின் நலன் மற்றும் மறுவாழ்விற்காக மாநில அரசு, தக்கதெனக் கருதும் அத்தகையதொருப் பெயரின் கீழாக ஒரு நிதியத்தைத் தோற்றுவிக்கலாம்.

(2) எந்தவொரு நபரோ அல்லது ஒரு நிறுவனமோ வழங்கும் அத்தகைய தம் விருப்ப நன்கொடைகள், பங்களிப்புகள் அல்லது உறுப்பினருக்கானக் கட்டணத் தொகை ஆகியவற்றை, அந்த நிதியத்தின் கணக்கில் வரவு வைக்க வேண்டும்.

(3) உட்பிரிவு (1)-இன் கீழ் தோற்றுவிக்கப்பட்ட நிதியம் குறித்துரைக்கப்பட்டதற்கிணங்க அத்தகைய நோக்கங்களுக்காக நிறைவேற்றும் பொறுப்பில் உள்ள, மாநில அரசின் துறையால், அத்தகைய வழிவகையில் நிர்வகிக்கப்படும்.

**பிரிவு - 106**

**மாநிலக் குழந்தை பாதுகாப்பு சங்கமும், மாவட்டக் குழந்தை பாதுகாப்பு பிரிவும்**

ஒவ்வொரு மாநில அரசும் ஒரு குழந்தைப் பாதுகாப்புச் சங்கத்தையும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு குழந்தைப் பாதுகாப்பு அலகையும் ஏற்படுத்த வேண்டும். அது அரசால் பணியமர்த்தப்படும் அத்தகைய அதிகாரிகள் மற்றும் ஏனைய பணியாளர்களையும் அது உடையதாயிருக்கும். இச்சட்டத்தை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்தும் நோக்கில், குழந்தைகள் தொடர்பானப் பொருட்பாடுகளைக் கருத்தில் கொள்ளும் இச்சட்டத்தின் கீழ் நிறுவிப் பேணப்படும் நிறுவனங்கள்,

குழந்தைகள் குறித்தத் தகுதிறம் வாய்ந்த அதிகார அமைப்புகளின் அறிவிக்கை மற்றும் தொடர்பானப் பொது அலுவலர் மற்றும் அவர்கள் சாராத அலுவலர்களின் ஒருங்கிணைப்புடன் மறுவாழ்வு மற்றும் ஒருங்கிணைப்பு மற்றும் வகுத்துரைக்கப்பட்ட ஏனைய செய் கடமைகளின் நிறைவேற்றுகையும் இதில் உள்ளடங்கும்.

**பிரிவு - 107**

**குழந்தை நலக் காவல் அலுவலர் மற்றும் இளைஞர் சிறப்புக் காவல் பிரிவு**

(1) காவல்துறை, குழந்தை நலக் காவல் அலுவலகம் மற்றும் இளைஞர் நலக் காவற்படைத் தனிப்பிரிவு, தன்னார்வ (அ) அரசு சாரா அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து குழந்தைகள் பாதிப்புக்கு உட்பட்டவர்கள் என்றாலோ அல்லது குற்றம் இழைத்தவர்களாக இருந்தாலோ தனிப்பட்ட வகையில் கையாள ஏற்றதொரு உள நாட்டம், தக்கதானப் பயிற்சி மற்றும் புதிய சூழலில் புத்தாக்கத்திறன் கொண்ட உதவி சார்பு ஆய்வாளர் பதவி நிலைக்கு குறையாத ஒரு அலுவலர், காவல் நிலையம் ஒவ்வொன்றிலும் குழந்தை நலக் காவல் அலுவலராக பணி நியமனம் செய்யப்படலாம்.

(2) குழந்தைகளைப் பொறுத்த வரையிலான அனைத்து காவல் செயற் கடமைகளையும் ஒருங்கிணைக்க ஒரு துணைக் காவல் கண்காணிப்பாளர் அல்லது அதற்கு மேற்பட்டப் பதவி நிலைக்கு குறையாத ஒரு காவல் அலுவலரால் தலைமை வகிக்கப்படும் மற்றும் சட்ட உட்பிரிவு (1)-இன் கீழ் பணி அமர்த்தப்படும். காவல் அலுவலர்கள் அனைவரையும் மற்றும் குழந்தை நலன் குறித்த களப்பணியில் பட்டறிவுள்ள இரு சமூகத் தொண்டர்களையும், அதில் ஒருவர் பெண்ணாக இருக்க வேண்டும் என்ற அளவில் ஒவ்வொரு மாவட்டம் மற்றும் மாநகரத்திற்கும் இளைஞர் நல காவற்படைத் தனிப்பிரிவை மாநில அரசு ஏற்படுத்த வேண்டும்.

(3) இளைஞர் சிறப்புக் காவற்பிரிவுகளின் அனைத்து காவல் அலுவலர்களும், அவர்களின் செயற்கடமைகளைத் திறமுறச் செய்யும் வகையில் அவர்களை இயல்விக்க, குறிப்பாக குழந்தை நலக்காவல் அலுவலராகப் பணியிலமர்த்தும் கட்டத்தில் சிறப்பானப் பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

(4) இளைஞர் சிறப்பு காவல் பிரிவு என்பது குழந்தைகளைத் கையாளும் இருப்புப் பாதை காவல் துறையினரையும் உள்ளடக்கியது ஆகும்.

**பிரிவு - 108**

**இச்சட்டத்தின் வகையங்கள் மீதான பொது விழிப்புணர்வு :**

நடுவணரசு மற்றும் ஒவ்வொரு மாநில அரசும் கீழ்வருவனபற்றி உறுதி செய்ய, தேவைப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(அ) இச்சட்டத்தின் அத்தகைய வகையங்களை பொதுமக்கள், குழந்தைகள் அவர்களின் பெற்றோர் (அ) காப்பாளர்களுக்கு இச்சட்டத்தின் வகையங்கள், ஒலி மற்றும் ஒளி பரப்பு வானொலி ஆகிய ஊடகங்கள் மூலமும், அச்சு ஊடகம் மூலமும் அறிந்து கொள்ளும்படி முறையானக் கால இடைவெளிகளுக்கிடையேப் பரந்தகன்ற விளம்பரம் அளிக்கப்பட வேண்டும்.

(ஆ) இச்சட்டத்தின் வகையங்களை நடைமுறைப்படுத்துதல் சார்பானப் பொருட்பாடுகள் குறித்து நடுவணரசின் அலுவலர்கள், மாநில அரசின் அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய ஏனைய நபர்களுக்குக் காலமுறையிலானப் பயிற்சி புகட்டப்பட வேண்டும்.

**பிரிவு - 109**

**சட்டத்தின் அமலாக்கத்தைக் கண்காணித்தல்**

(1) குழந்தை உரிமைகள் பாதுகாப்பிற்கான ஆணையங்கள் சட்டம், 2005 (4/2005)ல் சட்டப்பிரிவு (3)-இன் கீழாக ஏற்படுத்தப்பட்டக் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு தேசிய ஆணையம் அல்லது நேர்விற்கேற்ப, பிரிவு 17-இன் கீழாக ஏற்படுத்தப்பட்ட மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (இதன் பின்னர் தேசிய ஆணையம் (அ) மாநில ஆணையம் எனக் குறிப்பிடப் பெறும்) சொல்லப்பட்ட இச்சட்டத்தின் கீழாக ஒப்படைக்கப்பட்டுள்ளச் செயற்கடமைகளுடன், கூடுதலாக வகுக்கப்பட்டவாறு அத்தகைய வகையில் இச்சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுதலையும் கண்காணிக்க வேண்டும்.

(2) தேசிய ஆணையம் (அ) மாநில ஆணையம், நேர்விற்கேற்ப

இந்த சட்டத்தின் கீழாக ஏதேனுமொரு குற்றம் தொடர்பான ஏதேனுமொரு பொருட்பாட்டில் விசாரணை மேற்கொள்ளும்போது, குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005 (4/2006)இன் கீழாக தேசிய ஆணையம் / மாநில ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதே அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.

(3) தேசிய ஆணையம் (அ) மாநில ஆணையம், நேர்விற்கேற்பக் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005 (4/2006)இன் சட்டப் பிரிவு 16-இல் குறிப்பிடப்படும் ஆண்டறிக்கையில், இச்சட்டப்பிரிவின் கீழ் சுட்டியவாறானச் செயல் நடவடிக்கைகளையும் உள்ளடக்க வேண்டும்.

**பிரிவு - 110**

**விதிகளை வகுப்பதற்கான அதிகாரம்**

(1) அரசு, இச்சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றுவதற்கான விதிகளை அதிகார முறை அரசுப் பதிவிதழின் அறிவிக்கைவாயிலாகச் செய்யலாம்.

**வரம்புரையாக :**

மாநில அரசு, எதன் தொடர்பாக விதிகளை வகுக்க விழைகிறதோ, அந்த பொருட்பாடுகள் (விடயங்கள்) எல்லாவற்றிற்கும் அல்லது அந்த பொருட்பாடுகளில் ஏதேனும் ஒன்றின் தொடர்பாக 'மாதிரி விதிகள்' இயற்றலாம். அந்த பொருட்பாடு தொடர்பாக மாநில அரசு விதிகள் எதுவும் இயற்றும்போது, விதிகள் இயற்றப்படும் வரை, நடுவணரசு வகுத்தளித்த மாதிரி விதிகள் அவசியமான மாறுதலுடன் பொருந்துவதாக அமையும். மாநில அரசு, அவ்வாறு விதிகள் இயற்றும்போது, நடுவணரசு இயற்றிய மாதிரி விதிகளுக்கு உடன்பட்டு உறுதி செய்து அது நிலைப்பாடாக அமையும்.

(2) மேற்கூறப்பட்ட அதிகாரங்களின் பொதுத்தன்மைக்கு ஊறு இன்றி குறிப்பாக, அத்தகைய விதிகள், கீழ்வரும் அனைத்து விடயங்கள் அல்லது ஏதேனும் ஒன்றுக்கு வகை செய்யலாம், அதாவது:

(I) சட்டப்பிரிவு 2-இன் உட்பிரிவு (14)-இன் துணைப்பிரிவு (vii)-இன் கீழ் காணாமல் போனக் குழந்தை, தப்பி ஓடியக் குழந்தை (அ) அக்குழந்தையின் பெற்றோரைக் கண்டுபிடிக்க இயலாத நேர்வில், விசாரணை முறை;

(II) சட்டப்பிரிவு 2-இன் கூறு (17)-இன் கீழ் ஒரு குழந்தைகள் இல்லத்துடன் இணைந்தக் குழந்தை நல அலுவலர் பொறுப்புகள்;

(III) சட்டப்பிரிவு 4 உட்பிரிவு (2)-இன் கீழாகக் (இளைஞர் நீதிக்) குழும உறுப்பினர்களின் தகுதிப்பாடுகள்;

(IV) சட்டப்பிரிவு 4 உட்பிரிவு (5)-இன் கீழாக குழுமத்தின் அனைத்து உறுப்பினர்கள் அனைவரும் பதவியில் அமர்த்துவதற்கான அடிப்படைப் பயிற்சியும், கூர்விழிப்புணர்வுப் பயிற்சியும் வழங்குதல்;

(V) சட்டப்பிரிவு-4 உட்பிரிவு (6)-இன் கீழ் குழும உறுப்பினர்களின் பதவிக் காலம் மற்றும் அத்தகைய உறுப்பினர்கள், பதவி துறக்கும் வகைமுறை;

(VI) சட்டப்பிரிவு-7, உட்பிரிவு (1)-இன் கீழ் குழுமத்தின் தொடர் கூட்டங்களுக்கான காலம் குறித்தல் மற்றும் அதன் கூட்டத் தொடர்களின் அலுவலர் நடைமுறைகளின் விதிகள்;

(VII) சட்டப்பிரிவு-8, உட்பிரிவு (3) கூறு (ஈ)-இன் கீழ் ஒருபொருள் கோள் விளக்குநர் அல்லது மொழி பெயர்ப்பாளருக்கான தகுதிகள், பட்டறிவு (அனுபவம்) மற்றும் செலுத்தக்கூடிய கட்டணத் தொகை;

(VIII) சட்டப்பிரிவு-8, உட்பிரிவு (3) கூறு (க)-இன் கீழ் குழுமத்தின் ஏதேனுமொரு பிற செயற்பாடு குறித்து;

(IX) சட்டப்பிரிவு-10, உட்பிரிவு (2)-இன் கீழ் சட்டத்திற்கு முரணானக் குழந்தை எனச் சாட்டுரைக்கப்பட்டபோது, எவர் மூலம் குழுமத்தில்

முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என்பதையும், குழந்தையை, சிறார் கூர்நோக்கில்லம் மூலம் அல்லது பாதுகாப்பிடத்திற்கு எந்த வகையில் அனுப்பி வைத்தல் வேண்டும் என்பது பற்றியும்;

(X) நபர் ஒருவர் எத்தகைய வகை முறையில் கையகப்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றியும் காவல்துறைப் பொறுப்பு அலுவலர் அந்த நபர் பிணையில் விடப்படாதபோது, பிரிவு 12, உட்பிரிவு (2)-இன் கீழ் ஒருக் குழுமத்தின் முன்பாகக் கொணரும்வரை கூர் நோக்கில்லத்தில் நிறுத்தி வைக்கப்படலாம் என்பது பற்றியும்;

(XI) குழுமத்தில், முடிவுறா வழக்குகள் பற்றியத் தகவல், பிரிவு 16, உட்பிரிவு (3)-ன் கீழ் காலாண்டுக்கொருமுறை நீதித்துறைக் குற்றவியல் முதன்மை நடுவர் அல்லது தலைமைப் பெருநகர் குற்றவியல் நடுவர் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு காலாண்டு அடிப்படையில் அளிப்பதற்கான உரியதொரு படிவம்;

(XII) சட்டப்பிரிவு 20, உட்பிரிவு (2)-இன் கீழ் கண்காணிக்கும் நடைமுறைகள் மற்றும் கண்காணிக்கும் அதிகார அமைப்புகளின் பட்டியல்;

(XIII) சட்டப்பிரிவு 24-இன், உட்பிரிவு (2)-இன் கீழ் குழுமம் (அ) காவல்துறை (அ) நீதிமன்றம், குழந்தைகள் தொடர்பான பதிவேடுகளை எவ்வகையில் அழித்து பயனற்றதாக்கலாம் என்பது குறித்த விதியாக்கம்;

(XIV) சட்டப்பிரிவு 27, உட்பிரிவு (5)-இன் கீழ் குழந்தை நலக்குழுவின் உறுப்பினர் தகுதிகள் குறித்து;

(XV) சட்டப்பிரிவு 28, உட்பிரிவு (1)-இன் கீழாக குழந்தை நலக் குழுவின் அலுவல்களைச் செய்வதன் பொருட்டான விதிகள் மற்றும் நடைமுறைகள்;

(XVI) சட்டப்பிரிவு 30, கூறு (x)-இன் கீழ் கைவிடப்பட்ட மற்றும் காணாமற் போன குழந்தைகளை மீட்டு அவர்களின் குடும்பத்தாரிடம் மீண்டும் ஒப்படைத்தலுக்கான நடைமுறை;

(XVII) சட்டப்பிரிவு 31, உட்பிரிவு (2)-இன் கீழாக குழுவிடம் குழந்தையை அறிக்கையைச் சமர்ப்பிக்கும் முறை, குழந்தைகள் இல்லம் தகுநிலை வசதியகம் அல்லது தக்காரிடம் அடையுமாறு ஒப்படைக்கும் முறை;

(XVIII) சட்டப்பிரிவு 36, உட்பிரிவு (1)-இன் கீழ் குழந்தை நலக்குழு மேற்கொள்ளும் விசாரணை முறை சார்ந்து;

(XIX) ஆறு வயதிற்கு கீழே உள்ள குழந்தையாக இருப்பின், ஒரு தனிச்சிறப்பு தத்தெடுப்பு முகமைக்கு, குழந்தைகள் இல்லம் (அ) தகுநிலை வசதியகம் (ஆ) தனி நபர் (அ) வளர்ப்பு பேணுகை குடும்பத்திடம் ஒரு குழந்தை அனுப்பப்படும் வழிவகை குறித்து.

குழந்தை இல்லம்: ஒரு குழந்தை இல்லம் (அ) தகுநிலை வசதியகம் (அ) தனிநபர் (ஆ) வளர்ப்பு பேணுகை குடும்பத்தில் தங்க வைக்கப்பட்டிருக்கும் இடச் சுற்றுச்சார்புநிலை என்பது.

சட்டப்பிரிவு (36)-இன் உட்பிரிவு (3)-இன் கீழாக, குழுவால் மேலாய்வு செய்யும் முறையை உள்ளடக்கிய குழந்தைக்கான ஏற்புடைய மறுவாழ்வு நெறிமுறைகளைக் கண்டறியும் வகையில்;

(XX) முடிவுறா நிலையிலுள்ள வழக்குகளை, பிரிவு 36-இன் உட்பிரிவு (4)-இன் கீழாக மாவட்ட நடுவர் மீளாய்வு மேற்கொள்ள, குழுமத்தால் ஒரு காலாண்டு அறிக்கையை எத்தகைய வழியில் சமர்ப்பிக்க வேண்டும் என்பது குறித்து;

(XXI) சட்டப்பிரிவு-37, உட்பிரிவு (2) கூறு (iii)-இன் கீழாக குழுவின் ஏதேனும் ஒரு செயற்பாடு தொடர்பாக இடப்படும் ஏதாவதொரு பிற ஆணை சார்ந்து;

(XXII) சட்டப்பிரிவு-38 உட்பிரிவு (5)-இன் கீழாக சட்டப்படியான தத்தெடுப்புக்கு இருக்கும் அறிவிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை, முடிவுறா நிலையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை தொடர்பாக ஒவ்வொரு திங்களும், குழுவால் மாநில முகமை மற்றும் அதிகார ஆயத்திற்கு முறையாக தகவல் அளித்தல்;

(XXIII) சட்டப்பிரிவு-41, உட்பிரிவு (1)-இன் கீழாக இந்த சட்டத்தின் கீழ் அனைத்து நிறுவனங்களும் பதிவு செய்ய வேண்டிய முறை;

(XXIV) சட்டப்பிரிவு 41, உட்பிரிவு (7)-இன் கீழ் ஒரு நிறுவனம், மறுவாழ்வு மற்றும் மறு ஒருங்கிணைப்பு பணிகளை செய்யத்தவறும் நிலையில், அந்த நிறுவனத்தின் பதிவை நீக்கம் (இரத்து) செய்வதற்கான நடைமுறை அல்லது பதிவைச் செய்யாமல் நிறுத்தி வைப்பதற்கான நடைமுறை;

(XXV) சட்டப்பிரிவு-43, உட்பிரிவு (3)-இன் கீழ் மாதம்தோறும் திறந்தவெளிப் புகலிடம் மாவட்டக் குழந்தை பாதுகாப்பு அலகு மற்றும் குழந்தை நலக்குழுவிற்குத் தகவல் தெரிவிக்கும் முறை;

(XXVI) சட்டப்பிரிவு-44, உட்பிரிவு (1)-இன் கீழ் குழு வளர்ப்புப் பராமரிப்பு உள்ளிட்ட தனி வளர்ப்பு பராமரிப்பில் குழந்தைகளைத் தங்க வைப்பதற்கான நடைமுறை;

(XXVII) சட்டப்பிரிவு-44, உட்பிரிவு (4)-இன் கீழ் வளர்ப்புப் பராமரிப்பில் உள்ள குழந்தைகள் குறித்து ஆய்வு நடத்தும் வழிமுறை;

(XXVIII) சட்டப்பிரிவு-44, உட்பிரிவு (6)-இன் கீழாகக் குழந்தைக்குக் கல்வி, உடல் நலம், மற்றும் ஊட்டச் சத்துணவை வளர்ப்புக் குடும்பம் வழங்கும் முறை;

(XXIX) சட்டப்பிரிவு-44, உட்பிரிவு (7)-இன் கீழ் குழந்தைகளுக்கு எத்தகைய நடைமுறை மற்றும் அளவீட்டு முறையில் வளர்ப்புப் பராமரிப்புப் பணிகள் வழங்கப்பட வேண்டும்.

(XXX) சட்டப்பிரிவு-44, உட்பிரிவு (8)-இன் கீழ் குழந்தைகள் நன்முறையில், நலன் பேணப்படுகிறார்களா என்பதைக் குழு சரிபார்த்து சோதனை செய்வதற்கானப் படிவம்.

(XXXI) சட்டப்பிரிவு-45, உட்பிரிவு (1)-இன் கீழாக தனி ஒருவரிடமிருந்து தனி ஒருவரின் ஏற்பாய்வு, குழு ஆதரிப்பு, அல்லது சமுதாயம் சார்ந்த ஆதரிப்பு போன்றக் குழந்தையின் ஏற்பாதரவுத் திட்டத்தின், வெவ்வேறு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான நோக்கம் குறித்து;

(XXXII) சட்டப்பிரிவு-45, உட்பிரிவு (3)-இன் கீழான ஏற்பாதரவுத் திட்டத்தின் கால அளவு;

(XXXIII) சட்டப்பிரிவு 46-இன் கீழாக, பதினெட்டு வயது நிறைவெய்தியதின் பேரில், நிறுவனத்தின் பராமரிப்பிலிருந்து வெளிச் செல்லும் எவரேனும் ஒரு குழந்தைக்கு ஒரே தடவையிலான நிதியுதவி வழங்குவதற்கான முறை;

(XXXIV) சட்டத்திற்கு முரண்பட்டநிலை எனக் சாட்டுரைக்கப்பட்ட குழந்தை ஒருவரின் மறுவாழ்வு மற்றும் சமூக மறுஒருங்கிணைப்பு தொடர்பாக சிறார் கூர்நோக்கில்லங்கள் ஆற்றும் பணிகள், அதன் தரநிலை, பல்வகைப்பணி செயல்முறைகள் ஆகியவற்றை மேலாண்மை செய்தல் மற்றும் கண்காணித்தல்;

(XXXV) சட்டப்பிரிவு 48-இன் உட்பிரிவு (2) மற்றும் (3)-இன் கீழாக, சிறப்பில்லங்களால் அளிக்கப் பெறும் பணித்தரநிலை மற்றும் வெவ்வேறான சேவைகள் மற்றும் அவற்றின் மேலாண்மை மற்றும் கண்காணிப்புப் பிரிவு-47, உட்பிரிவு (3)-இன் கீழாக எந்த சூழ்நிலைகளில் கூர்நோக்கில்லத்தைப் பதிவு செய்யப்படலாம் அல்லது பதிவு செய்ததைத் திரும்ப பெறப்படலாம் என்பது குறித்து;

(XXXVI) சட்டப்பிரிவு-50, உட்பிரிவு (3)-இன் கீழ் ஒவ்வொரு குழந்தைக்கும் தனி ஒருவர் பராமரிப்புத் திட்டங்களின் அடிப்படையில் குழந்தைகள் இல்லங்களால் வழங்கப்பெறும் பணித்தன்மைகள் மற்றும் தர நிர்ணய நிலையைக் கண்காணிப்பு செய்தல் மற்றும் மேலாண்மை செய்தல்.

(XXXVII) சட்டப்பிரிவு 51-இன் உட்பிரிவு (1)-இன் கீழாக ஒவ்வொரு குழந்தைக்கும் தனிப்பட்ட பராமரிப்பு மேற்கொள்ள, அடிப்படையில் குழந்தைகள் இல்லங்களால் வழங்கப் பெறும் பணித்தன்மைகள் மற்றும் தர நிர்ணய நிலையைக் கண்காணிப்பு செய்தல் மற்றும் மேலாண்மை செய்தல்.

(XXXVIII) சட்டப்பிரிவு 52, உட்பிரிவு (1)-இன் கீழாக குழுமம் (அ) குழுவால் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்காக நபர் ஒருவர் தற்காலிகமாக குழந்தை ஒருவரைப் பெற்றுக் கொள்ள, பராமரிக்க, பாதுகாக்க மற்றும் அவரை வழி நடத்தத் தகுதி ஆனவர் என்பதை ஒப்புதல் உறுதி வழங்குவதற்காக,

(அங்கீகரிப்பதற்கான) நம்புவதற்கான ஆதாரச் சான்றுறுதியின் மெய்ப்பிப்பு சார்ந்த சரிபார்ப்பு முறை குறித்து;

(XXXIX) சட்டப்பிரிவு-53, உட்பிரிவு (1)-இன் கீழாகக் குழந்தையின் அடிப்படை தேவைகளான உணவு, உறையுள், உடை மற்றும் மருத்துவப் பண்டுவம் போன்ற மறுவாழ்வு மற்றும் மறு ஒருங்கிணைப்புப் போன்றவற்றின் தரநிலைக்காக இச்சட்டத்தின் கீழ் ஒரு நிறுவனத்தால் வழங்கப்பெறும் பணிக்கடமைகள் எத்தகைய முறையில் வழங்கப்பட வேண்டும் என்பது குறித்து.

(XL) சட்டப்பிரிவு-53, உட்பிரிவு (2)-இன் கீழ் நிறுவனத்தை நிர்வாகம் செய்யவும் மற்றும் குழந்தையின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், ஒவ்வொரு நிறுவனத்தின் நிருவாக மேலாண்மைக் குழுவை எத்தகைய முறையில் ஏற்படுத்த வேண்டும் என்பது குறித்தும்.

(XLI) சட்டப்பிரிவு-53, உட்பிரிவு (3)-இன் கீழ் குழந்தைகளின் குழுக்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள்;

(XLII) சட்டப்பிரிவு 54, உட்பிரிவு (1)-இன் கீழ் மாநிலம் மற்றும் மாவட்டத்திற்காகப் பதிவுச் செய்த நிறுவனங்கள் அல்லது தகுதியானது எனத் தகவேற்பளிக்கப்பட்ட (அங்கீகரிக்கப்பட்ட) அனைத்து நிறுவனங்களுக்கும் ஆய்வுக் குழுவை நியமனம் செய்வது குறித்தும்.

(XLIII) சட்டப்பிரிவு 55, உட்பிரிவு (1)-இன் கீழ் நடுவணரசு (அ) மாநில அரசு எந்த முறையில் குழுமம், குழு, சிறார்நல சிறப்புக் காவற்பிரிவு, பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், தகுநிலை வசதியகங்கள் என தகவேற்பளிப்பு செய்யப்பட்ட (அங்கீகரிக்கப்பட்ட) நிறுவனங்கள் மற்றும் நபர்கள் எந்த வகையில் மதிப்பீடு செய்யலாம் என்பது இதில் உள்ளடங்கும்.

(XLIV) சட்டப்பிரிவு-66, உட்பிரிவு (2)-இன் கீழாக குழந்தைகள் சட்டப்படியான தத்தெடுப்புக்கு உரிமையாக உள்ளது என்பது குறித்த விவரங்களை, நிறுவனங்கள் எந்த வகையில் சிறப்புத் தத்தெடுப்பு முகமைக்கு வழங்க வேண்டும் என்பது பற்றி

(XLV) சட்டப்பிரிவு 68-இன் உட்கூறு (உ)-இன்கீழ் அதிகார ஆயத்தின் ஏதேனுமொரு பிற அலுவல் குறித்து.

(XLVI) சட்டப்பிரிவு 69-இன் உட்பிரிவு (2)-இன் கீழ் அதிகார ஆயத்திற்கு, குழுவிற்கான உறுப்பினர் தேர்வு அல்லது நியமனத்திற்கான அளவீடு மற்றும் அவர்களின் பதவி வரைக்காலம் அத்துடன் கூட அவர்களின் நியமன வரையறைகளும், வரைக்கட்டுகளும், (நிபந்தனைகளும்), குறித்து.

(XLVII) சட்டப்பிரிவு 69-இன் உட்பிரிவு (4)-இன் கீழ், அதிகார ஆயத்தின் செயலாக்க விரைவுக்குழு கூடும் வழிமுறை;

(XLVIII) சட்டப்பிரிவு 71-இன் உட்பிரிவு (1)-இன் கீழ் அதிகார ஆயம் நடுவணரசுக்கு ஆண்டறிக்கையைச் சமர்ப்பிக்கும் வகைமுறை;

(XLIX) சட்டப்பிரிவு 72-இன் உட்பிரிவு (2)-இன் கீழ் அதிகார ஆயத்தின் செயற்பணிகள்;

(L) சட்டப்பிரிவு 73-இன் உட்பிரிவு (1)-இன் கீழ் அதிகார ஆயம், முறையான கணக்குகள் மற்றும் ஏனையத் தொடர்பானப் பதிவேடுகளைப் பேணுதல், ஆண்டு வரவு செலவுக் கணக்குகளின் விவர அறிக்கையைத் தயாரித்தல் போன்றவற்றின் வழிமுறை;

(L) சட்டப்பிரிவு 92-இன் கீழ், நீண்ட கால மருத்துவப் பண்டுவம் தேவைப்படும் ஒரு பிணியால் அவதியுறுவதாக அறியப்பெறும் குழந்தையின் மருத்துவத்திற்காக அல்லது ஒரு தகுநிலை வசதியகத்தின் மருத்துவப் பண்டுவம் பயன்தரும் என்றவாறு உடல் (அ) உள்ளத்தைப் பாதித்து, அதற்கு அவசியம் என குழு (அ) குழுமத்தால் கருதப்பெறும் கால வரையறை;

(LII) சட்டப்பிரிவு 95-இன் உட்பிரிவு (1)-இன் கீழ் குழந்தையை மாற்றுவதற்கான நடைமுறை;

(LIII) சட்டப்பிரிவு 95-இன் உட்பிரிவு (3)-இன் கீழாக பயண வழித்துணைக் காவலருக்கான பயணப்படி வழங்குவதற்கான வகையம்;

(LIV) சட்டப்பிரிவு 103-இன் உட்பிரிவு (1) கீழாக குழு (அ) குழுமத்தால் ஏதேனுமொரு விசாரணை, மேல்முறையீடு, அல்லது சீராய்வில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை;

(LV) சட்டப்பிரிவு 105-இன் உட்பிரிவு (3)-இன் கீழாக இளைஞர் நீதி நிதியம் நிர்வகிக்கப்படும் வழிமுறை;

(LVI) சட்டப்பிரிவு 106-இன் கீழாக மாநில குழந்தை பாதுகாப்பு சங்கம், மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகின் செயற்பாடு;

(LVII) சட்டப்பிரிவு 109-இன் உட்பிரிவு (1)-இன் கீழாக, இச்சட்டத்தின் வகையங்களின் செயலாக்க நிறைவேற்றுகையை, நேர்விற்கேற்ப தேசிய ஆணையம் அல்லது மாநில ஆணையத்தைக் கண்காணிப்பதற்கு இயல்வித்தல்;

(LVIII) தேவைப்படும் அல்லது வகுக்கப்படலாமென்றவாறு ஏதேனுமொரு மற்றைய பொருட்பாடு;

(3) இச்சட்டத்தின் கீழாக இயற்றப்பட்ட ஒவ்வொரு, விதியும், ஒழுங்குமுறையும், அது இயற்றப்பட்டவுடன், விரைவில் சாத்தியமாகின்ற அளவில், நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும், ஒரு கூட்டத்தொடர் அளவிலான அமர்வில் அல்லது

இரண்டில் அல்லது அதற்கு அடுத்தடுத்த தொடர் அமர்வுகளில் முப்பது நாட்களுக்கான ஒரு மொத்த கால அளவிற்குள்ளாக, அது அமர்வில் உள்ளபோது, விவாதத்திற்கு வைக்கப்பட்டு, முன்னர் சொல்லப்பட்ட உடனடியாகத் தொடரும் அமர்வு அல்லது அடுத்தடுத்த அமர்வுகள் முடிவுறுவதற்கு முன்னதாக, இரு அவைகளும் விதி அல்லது ஒழுங்குமுறையில் ஏதேனுமொரு திருத்தம் செய்வதில் ஒத்திசைவு ஏற்பட்டால் அல்லது இரு அவைகளும் அந்த விதி அல்லது ஒழுங்கு முறை அத்தகைய திருத்தப்பட்ட வடிவில் மட்டும் செயற்பாடு அமைந்திட வேண்டும் அல்லது அத்தகையத் தாக்கத்தைக் கொண்டிருக்காமல், அது எதுவாகவிருப்பினும் இருக்க வேண்டும். மேலும் அத்தகையத் திருத்தம் அல்லது நீக்கம், அத்தகைய விதி அல்லது ஒழுங்குமுறையின் கீழாக முன்னதாகச் செய்யப்பட்டு, ஏதேனுமொன்றின் செல்லுந்தன்மைக்குப் பாதிப்பை விளைவித்தல் கூடாது.

(4) இந்த சட்டத்தின் கீழாக மாநில அரசால் இயற்றப்பட்ட ஒவ்வொரு விதியும் அது இயற்றப்பட்ட பின்பு, விரைந்து சாத்தியமாகும் அளவில், மாநில அரசின் சட்டப்பேரவைக்கு முன்பாக, விவாதத்திற்காகத் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

**பிரிவு - 111**

**சட்டநீத்தறவும், காப்புரையும் :**

(1) இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 (56/2000) இதன் மூலம் நீத்தறவு செய்யப்படுகிறது.

(2) மேற்கூறப்பட்ட சட்டங்களின் கீழாக செய்யப்பட்ட எதுவும், அத்தகைய நீக்கப்படுதலைக் கருத்திலிருத்தாமல் எடுக்கப்பட்ட எதுவும் சட்டத்தின் வகையங்களுடன் தொடர்பாக அடியொற்றிச் செய்யப்பட்டது அல்லது / எடுக்கப்பட்டதாகக் கருதலாகும்.

**பிரிவு - 112**

**தடை இடர்களை நீக்கும் அதிகாரம் :**

(1) இச்சட்டத்தின் வகையங்களின் விளைபயனாக ஏதாவது தடை இடர்கள் எழ நேர்ந்தால், நடுவணரசு இச்சட்டத்தின் வகையங்களுக்கு முரணின்றி அந்த தடை இடரை அகற்றலாம்.

**வரம்புரையாக :**

இச்சட்டத்தின் செயலாக்கத் தொடக்கத்திலிருந்து ஈராண்டு காலம் நிறைவெய்திய பின்னர் அத்தகையதொரு ஆணையை பிறப்பித்தல் ஆகாது.

(2) ஆயினும் இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட ஆணையை, அது இயற்றப்பட்ட பின்பு விரைவில் சாத்தியமாகும் அளவில், நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் தாக்கல் செய்தாக வேண்டும்.

| அருஞ்சொல் (ஆங்கிலத்தில்) | சொற்பொருள் (தமிழாக்கத்தில்) |
|---|---|
| Substance | மூலப்பொருள், கருப்பொருள் |
| Abandoned | கைவிடப்பட்ட |
| Abduct | பலவந்தமாகக் கடத்து |
| Ability | திறப்பாடு, திறமை |
| Abuse | முறைகேடாக பயன்படுத்து, தவறாகப் பயன்படுத்து |
| Access | அணுகும்முறை, நுழைவுரிமை |
| Accidental | தற்செயலான |
| Accompany | உடன் செல் |
| Accountability | பொறுப்பாதல் |
| Accusatory | குற்றம் சுமத்தும் |
| Activity | செயல் நடவடிக்கை |
| Actual | மெய்யான |
| Address | அறிவி, முகவரி |
| Administrator | செயலாட்சியர், நிருவாகி |
| Admission | சேர்க்கை, ஏற்றுக் கொள்ளுதல் |
| Adoption | மகவேற்பு, குழந்தை தத்தெடுப்பு |
| Adverse | எதிரான |
| Adversory | எதிர்நிலையில் குற்றம் சாட்டும்படியாக |
| Affidavit | ஆணைமொழி ஆவணம் |
| After care home | பிற்காப்பில்லம், இளைஞர் பிற்காப்பில்லம் |
| Agency | முகமை, முகவாண்மை |
| Aggrieved | குறையுற்ற |
| Alleged | சாட்டுரைக்கப்பட்ட |
| Alternative Therapy | பிணிநீக்க மாற்று சிகிச்சை |
| Ampulate | வெட்டி எடு, துண்டாக்கு |
| Ancestors | மூதாதையர், முன்னோர் |
| Antecedents | முன் வரலாற்று நிகழ்வுகள் |
| Apparently | வெளிப்படையாக |
| Appear | வெளிப்படையாகப் புலப்படு, தோற்றமளி, முன்னிலை ஆகு |
| Appliances | துணைக்கருவி, சாதனம் |
| Application | பொருந்துகை |
| Apprehend | கைப்பற்று |
| Appropriate | தக்கதான, உரிய |
| Appropriation | உரிய நிலை ஒதுக்கீடு |

| | |
|---|---|
| Approval | ஒப்புறுதி |
| Armed conflict | படைக்கலக்கலகம், ஆயுதக்கலவரம் |
| Article | உறுப்பு |
| As the case may be | நேர்விற்கேற்ப |
| As well as | அத்துடன் |
| Ascertain | உறுதிப்படுத்து |
| Assent | இசைவளிப்பு |
| Assign | குறித்தளி, வகுத்தமை |
| Attachment | பற்றுகை |
| Attendance | வருகை |
| Authorise | அதிகார உரிமை அளி, அதிகாரம் அளி |
| Authority | அதிகார மையம், அதிகார அமைப்பு, அதிகார ஆயம் |
| Behaviour Modification | நடத்தை மாற்றமைவு |
| Best Interest | உயர் நலப்பற்று, தேர்ந்த உயர் நலப்பற்று |
| Bias | மனச்சாய்வு |
| Bill | சட்ட முன்வரைவு, சட்ட முன்வடிவு |
| Body | அமைப்பு |
| Calculate | கணக்கீடு |
| Calling | வாழ்க்கைத் தொழில் |
| Capacity | கொள்திறம், தகுதிறம், இடவசதி |
| Care | பராமரிப்பு |
| Carry out | நிறைவேற்று, செயற்படுத்து |
| Case | வழக்கு, நேர்வு |
| Categories | வகைப்பாட்டினங்கள் |
| Central Government | நடுவணரசு, மைய அரசு |
| Chairman | தலைமையர், தலைவர் |
| Children | குழந்தைகள், சிறார் |
| Civil unrest | உள்நாட்டுக்கலகம் |
| Claim | உரிமை கோரிக்கை, உரிமை கோரு |
| Clarify | தெளிவுபடுத்து |
| Clause | கூறு, பிரிவுக்கூறு |
| Clerical Error | எழுத்துப் பிழை, எழுத்தர் பிழை |
| Closed | முடிவுறுத்தப்பட்ட |
| Co-Operation<br>Cognizace | கூட்டுறவு<br>கைது செய்யக்கூடிய |
| Community Service | சமுதாயப்பணி |
| Complaint | குற்றம் காணும் முறையீடு, குற்றமுறையீடு |
| Compliance | உடன்படுதல், இணக்கம் |

| | |
|---|---|
| Comply | நிறைவேற்று, இணங்கு |
| Comprehension | புரிந்துகொள்ளும் திறம் |
| Comprised | உள்ளடக்கிய |
| Compute | கணக்கீடு |
| Concern | அக்கறை, தொடர்பு |
| Conduct | நடத்தை, ஒழுகலாறு |
| Consideration | ஓர்வு (பரிசீலனை) |
| Consistent | விடாது, தொடர்ந்து |
| Construe | கொள்ளப்படும் |
| Context | சூழமைவு, தறுவாய் |
| Contravention | மீறுகை |
| Control | கட்டுப்படுத்து, ஆளுகை |
| Convention | பேராண்மை பேரவை உடன்படிக்கை, எழுதாச்சட்டம் (சாசனம்) |
| Convict | தீர்வுக்குற்றவாளி, குற்றச்செயல் புரிந்தவர் எனத் தீர்வு செய்யப்பட்டவர் |
| Conviction | குற்றத்தீர்ப்பு, தண்டனைத் தீர்ப்பு |
| Corporal | உடல்சார்ந்த |
| Counselling | உளவியல் ஆற்றுப்படுத்துதல் |
| Counsellor | உளவியல் ஆற்றுப்படுத்துநர் |
| Counter | எதிரிடையாக |
| Course | போக்கு, நடவடிக்கை |
| Credential | நம்புதற்குரிய ஆதாரச் சான்றுறுதி |
| Cross check | நுண்ணிய மறுசரிபார்ப்பு |
| Current | நடப்பில் |
| Custody | காவலில் நிறுத்திவைத்தல் |
| Deal with | நடவடிக்கை மேற்கொள் |
| Debar | தடு |
| Declaration | விளம்புகை, அறிவிக்கை |
| Deed | விருப்ப ஆவணம், பத்திரம் |
| Deemed | கருதப்பெறும் |
| Default | தவறுகை, செய்தக்க செய்யாமை |
| Deliberate | வேண்டுமென்றே செய்யப்படும் |
| Delinquent | நெறிபிறழ்ந்தவர் |
| Designated Court | குறித்தமர்வு நீதிமன்றம் |
| Detain | தடுத்து நிறுத்திவை |
| Develop | மேம்படுத்து |
| Development | வளர்ச்சி, மேம்பாடு |

| | |
|---|---|
| Difficulty | இடர்ப்பாடு, தடை இடர் |
| Disability | உடல்திறனற்ற தடைநிலை, செயலிழக்கக் குறைபாடு |
| Discharge | விடுவி, பொறுப்பை நிறைவேற்று |
| Discipline | ஒழுங்குமுறைக் கட்டுப்பாடு |
| Disclosure | வெளிப்படுத்துதல் |
| Discrimination | வேறுபாடு எதிர்உணர்வு |
| Dismiss | வழக்கில் தள்ளுபடி செய்து அகற்றப்படு |
| Dispense | தவிர் |
| Disposal | தீர்வு |
| Disqualification | தகவின்மை, தகுதிப்பாடின்மை |
| Diversion | மாற்றுத் திசையாக்கம் |
| Earning | ஈட்டியபொருள் |
| Eke out | உழைப்பால் வாழ்க்கை தேடு |
| Emergency | அவசரகாலம், அவசர நிலைக்காலம் |
| Emigration | குடிப்பெயர்ச்சி |
| Enabling | இயல்விக்கும் |
| Enact | சட்டமாக இயற்று |
| Ensure | உறுதிப்படுத்து |
| Entertainment | ஏற்றுக்கொள்ளுதல், கேளிக்கை |
| Entity | உட்பொருள் |
| Entrust | பொறுப்பை ஒப்படை |
| Erase | அழி |
| Escort | வழித்துணையாகச்செல் |
| Establish | தோற்றுவி, நிறுவு |
| Ethnicity | இனம் |
| Evaluate | கணித்து மதிப்பீடு செய் |
| Evaluation | கணிப்பாய்வு, கண்காணிப்பு |
| Event | நிகழ்வு |
| Eventual | குறிப்பிட்ட சூழலில் மேல்நிகழும் |
| Evident | முடிவு செய்யும் விளைவாக |
| Evident | தெளிவான |
| Exclusive | முழுமையான, தனி நிலையான |
| Execution | நிறைவேற்றுதல் |
| Exercise | பயிற்சி மேற்கொள், கையாளு, நடைமுறைப்படுத்து, செயற்படுத்து |
| Existing | தற்போதுள்ள, நிகழ் நிலையில் |
| Expedient | உகந்த |
| Experience | பட்டறிவு (அனுபவம்) |

| | |
|---|---|
| Expert | தொழில்முறை விற்பன்னர் |
| Express | தெரியப்படுத்து, வெளிப்படையாக |
| Expression | சொற்றொடர், சொல்லமைப்பு |
| Expressly | தெரிநிலையாக, வெளிப்படையாக |
| Fact | பொருண்மை |
| Fair | நேரிய, நேர்மையான |
| Faulty | தவறிழை |
| Findings | கண்டறிந்தவை |
| Fine | தண்டத்தொகை (அபராதம்) |
| Fit Facility | தகுநிலை வசதியகம் |
| Fit Person | தக்கார் |
| Flout | எளிதாகப்புறக்கணி |
| Follow up | பின்தொடர் நடவடிக்கை |
| Forefeiture | உரிமை இழப்பு |
| Foregoing | முன்சொல்லப்பட்ட |
| Foster | அரவணைத்து வளர், பேணு |
| Foster care | வளர்ப்பு பேணுகை |
| Framing | வனைதல், இயற்றுதல் |
| Frequently | அடுத்தடுத்து |
| Function | செயற்பாடு, செய்கடமை |
| Functionary | பதவி நிலை செயற்பாட்டாளர் |
| Furnish | அளி, அனுப்பு |
| Gains | வருவாய் ஈட்டுதல் |
| Gang | கூட்டுக்கும்பல் |
| Good Faith | நல்லெண்ணம், நன்னம்பிக்கை |
| Grant | மானியம், அரசு நிதிஉதவி |
| Harm | தீங்கு |
| Headquarters | தலைமைப் பணியிடம், தலைமை அலவலகம் |
| Heinous | கொடிய, கொடூரமான |
| Highlights | சிறப்புக்கூறுகள் |
| However | ஆயினும், எவ்வகையிலேனும் |
| Identity | அடையாளம் காணுதல் |
| Immediate | உடனடியாக, நேர்வதாக அச்சுறுத்தும் |
| Impart | புகட்டு |
| Implementation | நிறைவேற்றல், செயற்பாடு, செயற்படுத்துதல், செயலாக்க நிறைவேற்றுகை |
| Impose | சுமத்து |
| In accordance with | இணங்க |

| | |
|---|---|
| In camera | தனி அறையில், மறைவாக, மறைவரங்கில் |
| In force | நடப்பில் |
| In particular | குறிப்பாக |
| Incidental | இடை விளைவான, இடைநிகழ்வான |
| Incidents | நிகழ்வுகள் (சம்பவங்கள்) |
| Independent | தற்சார்பான, தன்னிச்சையான (சுதந்திரமான) |
| Induct | வேலையில் அமர்த்து |
| Infliction | தண்டிப்பை கட்டாயமாக ஏற்குமாறு செய்தல் |
| Informal | முறைசாரா |
| Infrastructure | உள்கட்டமைப்பு |
| Initiate | முன்னெடு |
| Innocent | குற்றமற்ற, மாசற்ற |
| Instructions | அறிவுறுத்துக் கட்டளைகள் |
| Instruments | (ஒப்பந்த) முறைசெய் ஆவணங்கள் |
| Intent | உட்கருத்து, உள்நோக்கம் |
| Inter alia | பிறவற்றிற்கிடையே, மற்றவற்றிற்கிடையே |
| International Instruments | பன்னாட்டு முறைசெய் ஆவணங்கள் |
| Interpretor | பொருள்கோள் விளக்குநர் |
| Intimidation | அச்சுறுத்தல் |
| Introduction | தோற்றுவாய் (முன்னுரை) (முகவுரை) |
| Issue | எழுவினா |
| Itself | தாமே, அதுகாகவே |
| Judicial capacity | நீதிமுறைத் தகவுடைமை |
| Juvenile | இளைஞர், இளையோர் |
| Kidnap | சட்டத்திற்குப்புறம்பாக தூக்கிச் செல், கடத்து |
| Laid down | விதிக்கப்பட்ட |
| Legislation | இயற்றுசட்டம் |
| Liable | உட்பட்டு |
| Life | உயிர், வாழ்க்கை |
| Limb | உடலுறுப்பு |
| Limit | வரம்பு, அளவு |
| Lineal | நேர்மரபுவழி சார்ந்த |
| Linkage | தொடர்பகம் |
| Locality | வட்டாரம் |
| Magazine | காலமுறை இதழ் (பருவ இதழ்) |
| Maim | ஊனமாக்கு, முடமாக்கு |
| Mainstream | சமூக பண்பாடு நீரோட்டம், சமூக மைய நீரோட்டம் |
| Maintain | பேணு |

| | |
|---|---|
| Malafide | தீய எண்ணத்துடன் |
| Maltreatment | தவறாக நடத்துதல் |
| Mandatory | நீதி சார்ந்த உரிமைக் கட்டளை, கட்டாயமாக |
| Measures | நடவடிக்கைகள் |
| Mechanism | செயலாக்க முறை, இயக்க முறை, செயலியக்க முறை |
| Medical Practitioner | மருத்துவ தொழிலாற்றுநர் |
| Mental illness | மனப்பிணி |
| Mentally retarded | மனவளர்ச்சி குன்றிய |
| Minor | இளவர் |
| Monitor | நெறிப்படுத்து, கண்காணி |
| Moral Turptitude | இழுக்கம், தீயொழுக்கம், இழிநடத்தை |
| Mutatis Mutandis | தேவையான மாற்றங்களுடன், தேவையான மாறுதலுடன் |
| Natural Justice | இயற்கை அறநெறிச் சட்டம் |
| Nature | தன்மை |
| Neglected | புறக்கணிக்கப்பட்ட |
| No objection certificate | தடையிலாச் சான்று (மறுப்பின்மை சான்று) |
| Nomination | பெயர் நியமனம் |
| Non-compliance | செய்யாமை, நிறைவேற்றாமை |
| Non-state | அரசு அல்லாத |
| Notes | குறிப்புரை |
| Notwithstanding | இருப்பினும், எவ்வாறு இருப்பினும் |
| Numerous | அதிக எண்ணிக்கையிலான |
| Nursing Home | தனியார் மருத்துவமனை |
| Nurture | ஆதரவான வளர்ப்பு |
| Objectives | குறிக்கோள்கள் |
| Obligation | கடப்பாடு, கடமைப் பொறுப்பு |
| Observation Home | கூர்நோக்கில்லம், சிறார் கூர்நோக்கில்லம் |
| Omission | விடுகை, விடுபடுதல் |
| Ostensible means of Subsistence | வெளிப்படையான வாழ்நிலை |
| Otherwise | பிறவாறாக, மற்றபடி |
| Panel | தேர்ந்த பெயர்ப்பட்டியல் |
| Passport | பயணகடவுச் சீட்டு |
| Payable | செலுத்தத்தக்க |
| Peddler | இடம் விட்டு இடமேகி |
| Penal law | தண்டனைச் சட்டம் |
| Pending case | (விசாரணை) முடிவுறா வழக்கு |
| Perform | நிறைவேற்று, செயலாற்று |

| | |
|---|---|
| Periodical | காலமுறையான |
| Persistent | தொடர்ந்து நீடித்து, விடாப்பிடியான, விடாது தொடர்ந்து |
| Personalised | தனித்தன்மையாக அமை, தனித்துவமாக அமை |
| Place of Safety | பாதுகாப்பு அமைவிடம் |
| Placement | வைப்பிடம் |
| Portal | வலைத்தளம் |
| Positive Measures | நேர்மறை உறுதி நடவடிக்கை |
| Potential | உள்ளுறைதிறன் |
| Power | செயலாட்சி உரிமை (அதிகாரம்) |
| Preferable | முன்னுரிமைக்குரிய |
| Prejudice | முன்முடிவு எதிர்சார்பு, ஊறு, ஊறுபாடு, தீங்கு, சார்பானதப்பெண்ணம், குந்தகம் |
| Prejudiced | ஊறு விளைவிக்கத்தக்கதாக |
| Presumption | ஊகம் (அனுமானம்), துணிபு |
| Prevail | மேலோங்கி நிற்றல் |
| Primary | முதன்மையான, தலையாய |
| Principle | கொள்கை, கோட்பாடு |
| Priority | முதன்மை |
| Procedure | செயற்படுமுறை, (வழக்கு) நடைமுறை |
| Proceed | நடவடிக்கை |
| Proceeding | (வழக்கு) நடவடிக்கை |
| Process | (நீதிமுறைக்) கட்டளை, செய்முறை, நெறிமுறை, வழக்கு நடவடிக்கை, நிர்வாகச் செயல்முறை |
| Procurement | முயன்று பெறுதல் |
| Professional | தொழில் முறையில் |
| Programme | செயற்திட்டம் |
| Prolonged | நெடுநாளைய, நெடிய |
| Promote | மேம்படுத்து, ஊக்கமளி |
| Proof | சான்று, மெய்ப்பிப்பு |
| Propose | கருத்துரு வை |
| Prospective | வரும் நாளில் எதிர்நோக்கிய (உத்தேசமான) |
| Protection | பாதுகாப்பு |
| Provided | வரம்புரையாக, இருப்பினும் |
| Provision | வகையம் |
| Psychiatrist | உளவியல் மருத்துவர் |
| Purview | செயல் நோக்கெல்லை |
| Ratify | பின்னேற்பு செய் |

| | |
|---|---|
| Reasonable | வாதத்திற்கு ஒத்த, நியாயமான, தகவான |
| Referred | மேற்சுட்டியவாறு |
| Reform | சீரான திருத்தம் செய் |
| Regular | முறையான |
| Regulation | ஒழுங்குமுறை |
| Rehabilitation | மறுவாழ்வு, மறுசீராக்கம் (புனர் வாழ்வு) |
| Reinforce | வலுவூட்டு |
| Relief | இடருதவி, தீர்வழி |
| Remedy | தீர்வழி |
| Render | அளி, ஆக்கிக்கொள் |
| Renewal | புதுப்பித்தல் |
| Repeal | நீத்தறவு, நீக்கம் |
| Report | தெரியப்படுத்து, அறிவி, தெரிவி |
| Representative | சார்பாளர் (பிரதிநிதி) |
| Reside | நிலையாகத் தங்கியிரு |
| Resource | வளஆதாரம், மீட்டளிப்பு |
| Restoration | மீட்டமைப்பு, மீட்டளிப்பு |
| Retribution | பழிவாங்கும் எதிர்ச்செயல் |
| Reverse | பின்னடைவு |
| Review | மறு ஆய்வு, மீளாய்வு |
| Rigorous Imprisonment | கடுங்காவல் தண்டனை |
| Risk | இன்னல், இடர்ப்பாடு, இடர் காப்பின்மை, துணிவுடன் பொறுப்பேற்றுக் கொள்ளுதல் |
| Role | பங்கு |
| Save | அல்லாத, அல்லாமல் |
| Save as otherwise expressly provided by this act | இச்சட்டத்தில் வெளிப்படையாக பிறவாறாக வழிவகை செய்யப்பட்டிருந்தாலன்றி |
| Save as otherwise provised | பிறவாறாக வகை செய்யப்பட்டாலன்றி |
| Scheme | செயற்திட்டம் |
| Security | பிணையம் |
| Seek | முற்படு, விழை, நாடு |
| Selection | தெரிவு செய்தல், தேர்ந்தெடுத்தல் |
| Self Styled | தனிப்பாணியில் அமைந்த |
| Semantics | மொழியின் சொற்பொருளாய்வு |
| Serial | வரிசை எண், தொடர் எண் |
| Session | கூட்டத்தொடர் |
| Set | நிறுவு, ஏற்பாடு செய், தொகுதியான, செப்பம் செய்த |
| Set Up | நிறுவுதல் |

| | |
|---|---|
| Siblings | உடன்பிறந்தோர் |
| Simultaneously | உடன் நிகழ்கின்ற |
| Single Member | தனித்தமர் உறுப்பினர் |
| Slip | தவறு |
| Smuggle | கள்ளக்கடத்தல் செய், கள்ளக்கடத்தல் |
| Social Worker | சமூகத் தொண்டர், சமூகப் பணியாளர் |
| Solemnisation | முறைப்படி சடங்காசாரத்துடன் செய்து வைத்தல் |
| Solution | தீர்வான முடிவு |
| Sponsorship | ஏற்பாதரவுத் திட்டம் |
| Spouse | கணவன் (அ) மனைவி |
| Statement | விவர அறிக்கை, வாக்குமூலம் |
| Statue | இயற்று சட்டம் |
| Status | தகுநிலை |
| Stigma | சமூப்பழி, சமூகக்கறை, சமூகக்களங்கம் |
| Subject to | உட்படுத்து, உள்ளாக்கு, உட்பட்டு |
| Subscription | உறுப்பினர் காலமுறைக் கட்டணம் |
| Subsistance | பிழைப்பூதியம் |
| Subsequently | பிந்தைய, தொடர்ந்து |
| Such | அத்தகைய |
| Summary trial | சுருக்கமுறை விசாரணை |
| Sums | தொகை |
| Suo motu | தாமே முற்பட்டு, தாமாகவே, தாமாகேவ இயங்கும் முறையில் |
| Supplementary | இணை கூட்டான |
| Support | ஆதரவு |
| Task | கடமைப் பொறுப்பு |
| Temporary | அப்போதைக்கான, சிறிது காலத்திற்கான, சிறுமக்கால அளவில் |
| Tenet | தத்துவக்கூறு, கொள்கை நெறி |
| Term | சொற்கூறு, சொற்றொடர், காலவரம்பு, காலவரையறை |
| Term of office | பதவி வரையறைக்காலம் |
| Terms and conditions | வரையறைகளும் வரைக்கட்டுகளும் (நிபந்தனைகளும்) |
| Thereby | அதனால் |
| Therein | அதில் |
| Thereon | அதனின் தொடர்ந்து, அதன் பேரில் |
| Thereto | அதனுடன், மேற்கொண்டு |
| Thereupon | அதன் மீது |
| Ties | பந்தமுடிச்சு |

| | |
|---|---|
| Torture | படுவேதனை (சித்ரவதை) |
| Trade | வாழ்க்கைத் தொழில் |
| Trafficking | இழிதொழில், இழிதொழில் வணிகம் |
| Transaction | தொழில் மேற்கொள், நடவடிக்கை |
| Translator | மொழிபெயர்ப்பாளர் |
| Types | தரவாரியான பிரிவு |
| Undertake | பொறுப்பேற்றுச் செய் |
| Union Territory | ஒன்றியத்து ஆட்சி மண்டலம் |
| Unless the context otherwise requires | சூழமைவுக்கேற்ப, வேறுபொருள் மற்றபடி குறித்தாலன்றி |
| Unsound mind | திடமனமற்ற, பித்துநிலை |
| Upload | பதிவேற்றம் செய் |
| Valid | சட்டப்படி செல்லத்தக்க |
| Vend | (பொருள்) விற்றல் |
| Verification | மெய்சாற்று, சரிபார்ப்பு |
| Vested | அதிகாரம் அளிக்கப் பெற்ற |
| Visa | அயல்நாட்டு நுழைவுரிமைச் சீட்டு |
| Voluntary | தன்னார்வமான |
| Voucher | செலவின பற்றுச்சீட்டு |
| Waiver | உரிமையை விட்டுகொடு, உரிமை தளர்த்திடு |
| Wean away | பழக்கத் தொடர்பற்றவராக்கு பால்குடி மறக்கச் செய் |
| Whereas | அவ்வாறு இருப்பதால், ஆயின் |
| Wholesome | முழுமையாக, ஒட்டுமொத்தமாக |
| Wide | பரந்தகன்ற |
| Notwithstanding anything contained in any other law | வேறு எந்தச் சட்டத்திலும் எது எவ்வாறிருப்பினும் |
| Notwithstanding anything contained in any other law for the time being inforce | அப்போதைக்கு செயலாக்கத்தில் உள்ள வேறு எந்தச் சட்டத்திலும் எது எவ்வாறிருப்பினும் |
| Notwithstanding anything to the contrary contained in this act | இந்த சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் மாறாக இருப்பினும் |
| Save otherwise expressly provided | இச்சட்டத்தில் பிறவாறு தெரிநிலையாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி |